உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியரத்தினச்சுருக்கம் ௩௱௬௰

இஃது,

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

—*—

புரசைபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்கள் குமாரர்

இராகவப்பிள்ளை அவர்களது

விவேக விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவரருளிய

# வயித்தியரத்தினச்சுருக்கத்து

## மருந்தின் தலைப்புகளின்-அகராதி.


| பக்கம். | பெயர். | பாடற்.றொகை |
|---|---|---|
| உக | அக்கினிசூரணம் | சஉரு |
| உஉ | அசுவகெந்திச்சூரணம் | கஉகூ |
| உரு | அசுவகெந்தி பலராட்சதத்தையிலம் | கருக |
| சஎ | அப்பிரோகசெந்தூரம் | உஅஉ |
| சச | அயக்காந்தச்செதூரம் | உஉசு |
| ய | அர்த்தனாரீஸ்வரம் | கூய |
| சங | ஆக்கிராணநசியம் | உஉரு |
| ஙக | ஆதண்டத்தைலம் | கஅஎ |
| எ | இதுவுமொருவகை | சக |
| கூ | இரசச்சிந்தாமணி | ருய |
| சஅ | இரசபற்பம் | உஅகூ |
| சு | இரசானந்தவைரவம் | ஙரு |
| உரு | எலாதிச்சூரணம் | கசகூ |
| ஙஎ | கண்த்தெண்ணெய் | உஉங |
| கங | கண்டாத்திரிலேகியம் | எங |
| கச | கண்டங்கத்திரிலேகியம் | அய |
| கஎ | கண்டங்கத்திரிலேகியம் | க0ங |
| ஙஎ | கண்டங்கத்திரிகிருத | உககூ |
| உஉ | கண்டாத்திரிசூரணம் | கஙக |
| எங | கண்டாவிழ்தம் | உருஎ |
| ச | கபடமாத்திரை | சங |
| ய | கபாடலேகியம் | க0அ |
| ஙஅ | கரப்பானெண்ணெய் | உஉஎ |
| கக | கரிசாலைஇலேகியம் | சுஎ |
| ய | கலிங்காதியெண்ணெய் | உசக |
| ருச | கன்னி பதின்மூன்றுக்கும் பெயர் | ஙஉஎ |
| ருஅ | காரீயச்செந்தூரம் | ஙருச |
| ருசு | காளகண்டமேக நாராயணசெந்தூரம் | ஙசய |
| ஙக | கீழ்க்காய்நெல்லித்தைலம் | கஅய |
| உஎ | குமரித்தைலம் | ககூக |
| கசு | கூழ்பாண்டகிருதம் | கூச |
| ஙரு | கூழ்பாண்டகிருதம் | உகக |
| ருரு | கெந்திசெந்தூரம் | ஙஙய |
| உஅ | கொம்பரக்குதைலம் | கசுரு |
| ய | கோரோசினைக்குளிகை | ருரு |
| உச | சஞ்சீவுசூரணம் | கசரு |
| உகூ | சந்தனாதித்தைலம் | கஎங |
| கசு | சரபங்கவில்வாதிலேகியம் | கூஎ |
| உய | சவுபாக்கியசுண்டி | ககசு |
| ரு | சித்தாநந்தவைரம | ஙங |
| கக | சிலோதாரிமணி | சுச |
| கச | சிந்தாதிலேகியம் | அங |
| சஉ | சுகசீதபேதியெண் | உசகூ |
| எ | சுயமக்கினி | ஙஅ |

| பக்கம். | பெயர். | பாடற் றொகை |
|---|---|---|
| சங | சூரணங்களின்சுத்தி | உருசு |
| சச | செந்தூரவைப்புக் குக்குரு | உசுக |
| ருச | சேத்துமசுரக்கியாழம் | ஙஉச |
| ருக | தங்கபற்பம் | ங()ச |
| ருய | தாம்பிரபற்பம் | ஙா |
| சகூ | தாளசற்பம் | உகூஉ |
| உஉ | தாளிசப்பத்திரிசூரணம் | கஙச |
| ககூ | திப்பிலிரசாயனம் | ககஉ |
| உக | திரிராட்சதசூரணம் | கஉக |
| சரு | திரிலோகச்செந்தூர | உஎக |
| சஅ | துருசுகுரு | உஅஅ |
| ஙசு | தூதுளைக்கிருதம் | உகரு |
| ருசு | தோஷமேழுக்கும் பெயர் | ஙஉஅ |
| ரு | ஸ்திரீபுருஷர்களுக்குநாடிபார்க்கும்வகை | ஙக |
| சங | நசியம் | உருக |
| சகூ | நாகபற்பம் | உகூஎ |
| க | நாடிநிதானம் | ச |
| ங | நாடிபார்க்குங்காலம் | கங |
| ,, | நாடிஇலக்கணம் | கச |
| ரு | நாடிபாற்க்கும்மார்தவகை | க |
| ஙங | நிலப்பனைக்கிருதம் | கசுசு |
| உங | நிலவாகைச்சூரணம் | கஙகூ |
| சங | பஞ்சதீபாக்கிஇலேகியம் | எஎ |
| உங | பஞ்சதீபாக்கினிசூரண | ககூஎ |
| சரு | பஞ்சலோகசெந்தூரம் | உஎரு |
| ஙஉ | பதின்மூன்றுசன்னிக்குத்தைலம் | ககூசு |
| ருஉ | பவளபற்பம் | ஙகங |

| பக்கம். | பெயர். | பாடற் றொகை |
|---|---|---|
| சஉ | பழத்தெண்ணெய் | உசூஉ |
| ருங | பித்தசுரக்கியாழம் | ஙஉய |
| ஙச | புளியாரைக்கிருதம் | உகச |
| அ | பூமதிகுளிகை | சரு |
| ய | பூமணிக்குளிகை | ருஅ |
| ருகூ | பூரணச்சந்திரோதயம் | ஙருஎ |
| ஙக | பொன்னுங்காணித்தை | கஅங |
| சகூ | பொன்னுங்கரணிக் கிருகம் | உாக |
| ரு | மகாவில்வாதிலேகியம் | அஅ |
| உசு | மண்டூரச்செந்தூரம் | உஎஅ |
| ககூ | மஸ்துமிரசாயனம் | ககச |
| ஙஅ | மாந்தயெண்ணெய் | உஙய |
| ஙஅ | மிருகாமத்தைலம் | கசுகூ |
| ஙசு | மேகத்தெண்ணெய் | உஙஉ |
| ருஅ | ரசகற்பூரபற்பம் | ஙசகூ |
| ருஎ | ரசலோகசெந்தூரம் | ஙசரு |
| சச | லோகசெந்தூரம் | உசுஉ |
| சகூ | வங்கபற்பம் | உகூச |
| ச | வல்லாரைச்சூரணம் | கஙஉ |
| ஙரு | வல்லாரைக்கிருதம் | உகஎ |
| ருஉ | வாதசுரக்கியாழம் | ஙகசு |
| சக | வாதயெண்ணெய் | உஙசு |
| சு | வாதராட்சசன் | ஙசு |
| உசு | வில்வாதிதைலம் | கருஎ |
| ஙகூ | விழுதியெண்ணெய் | உஙசு |
| சஉ | வீரபத்திரகலிக்கம் | உருச |
| ருக | வெண்காரஞ்சிலர் சத்துகலைக்கொம்பு கல்நார்பற்பம் | கஙஅ |
| ருய | வெள்ளிபற்பம் | ஙசஉ |


—()—

அகராதி - முற்றிற்று.

வாதத்தில்வாதமாகில்வளர்ந்திடுமன்னம்போல
நீதுய்த்தவுடலினேர்ந்துநெகிழ்ச்சியாய்ச்சுருக்கும்வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனிபசனமுமற்பமாகும்
ஏதுற்றதனத்தின்மின்னேயெண்ணியேயறிந்துசொல்லே. ௪

வாதத்திற்பித்தமாகில்வாயதுகுழறிப்பேசும்
பேதித்துத்தலையிடித்துப்பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தாதுற்றபுத்திதானுந்தடைப்படுந்தடக்கண்மாதே
கோதுற்றவயிறவிம்மிக்குடறனைப்புரட்டுந்தேனே. ௫

வாதத்திற்சேத்துமமாகில்வலியொடுவீக்கமுண்டாம்
பேதித்துத்தலையிடித்துப்பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தீதுற்றமெய்வெளுத்துத்திடமுடனசனஞ்செல்லா
பேதித்துநாவும்பேசும்பெருகவேவீக்கமுண்டாம். ௬

பித்தத்திற்பித்தமாகிற்பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியுமதிகமாகுஞ்சரீரத்திலிளைப்புமுண்டாம்
அத்தியாயுலருமேனியாகமும்வேறதாகும்
வற்றியேவெளுத்துக்காயம்வரண்டுபின்வீக்கமுண்டாம். ௭

பித்தத்தில்வாதமாகிற்பிடரியுங்காலுங்கையுங்
குத்தத்துப்போலேயாகுங்குறுகிமெய்ப்பதறும்பின்னே
அத்தியாயுலருமேனிபாகருஞ்சுரத்தால்நோவாம்
புத்தியுமடியுமிக்கப்பொறுமைபோய்க்கோபமாமே. ௮

பித்தத்திற்சேத்துமமாகிற்பிதற்றுவாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுங்சானறியாமலோடும்
சுற்றிடும்பேய்கள்போலச்சுழற்றியேவயிற்றினோடும்
பித்தமுமெடுத்துக்கொட்டிப்பிடரியில்நோவதாமே. ௯

வாட்டிடுஞ்சேத்துமத்தில்வந்திடுவாதமாகில்
நாட்டியகால்கள்போலநரம்பெல்லாம்வலித்துநிற்கும்
கூட்டியபிடரிதானுங்குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழியுமெல்லாம்நாக்குவாய்குழறுந்தானே. ௰

சீர்பெறுசேத்மபித்தந்தின்பதுகசப்புண்டாகும்
பார்பெறுநாவுதன்னிற்பலவிதம்புளிப்பினிப்பாம்
சேர்பதுபேசுமாறுந்திடமில்லைகோழையாகும்
சார்பதுகண்ணும்பீளைசாரும்பின்சத்தம்வேறாம். ௰௧

சேத்துமத்திற்சேத்துமமாகிற்றிமிர்தமாயறிபுஞ்சொன்னோம்
ஆத்துமநல்லதல்லவழிவதுமெய்ரண்டாயே

கூற்றன்வந்திடுவதாகுங்குறுவிழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னேம்யாத்திரைநாடிதானே. க௨

நாடிபார்க்குங்காலம்.

காலமேசேத்துமநாடிகட்டுச்சிபித்தநாடி
மாலையில்வாதநாடிவகைதப்பிப்பதறிநின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லாமியம்பினூரிதுதானென்று
நாளஞ்சின்மரணமென்றுநன்முனியருளிச்செய்தார். கங

நாடி இலக்கணம்.

போற்றியநாடிதானும்போத்துபோற்புறந்துடித்தார்
சீற்றுவின்னுதலேமிக்கிஞ்சுகமானேகேளாய்
காத்திடுந்திங்களொன்றிற்கருதியேதீராவிட்டால்
மாற்றியமாதம்பத்தின்மரணமென்றுரைக்கலாமே. கச

குறித்திடுஞ்சேத்துமநாடிகுதிரைபோல்திமிர்ந்துநின்றால்
கறுத்திடுவிழியாய்நல்லகாரிகையாளேகேளாய்
மறுத்திவைபேசவேண்டாம்வயதிவைமுடிந்ததென்று
பொறுப்பிலலேதிங்களொன்றிற்புகன்றிடுமரணமாமே. கரு

ஆதித்தன்சந்திரன்போலந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகிற்பெருக்கவேகையினூடே
சோதித்துக்கண்டுநாடிசுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில்வாய்வுபீடைவந்துற்றுநிற்குந்தானே. கசு

கடிந்ததோர்நாடிதன்னைக்கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடிவிதறியேதொடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடிகட்டுச்சிதுடிக்குமாகில
மடிந்ததுவாதநாடிமாலையில்மரணந்தானே. கஎ

சேத்துமநாடிதானுந்தியங்கியமஞ்ஞைபோல
நாட்டியவட்டைபோலநடுங்கியேபதறிநின்றால்
கூட்டவேவேண்டாமேழுநாளினின்மரணங்கொள்ளும்
நாட்டமாய்முனிவர்சொன்னார்நயப்படக்குறித்துப்பாரே. கஅ

ஏற்றியதீபந்தன்னிலெரிசுடர்முனையைப்போலத்
தோற்றியநாடிதானுந்துயரநடக்குமாகில்
கூற்றனுக்கிடமுமில்லைகுறைபடாமருந்துசெய்யில்
மாற்றியவாளுடானும்வளர்ந்திடுந்திண்ணந்தானே. க௯

### வேறு.

கண்ணும்பல்லுந்தான்கருத்துக்கருதுமூச்சுவாய்திறந்து
உண்ணுவயிற்றிற்சேத்தமமுமோடிமிகவேதானடந்தாற்
பண்ணும்மருந்துபலியாதுபண்பாய்ச்சுவாசமேல்வாங்கு
மண்ணும்விண்ணுந்தானறியமரணமாவார்கண்டீரே. ௨௰

### வேறு.

இடைதொடைவார்பின்கீழேயெறிபடப்பதறியோடின்
முடிகிடவீங்குமாகின்மூவரிலொருவரோடில்
படரவேதாகமிஞ்சிப்பஞ்சிக்கண்ணும்வாயும்
அடரவிக்குணங்கள்கண்டாலறிந்துகொள்மரணமென்றே. ௨௧

### இஃதறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எடுக்கு படுக்கும்மெழுந்திருக்குமிளைத்தேமூச்சுதனைவாங்கும்
வடுக்கணைக்கவிழியிரண்டுமெலரவிழிக்கும்வழிபார்க்குந்
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந்தொண்டைதன்னையடைப்பிக்கு
மடுத்துவருவதிதுகண்டாலறிவீர்மரணநிச்சயமே. ௨௨

### இதுவும் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஊசிபோன்முகமுநீண்டுஉடம்பெலாநரம்புதோன்றிப்
பாசிபோற்கண்பஞ்சிட்டுப்பாந்திருண்மூடுமாகில்
பேசுநாவறண்டுபேசிப்பித்ததுபிதற்றுமாகில்
காசினியறியச்சொன்னேங்கண்டுகொள்மரணமென்றே ௨௩

நாடியான்முன்னோர்சொன்னநற்குறிக்குணங்களாலு
நீடியவிழியினாலுநின்றநாட்குறிப்பினாலும்
வாடியமேனியாலுமலரொடுநீரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச்சுகம்பெறவறிந்துசொல்லே. ௨௪

சுகம்பெறவங்கமெல்லாஞ்சுருங்கியகுணங்களாய்ந்து
முகக்குறிநாடிமூக்குச்செவிநுதனயனநாடி
அகந்துடியடக்குநாடியதுதிசைவிடுதிநாடி
உகந்துடியுந்திநாடியுண்மையாய்நடைகள்பாரே. ௨௫

பார்மனக்கவலையற்றுப்பலபலவிசாரம்விட்டுத்
தேர்மனந்தெளிந்துநீயுஞ்செய்குணவழியிதென்று
ஊரகமுந்திதன்னிலொளிபலவியாதிசெய்யும்
தீபனவுண்டியாலேசேர்ந்திடுநோய்கடானே. ௨௬

சொல்லியவுந்திதன்னிற்சுழித்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடியெழுபத்தீராயிரத்தில்
வல்லவர்புகலுநாடிபத்ததிலேழுநீக்கி
நல்லதோர்நாடிமூன்றுநயந்துநீயறிந்துபாரே. ௨௭

தான்மிகக்குளிர்ச்சிகொள்ளிறங்கியநாடிவாதம்
மீன்முகில்குழலாள்நெய்பாலிறைச்சிகளுண்டால்வாதம்
தீன்மிகவருபேகோழிதின்னவர்நாடிபித்தம்
வானநற்கனிகடன்னைவாங்கினல்வாதமாமே. ௨௮

வாதத்திலிளநீர்பின்னைவாங்கினனாடிவாதம்
போதவேகோபமுள்ளேபொருமினனாடிபித்தம்
கோதேசேர்குழலாள்தன்னைக்கூடினனாடிபித்தம்
தீதிலாமுனிவர்சொன்னார்திறமுடனறிந்துதானே ௨௯

ஸ்திரீ புருஷர்களுக்கு நாடிபார்க்கும்வகை.

தானெனவுலகத்துள்ளேதயங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாய்வரும்புனல்சொல்லக்கேளு
நானெனும்புருஷர்க்கெல்லாநாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந்திடம்பெறவிடக்கைசித்தே. ௩௰

நாடிபார்க்கும்மாதவரை.

சித்திரைவைகாசிக்குச்செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமர்மானியாடியைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்கமார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கில்விழுகின்றநேரந்தானே. ௩௧

தானதுபங்குனிக்குந்தனதுநல்லாவணிக்கும்
மானமாம்புரட்டாசிக்குமற்றைராத்திரியிற்பார்க்கத்
தேனென்றுமூன்றுநாடித்தெளிவாகக்காணுமென்று
தானமாமுனிவர்சொன்னகருத்தைநீகண்டுபாரே. ௩௨

நாடிநிதானம்-முற்றிற்று.

## சித்தாந்தவைரவம்.

இஃதெண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

பாரப்பாபுலத்தியனேசித்தானந்தம் பரிவானவைரவந்தான் சொல்லக்கேளு, சேரப்பாதிரிகடுகு * சிவப்புநாவி திறமான 0 வெரிச்சலொடு () பொரிச்சலேழும், நீரப்பாசமன்கூட்டிப் பழத்தின்சாற்றால் நிசமாக

* சிகப்பு-லிங்கம். 0 எரிச்சல்-பெருங்காயம்.
() பொரிச்சல்-வெண்காரம்.

நாற்சாமமறைத்துக்கொண்டு, தாரப்பாகுன்றிபோனிழலுலர்த்தத் தப்பாமற்செப்பில்வைத்துச் சொல்லக்கேளே. ௩௩

கேளப்பாவிஞ்சிநீருள்ளித்தயிலங் கெடியானமுலைப்பாலிற்கொடுத்தாயானால், நாளப்பாசன்னிவகை யெல்லாம்போகு நலமானதேன்கூட்டிக்கொடுத்தாயானால், சாளப்பாதோஷமென்ற தெல்லாம்போகுந் தப்பாதுகண்ணிலிட தீருந்தீரும், தேளப்பாரசானந்த வைரவந்தான் செப்புகிறேன் () சிவப்புநாற் * பொரிதானெட்டே. ௩௪

() சிவப்புநாற் * பொரி-வெண்காரம்

இரசானந்தவயிரம்

எட்டப்பாநாவியீராறுமாகு மிதமானதிப்பிலியும்பன்னிரண்டு தட்டப்பாவிஞ்சிரசந்தன்னாலாட்டித் தளமாகநாற்சாம மணாத்துக்கொண்டு, விட்டப்பாமிளகுபோனிழலுலத்தி விருதானசெப்பில்வைத்துச்சொல்லக்கேளு, அட்டப்பாவநுமானமறிந்துபோடு அப்பனேசன்னியென்றமூலம்போமே. ௩௫

வாதராக்ஷசன்.

போமப்பா வாதரக்ஷகனைக்கேளு புதுமையாம் * வேந்தனொடு () நாற்றங்காந்தனு, சேமப்பாவப்பிரகதாம்பிரபற்பம் திறமாகவஞ்சுவிதம்சமனாய்க்கூட்டிச், சாமப்பாவெள்ளைச்சாரணையின்சாற்றால் தளமாகநாற்சாமமணாத்தபின்பு, வேமப்பாசிந்தியிடகியாழந்தன்னில் வெகுசுறுக்காய்நாற்சாம மணாத்திடாயே. ௩௬

* வேந்தன்-ரசம் () நாற்றம்-கந்தகம்.

அணாத்திடுவாய்கொடிவேலிக்கியாழந்தன்னில் அருந்துளசிச்சாறு () திரிபலைக்கியாழம், அணாத்திடுவாய்வெவ்வேறேசாமம்ரண்டு அழகாகமொத்தையாயுருட்டிக்கொண்டு, அணாத்திடுவாய்சாரணையி னிலையணாத்து அன்பாகமருந்தையுள்ளேவைத்துமூடி, அணாத்திட்டவிலைகருகப் புடத்தைப்போட்டு ஆறினபின்னெடுத்ததனாலணாக்கக்கேளே. ௩௭

() திரிபலை-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்.

கேளப்பாசித்திரமூலத்தின்கியாழம் கிருபையாய்நாற்சாமமணாத்துக்கொண்டு, நாளப்பாமும்மூன்றுவராகன்வீதம் நலமாகவேயுருட்டிக்கட்டிக்கொண்டு, தாளப்பாநிழலுலர்த்திவைத்துக்கொண்டுதளமானசன்னி

வகைதேஷமெல்லாம், வேளப்பாவனுபானமறிந்துபோடு வெகுசுறுக்கா
ய்வாதமெல்லாம்விழலாய்ப்போமே. ௩௮

சுயமக்கினி.

போமப்பாசுயமக்னிசொல்லக்கேளு புகழானரசமூன்று ❀ நாற்ற
ம்ரண்டு, காமப்பாகாந்தசெந்தூரம்நாலுகலங்காதே ₀ சிலையிரண்டு *
சிவப்பிரண்டு, தாமப்பாவெழுகுபொடிதானென்று தவறுமல் [] குமரி
ச்சாறரைப்புக்கேளு, ஆமப்பாபட்சமொன்றுஅரைத்துருட்டுஅப்பனே
யிஞ்சிரசந்திரிகடுகுதுளே. ௩௯

❀ நாற்றம்-கந்தகம்.

₀ சிலை-மனோசிலை.

* சிவப்பி-லிங்கம்.

[] குமரி சோற்றுக்கற்றாழை.

தூளிலேதேன்கூட்டிப் பணவிடைதான்போட்டுத் தொடர்ந்துவ
ரைமண்டலந்தான்கொண்டாயானல், நாளிலேயக்கினியாமந்தந்தீரும்நா
டாதுபீலிகையுங்குன்மவாய்வும், தேளிலேவாயுவென்றதெல்லாந்தீருந்தி
றமானகவுசியொடுபாண்டுதீரும், சூளிலேசுரமெல்லாஞ் சுறுக்காய்த்தீரு
ம்சுகமாகும்பத்தியந்தான் புளிப்புத்தள்ளே. ௪௰

இதுவுமொருவகை.

தள்ளவேயின்னமொருசெய்திகேளு தயவானவேந்தனென் றுநாற்ற
ம்ரண்டு, விள்ளவேஅயப்பொடிதானுலுங்கூட்டி விருதானகுமரிச்சாற
தனலாட்டிப், பள்ளவேநாற்சாமமரைத்துருட்டிப் பாங்கானவெருக்கிலை
யாற்சுற்றிகட்டிக், கள்ளவேபாண்டத்தில் பட்சம்வைத்துக் கலங்காதே
பொடிசெய்துதிரிகிக்கொள்ளே. ௪௧

கொள்ளடாதேன்கூட்டிமண்டலந்தான் கொடியானகுன்மமெட்டும்
பீலிகையுந்தீரும்,தள்ளடாபாண்டுவகையெல்லாந்தீரும்தளமானவக்கினி
யாமந்தீரும், நள்ளடாவிஞ்சிரசந்தேனுங்கூட்டி நலமானமண்டலந்தா
ன்கொண்டாயானல், விள்ளடாசுரமென்ற தறுபானன்கும் விட்டுவிட்
டுக்கடல்புக்கும்விருதுபோடே. ௪௨

கபாடமாத்திரை.

போடவேகபாடமாத்திரைதான்கேளு புகழானசாதிக்காய்ப்பத்திரி
க்காயம், நாடவேசிரசமும்விடையங்கிரரம்பு நலமானவபினி * சடைவ

ன்னிக்கற்பம், தேடவேவெந்தயமுங்கழற்சிவித்துத் திறமானகுரோசா ணிபதினென்றுந்தான், ஆடவேசமன்றூக்கிக்கல்வத்திட்டு அப்பனே [] யானந்தமூலிச்சாறே. சங

* சடைவன்னிக்கற்பம்-சடைக்கஞ்சா.

[] ஆனந்தமூலி-கஞ்சா,

சாற்றுலேநாற்சாமமரைத்துக்கொண்டு சாதகமாயிலந்தைவிரைப் பிரமாணந்தான், காத்தாலேமேதினியென்ற தயிர்நாண்மூன்று கசக்கா தே 0 மதுவிலிடுமூன்றுநான்தான், வார்த்தாலேவாழையிட பூவின்சாற் ருல்வகையானதனிச்சாற்றிலிட்டாயானல், வேர்த்தலேயிரத்தமுஞ்சீழ் கிராணிவிதயானசகலக்கிராணிதானுமாமே சச

0 மது தேன்.

ஆமப்பாசதக்கிராணிவாய்வுக்கிராணி அப்பனேசூரிகாகிராணிதீ ரும், போமப்பாசோறுசோறுய்க்கழிகிராணி பொலிவானசீரதாய்க்கிரா ணிதீரும், நாமப்பாவயிற்றிலுள்ளகடுப்புத்தீரும் நலமானபாண்டுநோய் க்கிராணிதீரும், தாமப்பாவதிகாரக்கடுப்புத்தீருந் தப்பாதுபுளிக்கூட்டி ப்பத்தியம்போடே. சரு

பூபதிக்குளிகை

போடப்பாசடலத்துண்ணோய்கள்போகப் பூபதிதன்மருந்தொன்று சொல்லக்கேளு, சாடப்பாதங்கமொடுவெள்ளிநாகந் தளமானலோகமொ டுமுத்துரத்தினம், நாடப்பாசூதமொடுகெந்திலிங்கம் நலமானசிலையொ டுமதார்சிங்கிநாவி, ஆடப்பாவிவையெல்லாம்பமூச்சாற்று லாட்டியேநா ற்சாமம்வில்லைசெய்யே. சசா

செய்யப்பாரவியுலர்த்தியகலில்வைத்துத் திறமானமேல்மூடிச்சீலை செய்து, வையப்பாமுப்புடத்தில்சிவந்துபோகும் வளமாகவெடைக்கெ டைதான்லிங்கங்கூட்டி, மெய்யப்பாமுலைப்பாலினன்கேசாமம் விடாமல ரைவிரனீளமுண்டைசெய்து, கையப்பாநிழலுலர்த்திச்செப்பில்வைத்து க்கலங்காதேவைரவற்குப்பூசைபண்ணே. சஎ

பண்ணியேபூபதியை முலைப்பாலுக்குப் பரிவாகவரிசிடைகொடுத் தாற்கேளு, சண்ணியேசன்னிபதின்மூன்றுந்தீரும் தப்பாதுதோஷமெ ன்றதேழுந்தீரும், கண்ணித்திரிதோஷஞ்சிங்கிலிதமெல்லாங் காணுதுக டல்புக்குங்கருதிபாரு விண்ணியேசிரசினின்றதோஷமெல்லாம் வெகு சுருக்காய்தீரும் ாவிணைந்துப்பாரே. சஅ

பாரப்பாபூபதியையிஞ்சிச்சாற்றாற் பரிவானதேன்கூட்டிக்கொடுத் தாற்கேளு, சாரப்பாசமமாகப்போனாலுந்தான் சாதூரியப்பிராணன்வந் துசற்றேபேசும், ஆரப்பாபிரமலபியவ்வளவேயாயின் ஆசித்துப்பேசிவி ட்டுமரணமாவான், தாரப்பாபூபதியைச் சொன்னேன்சொன்னேன் சா தித்துவயித்தியஞ்செய்கருமமாமே. ௪௯

## இரசசிந்தாமணி.

ஆமப்பாரசசிந்தாமணியைக்கேளு அப்பனேசூதமொடுசிவந்தரத்த ம், தாமப்பாதாகங்கமொடுவெள்ளிமுத்து தயவானபழமொடுதீட்சணந் தா, நாமப்பாசிலேகெந்தியப்பிரேகம்நலமாகவகைக்குமிருகழஞ்சுகூட்டிக் * காமப்பால்விட்டரைப்பாய்சாமம்நாலு கருவானசித்திரமூலக்கியாழந் தானே. ௫௰

* காமப்பால் முலைப்பால்.

கொழுத்தாலரைத்திடுவாய் சாமம்நாலு கெடிதானவெருக்கம்பாற் சாமம்ரண்டு, கியாயமாஞ் * சோகிதனிலடைத்துக்கொண்டு கிலவரமா ய்மூலமென்றசாம்பலுக்குள், வியாழமாயறைபறைபாய்வைத்துமுடிவித மாகவெழுசீலைமண்ணுசெய்து, தியாழமாயிரவிதனிலுலரப்போட்டுத் திறமாகக்கசப்புடத்திற்சென்றுவாங்கே. ௫௧

* சோகி-பலகறை

வாங்கியேயெடைக்கெடைதான் சூதங்கூட்டி மைந்தனேநாபிமுக் காற்கழஞ்சுகூட்டி, ஓங்கியேநாற்சாமந்திரிகடுகுகியாழ முத்தமனேதிரிப லையின்கியாழந்தன்னும், நேங்கியேயிருசாமமரைத்தபின்பு திறமாகவெ ருக்கினிடப்பட்டைச்சாற்றால், தாங்கியேயிருசாமமரைத்துருட்டித்தப் பாமநிழலிலுலர்த்திவையே. ௫௨

வைத்திதனைவைரவர்க்குப் பூசைபண்ணு வாகாகக்கணபதியை பூ சைபண்ணு, தைத்ததொருமாத்திரைக்குச் செபந்தான்பண்ணு தப்பா மற்றேவியைத்தான்பூசைபண்ணு, சித்திதருமாத்திரையை யனுபானத் தில்திறமாகக்குன்றியெடைகொடுத்தாற்கேளு, பற்றிநின்றசன்னிமுதற் றோஷமெல்லாம் பறக்குமடாசுரமென்றதெல்லாந்தானே. ௫௩

தானென்றரசசிந்தாமணியின்பேரைச் சாற்றினல்யமதூதர் ஒடுங் குவார்பார், ஏனென்றேயிருந்தால்வயித்தியோரேயெய்துமோமாத்திரை தானியம்பக்கேளு, பானென்றமாத்திரைகள்பண்பாய்ச்செய்து பரிவான் வுலகத்தில்வயித்திஞ்செய்ய, தேனென்றவயித்தியர்க்குச் சொன்னேநின் னூல்திறமானவாதியென்றூற்செய்வான்பாரே. ௫௪

## கோரோசனைக்குளிகை,

பாரப்பாகோரோசனைக்குளிகைகேளும் பாங்காகக்கோரோசினைகு
ங்குமப்பூ, சாரப்பாகர்ப்பூரம் ரசசெந்தூரஞ் சார்பான பச்சைக்கர்ப்பூர
மேலம், சேரப்பாவப்பிரோகங்கிராம்புகோஷ்டம் திறமானசாதிக்காயக்கி
ராகாரம், ஆரப்பாவகையொன்றுகழஞ்சுமூன்று அப்பனேகல்வத்திற்
பொடித்துக்கொள்ளே. ௫௫

பொடித்திதனையரைப்பதற்குக்கியாழங்கேளு பேரானசங்கணத்தூ
ள்கியாழஞ்செய்து, துடித்திதனைச்சாமம்நாலரைத்துக்கொண்டுதுலங்க
வேசண்பகப்பூக் கியாழஞ்செய்து, கடித்திட்டுவிருசாமமரைத்துக்கொ
ண்டு கருவானகுங்குமப்பூகியாழஞ்செய்து, துடித்திட்டுவிருசாமமரைத்
துக்கொண்டு துலங்கவேகுன்றிபோலுண்டைசெய்யே. ௫௬

உண்டைசெய்துநிழலுலர்த்திச் செப்பில்வைத்து உத்தமனேமுலை
ப்பாலில்கொடுத்தாயானால், தொண்டையுறசேத்துமங்க டொண்ணூற்
ருறுந் தொலைந்துவிடுஞ்சன்னியெல்லாஞ்சொல்லாதோடும், மண்டைக
ட்டுச்சூலைமுதநீர்த்தோஷங்கள் மயக்கமொடுசேத்துமம் மாண்டுபோகு
ம். சண்டையிட்டுவந்ததொரு வலிப்பிசுவுஞ்சண்ணுண்டு போகுமடா
சொல்லக்கேளே. ௫௭

## பூமணிக்குளிகை.

கேளடாபூமணிதான்சொல்லக்கேளு கிருபையாம்ரோகணியுமிலு
ப்பைப்பூவும், நாளடாவாளமதுரொட்டிசேர்த்து நலமானகுமரிச்சாறத
னலாட்டி, வேளடானூற்சாமமரைத்துக்கொண்டு விதமான தூதுளங்கா
ய்ப்போலுருட்டித், தாளடாநிழலுலர்த்திச் செப்பில்வைத்துத் தளமான
விஞ்சிரசந்தேனுங்கூட்டே. ௫௮

கூட்டியமாத்திரைதா னென்றுதேய்த்துக் குழப்பியேகாலமேகொ
டுத்தாம்கேளு, நாட்டியதோர்சன்னிசுரமெல்லாந்தீரும் நலமானவிடாசு
ரமும்நாடாதோடும், தீட்டியதோருள்ளியென்ற தைலத்தூட்டத்திறமா
னதோஷமெல்லாந்தீரும், வாட்டியேயெண்ணையிலே கொடுத்தாயானால்
வாங்கிவிடும்வாயுவெல்லாமாண்டுபோமே. ௫௯

## அர்த்தநாரீஸ்வரம்.

போமப்பாஅர்த்தனாரி சூரணந்தான்கேளு புகழானசூதமொடுநா
பிகெந்தி, நாமப்பாவெண்காரம்சமனாய்த்தூக்கி நலமானநொச்சியிலைச்
சாற்றினாலே, வேவப்பாவிருசாமமரைத்துக்கொண்டுவிதமானகுகையிலி
ட்டுச்சீலைசெய்து, தாமப்பாமண்செய்துசட்டிக்குள்ளே தயவாகவுப்பை
யிட்டுக்குகையைவையே. ௬௰

வைத்ததிலேமேலுமந்த வுப்பைக்கொட்டி வாகாகமேற்சட்டிகொண்டுமூடி, தைத்ததிலேசீலைசெய் தடுப்பிலேற்றித் தப்பாமற்கமலவன்னிநாலுசாமம், நைத்ததிலேயாறவிட் டெடுத்துக்கொண்டு நலமானசெங்கழுநீர்சாற்றினாலே, பைத்ததிலேநாற்சாமமாட்டிக்கொண்டு பருவமுடனொச்சிரசம்விட்டேயாட்டே. ௬௧

ஆட்டப்பாநாற்சாமம் பாகற்சாற்றால் அப்பனேனாற்சாமமாட்டிக்கொண்டு, நாட்டப்பாவிமுகத்திலுலர்ந்தபின்பு நன்றாகக் குழலடைத்துவைத்துக்கொண்டு, மூட்டப்பாபணவெடைதூள்சாற்றிவிட்டு முறையாகக்கொடுத்திடவேசுரங்கள்தீரும், காட்டப்பாவிருபுரத்தோர் புறந்தானிற்குங் கருவானமுன்சாற்றினசியம்பண்ணே. ௬௨

பண்ணப்பாஒருபுரத்திற் சுரந்தானிற்கும் பக்குவமாய்மறுபுறத்தினசியம்பண்ண, தண்ணப்பாவிருபுரமுந்தணிந்துபோகுந் தப்பாதுஆட்டுப்பாற்கஞ்சிகொள்ள, நண்ணப்பாபுலத்தியற்காச் சொன்னேன்பேணி நாட்டிலுள்ளோரிதையறிந்து யார்தான்செய்வார், கண்ணப்பாவொளிப்பில்லை சொல்லிவிட்டேன் கருவானவயித்தியர்க்குக்கருவைக்காணே. ()

சிலோதாரிமணி.

காணப்பாசிலோதாரிமணியைக்கேளு கனத்த * பொரிதிரிகடுகுபடியொவ்வொன்று, நாணப்பாகடனுவாயுஞ்சூவாவித்து நலமாகவிந்துப்புகாயமொன்று, மாணப்பாநேர்வாள மிரண்டுங்கூட்டிவகைபத்துமிளநீரிற்சாமமாட்டி, பேணப்பாவிலைந்தைவிரைப் பிரமாணந்தான் பிசகாமனிழலுலர்த்திச் செப்பில்வையே. ௬௪

* பொரி வெண்காரம்.

வைத்தப்பாவிஞ்சிநீர்தேனுங்கூட்டி வளமானமாத்திரையைக்கொடுத்தாயானால், சத்தப்பாவாயுவொடுவாதமெல்லாஞ் சாந்தமாம்பித்தமெல்லாங்கிழேசாடும், வைத்தப்பாமதுவிலேயிட்டாயானால் மாந்தமொடு உப்பிசமும்வாங்கிப்போகும், எய்த்தப்பாநீரடைப்புசதையடைப்புதீரும் மிதமானசிலோதாரியென்றுகாணே. ௬௫

கரிசாலைலேகியம்.

காணப்பாபாண்டுவகை யாவும்போகக் கரிசாலைலேதியந்தான்சொல்லக்கேளு, நாணப்பாபொற்கையான் சாறுபடியிரண்டு நலமானநெருஞ்சிரசம்பலமிரண்டு, வானப்பாசிறுகீரைச்சாறுபடியொன்றுவளமான

பொடுதலைநீர்படிதானென்று, தாணப்பாகீழ்க்காயினெல்லிச்சாறு தருவானசெருப்படிநீர்படிதானென்றே· ௬௬

ஓறப்பாகியாழவகைசொல்லக்கேளு உரமானநாவல்கருங் காலியத்தி, ஒன்றப்பாதென்னம்பூவகையொன்றுக்கு ஓர்பலந்தான்மஞ்சணன்றாயிடித்துப்போட்டுங், கண்டப்பாதூணிநீரொட்டொன்றாக்கிக்கருவானசாற்றிலுள்ளேகருத்தாய்வைத்துக், கிண்டப்பாசமமாக்கியிறக்கிக்கொண்டுகெணிதமுடன்கருவானசாற்றிச்சேரே. ௬௭

சேர்க்கவின்னங்கியாழமொன்று சொல்லக்கேளு செப்புகிறேன்மிளகொடுமிளகரணைமூலமார்க்கம், அவ்ரியொடுசிற்றாமுட்டிவளமானபேராமுட்டிவிலாமிச்சேடு, தீர்க்கமாய்ப்பலமூன்று நிறுத்துக்கொண்டுதிறமாகவிடித்ததனைதூணிநீரில், சேர்க்கவேசோடசத்தேர் டொன்றாய்க்காச்சிசிதருதேமுன்கியாழந்தன்னிற்கூட்டே, ௬௮

கூட்டுவாய்பனவெல்லம்பலந்தானெட்டு கூறானகன்னல்வெல்லம்பலந்தானெட்டு, மாட்டுவாயாவின்பாற்படிதானாலு வளமாகக்கனைத்துவிட்டுச்சொல்லக்கேளு, காட்டுவாயடுப்பேற்றிப்பாகுசெய்து கருவானசீரகமுமேலங்கிராம்பு, நீட்டுவாய்சாதிக்காய்சாதிபத்திரிதனைவாக வோமங்குரோசானியாமே ௬௯

ஆமப்பாநாகப்பூகற்டகச்சிங்கி அப்பனேகோஷ்டமோடக்கிராகாரம், தாமப்பாதுரமொடுதாளிசபத்திரி தப்பாமற்றிரிகடுகுதிரிபலாதி, நாமப்பாவகையொன்றிற் பலந்தானொன்றுநலமாகச்சூரணித்துமுன்பாகில்தூவி, வேமப்பாகிண்டையிலேயாவினெய்தான் விளாவிலப்படிவீதம்விட்டுக்கிண்டே. ௭௰

கிண்டப்பாதேனதிலேபடிதான்விட்டுக் கிருபையொடு திரிலோகச்செந்தூரந்தான், ரண்டப்பாபலமொன்றுகூடப்போட்டுத் தப்பாமல் * மண்டூரம்பலமொன்றப்பா, மண்டப்பாகிண்டியதை மெழுகாய்வாங்கி மகத்தானபுன்னைக்காயளவேவீதங், கொண்டப்பாமண்டலந்தான் சென்றதானாற் கூறுகெட்டவெண்பாண்டஞ் சிவக்கலாச்சே. ௭௧

* மண்டூரம்-பழஞ்செங்கற்சிட்டம்.

ஆச்சப்பா பண்டுவகை யாவும்போகும் அப்பனேபித்தவெட்டைக்கைகாலோச்சல், காச்சப்பாகாந்தலுட னெறிவுபோகுங் கனமா

ளவாத்தியொடுமயக்கந்தூக்கம் ஓச்சப்பாவிக்கமொடுநீர்ச்சுரப்புமு
த்தமனே கிரானிஎல்லாமொழிந்துபோகும்,நீச்சப்பா வரோகியங்
களெல்லாம்போகும் நிசமான * அசுவகெந்தினதலமுழ்கே. ௭௨

* அசுவகெந்தி அமுக்கரு.

### கண்டாத்திரிலேகியம்.

மூழ்கவேகண்டாத்திரிலேகியஞ்சொல்வேன் மூர்க்கமாயிஞ்சி
ரசம்படிதானென்று,நீழ்கவேகண்டங்கத்திரியின்சாறு நினைவாகப
டிபொன்றுகூடவிட்டு,காழ்கவேநெருஞ்சிநீர்படிதானென்றுதப்பா
மல்முள்ளங்கிப்படிநீர்விட்டு, விழ்கவேபழச்சாறுபடிதான்விட்டு வி
யனுனவாவின்பாற்படியிரண்டே. ௭௩

ரண்டானபனைவெல்லம்பலந்தானெட்டுரெணுகியதையடுப்பேற்
றிபாகுசேரிற்,குன்றானதிரிகடுதசிரகமுமேலவுங்கம் வாய்விளங்கந்
கிராம்புதாளிசம்,நன்றாகப்பலமொன்றுசூரணித்து நலமானபாகினி
மொடுகோற்படிதான்றேனும்வாரே. ௭௪

வார்த்தப்பாகின்டியதைமெழுகுபோலவளமானலேகியத்தை
ப்பதனம்பண்ணு, பார்த்தப்பாபாக்களவுவிதமாகப்பகலுமவிருநேர
ங்கொள்ளுங்காலங்,காத்தப்பாமண்டலந்தான்கொண்டாயானாற் க
லங்காதேவாதமொடுவாயுவெல்லாம்,போத்துறநற்பித்தமொடுவா
ந்திசூலைப் புகழுநல்வலியிசுவும்பறந்துபோமே. ௭௫

போய்ப்பாரேசிங்கங்களன்னதோஷம்பொறுக்காதகுன்மமெ
ட்டும்பொருநவிக்கல்,ராமப்பாபித்தத்தினெரிவிதெல்லாம்சாடிவி
டுங்கடுப்புவலிசாந்தமாகும், நாமப்பாபித்தத்தின்கபாலகுத்தல் நா
டாதுமயக்கமெலாநடுங்கிபோடும், தேமப்பாகுமரியிடைதலமுழ்கி
ல்திறமானபித்தநோய்திரும்பாரே. ௭௬

### பஞ்சதீபாக்கினிலேகியம்

பாரப்பாபஞ்சதீபாக்கினி யெனவப்பகருகின்றலேகியந்தான்
சொல்லக்கேளு, ஆரப்பாதிரிகடுகுமேலஞ்சீரகம் அப்பனே வகை
யொன்றுபலந்தானென் றுபேரப்பாவிளைறுப்பாய்சூரணித்துப்பெ
ரிதானவாவின்பாற்படியிரண்டு, சேரப்பாபனைவெல்லம்பலந்தானெ
ட்டுச் சிறப்பாககரைத்ததிலேபாகுசெய்யே. ௭௭

செய்யப்பாசூரணத்தைதூவிக்கிண்டு திறமானதேனெய்தானு
ரியுழக்கு,கையப்பாவிட்டதிலேகின்டிக்கிண்டிக் கருவாகமெழுகுப
தமாகவாங்கி,மையப்பாபாக்களவுயிருநேரந்தான்மைந்தனே மண்

டலந்தான்கொண்டாயானால்,தையப்பாதீருகின்றவியாதிகேளு தருவானவாய்வோடுவாதமாமே. ௭அ

ஆமப்பாவுஷ்ணங்கள்பித்தவாயு அப்பனே சரீரத்திலுளவுருத்துபோமப்பாவலிகடுப்பு மெரிச்சல்பேதி பொருமலுடன்வாயுவென்றகிராணிதீரும்,வேமப்பாவலிகடுப்பாமஸ்திவெட்டைவிருந்தானவாந்திஎல்லாம்விழலாய்போகுஞ்,சரமப்பாவாக்கினிடனதலமூழ்குசகலசுரம் விட்டோடுஞ்சார்புபாரே. ௭௯

## கண்டங்கத்திரிலேகியம்.

சார்வானலேகியந்தானென்றுகேளுசாற்றுகிறேன் கண்டங்கத்திரி தூக்கம்பாரு, ஆர்வாகவிடித்ததனை தூணிநீரில் அப்பனேஎட்டொன்றாய்காச்சிவிட்டுச்,சேர்வாகப்பனைவெல்லம் பலந்தான்பத்துசேர்த்ததிலே பால்படிதான்பாகுசேரில் ,தார்வாகத்திரிகடுகுதிரிபலாதிதருவானவாய்விளங்கமோமமாமே. ௮௰

ஓமமொடுகுரோசானிலவங்கப்பட்டை உத்தமனேசீரகமுநறுகுமூலம்,நாமமோடத்திதிப்பிலியுங்கோஷ்டம் நலமானதாளிருமுமக்கிராகாரம்,வாமமொடுவகையொன்றுபலந்தானென்று வளமாகச்சூரணித்தப்பாகிற்றாவி, சேமமோடாவினெய்படிகால்விட்டுதிறமானதேனதிலேபடிகால்வாரே. ௮௧

வார்த்ததிலேகிண்டியது மெழுகுபோல வளமானலேகியம்பாக்களவுவிதம்,பார்த்ததிலேயிருநேரங்கொண்டாயானாற்பறக்குமடாகழல்வாதம்பாரிச்சூலை, தேற்றியே கிருமியொடு புழுக்களெல்லாந்தேகத்தைவிட்டோடுங்கர்ப்பவாயு,சாற்றதிடலயுஷ்ணநோய் பித்தமெல்லாஞ்சாராது சிந்தாதிலேகியங்கேளே. ௮௨

## சிந்தாதிலேகியம்.

கேளப்பாவாறுதிங்கள்சென்றநாடி கிருபையாய்படிபத்தும்புளித்தமோரும்,நாளப்பாபடிபத்துக்கூடவிட்டு நலமானபுளியிலேதூக்கிடித்துபோட்டு,கேளப்பா தூருப்பிடித்த,விருப்பெடைதான்போட்டுக்கொதிக்கவைத்துள டொன்றாயிடித்துக்கொண்டு, வேளப்பாகையானீர்படிதானிரண்டு விருதானவிஞ்சிரசம்படிதானென்றே. ()

ஒன்னனபழச்சாறுப்படிதானென்றுஉத்தமனேநெருஞ்சிரசம்படிதானென்று, சென்றானசிறுகீரைபடிதானென்றுசெருப்படைதான்படியொன்று தென்னம்,பூநீர்ப ண்டாடபடியொன்று கீழாநெல்

விபதருமற்படியொன்றுகூடச்சேர்த்து, கண்டானவாவின்பால்படி
தானுலு கருவானபனைவெல்லம்பலந்தான்பத்ூ்த, ௮௪

பத்தாகக்கரைத்துவிட்டுப் பாகுசேரில்பக்குவமாங்கடைச்சர
க்குதிரிகடுகுஓமம்,நந்தானதிரிபலைகோஷ்டமாஞ்சிலநலமானசீரகம்
வால்மிளகுஏலம்,கைத்தானகிராம்புதாளிசப்பத்திரிகருவான லவுங்
கத்தோலானைதிப்பிலி,ஒத்தாதபலமொன்று தூக்கிக்கொண்டு உரு
வாகஇளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே. ௮௫

செய்யப்பாமுன்பாகித்தூவிக்கிண்டிச் செயமாகவாவினெய்படி
தான்வாரு,கொய்யப்பாதேனதிலேபடிதான்வாருகுழம்பாகலேகிய
த்தைபதனம்பண்ணு,பையப்பாவிருகழஞ்சியிருநேரங்கொள்ளப் ப
றக்குமடாபாண்டுவகைஎல்லாந்தீரும், மையப்பாபித்தவெட்டைல
த்தவாய்வு மயக்கமோடக்கினியாமந்தந்தானே. ௮௬

வந்தமொடுவெளுப்பான தேகமெல்லாம் வண்டுபோல்கறுக்
குமடாமண்டலத்தில்,அந்தமாமகோதரம்பீலிகையாமவாழ்வுஅப்ப
னேசோகையொடுகிராணிமூலம்,பொந்தமாமூடம்பெரிப்பிளைபோ
டீளைபொருமலுடனுப்பிசங்களிறைச்சல்தீரும்,பந்தமாம்பத்தியங்க
ள்நன்றாய்காத்துபக்குவமாமண்டலத்தில்சொல்லக்கேளே. ௮௭

மகாவில்வாதிலேகியம்

சொல்லக்கேள்புலத்தியனேயின்னமொன்று சுருக்காகநோய்
க்கெல்லாமகாவில்வாதி,வல்லக்கேள்வில்வதின்மூலமப்பா வளமாக
ப்பலம்நூறுவெட்டிவந்து,நல்லக்கேள்விலாமிச்சைவகைபாதிரிநல்
மாகநன்னாரிபருவிசாவும்.அல்லக்கேள்சிற்றாமல்லிபேராமல்லி அழ
கானசிறுவிளாவேருமாமே. ௮௫

ஆமப்பாசிறுவாகைமுன்னையோடெப்பனேமுசுமுசுக்கைகொ
டுவேலிதெற்றான்,நாமப்பாவகையொன்றுபலமூன்றுக்நலமாகவி
டித்தேயிருதூணிநீரில், வேமப்பாவெட்டொன்றாய் வடித்துக்கொ
ண்டுவெருளாதே கொம்மட்டிபழச்சாறிஞ்சிகாமப்பாசாறுபடியொ
ன்றுவிட்டு கலங்காதேசர்க்கரைசேர்நாலு மாமே. ௮௯

ஆமப்பாவாவின்பால்படிதான்ரண்டு அப்பனேகரைத்தெல்லா
ம்பாகுசேரில்,போமப்பாதிரிகடுகுதிரிபழாதி.புகழானலவுங்கமோ
டேலங்கோஷ்டம்,நாமப்பாமதுரகெந்தஞ்சீரம்ரண்டுநலமானவிளங்
மொடுசகஸ்திரபேதி,வாமப்பாதாளிசம்செண்பகப்பூ அக்கிராகாரம்
வளமானமல்லிவிளாவரிசிதேக்கே. ௯௰

தெக்கானமுத்திரிகைபேரீச்சுவில்வந்திறமானவாலுளுவைமா ஞ்சில்சிறுநாகம், பாங்கானநாகணமும்பருததிவித்தும் பகருவே*னி மபவித்திலுப்பைப்பூவு, தூக்கானவங்கையொன்றுபலமொன்றுகச்சூ ரணித்துபாகிலேதூவிக்கிண்டி, நீக்கானதேனதிலே படியுரைதான் விட்டுபின்னைவாகவாவிநெய்படியரைதான்வாரே. ௯௧

* நிம்பவித்து வேப்பங்கொட்டை.

வார்த்தப்பாமெழுகுபோல் கிண்டிக்கிண்டி வளமானலேகியத் தைப்பதனப்பண்ணு, கோத்தப்பாலேகியத்தைப் புன்னைக்காயளவு கொண்டுவரவிருநேரந்தீருநோய்கள், சாற்றப்பாசுவாசமுடன்றோ சியங்கள்தவறாதேவீக்கமொடு சத்திபெரிப்பாண்டு, காத்தப்பாவிஷ பாண்டுவயிற்றெரிச்சல் கனமானவுப்பிசங்கள்கிராணிபோமே. ௯௨

போமப்பாகைகாலிலெரிவுகாந்தல்புகலும்வெள்ளைக்காளம ன்னதோஷம் நாமப்பாசூலையொடுசயங்காசமெட்டுநலமானசுரங்கள றுபத்துநாலுந்தாமப்பாபித்தமென்றநாற்பதுந்தான் தளமானவல் திசுரபருந்தீடெல்லாம், ஆமப்பாவதிசாரமுள்ளில்ரோகம் அருளான லோதம்வைத்துக்கொள்ளுக்கொள்ளே. ௯௩

கூழ்மாண்டலேகியம்,

கொள்ளவேகூழ்மாண்டலேகியந்தான் குணமானகூழ்ப்படிசா றுபடிநாலு, விள்ளவேதாழைவிழுதின்சாறு விருதானபடியொ ன்று தென்னம்பூவொன்று, கள்ளவேபழச்சாறுபடிதானொன்றுதள மானவாவின்பால்படிதானிரண்டு, பள்ளவேசர்க்கரைதான்புலமோப த்துபதருமறக்கரைத்ததனைப்பாகுசேரே. ௯௪

சேருமேசீரகமல்லிகோஷ்டந்திறமானமிளகுமாசிக்காயேலம், காருமேசாதிக்காசாதிபத்திரிகருவானமதூரமொடுதாளிசந்தான்வா ருமேஒருவகைக்குபலமொன்றுகவகையாகச்சூரணித்துப்பாகிற்றூ வி, நேருமேதேனின்படி யுரைதான்விட்டுபின்னைவாகக்கூழ்போலகிண் டிவாங்கே. ௯௫

வாங்கியேபுன்னைக்காயளவுவீதம்வளமானலேகியத்தைக்கொ ண்டாயானால், தீக்குமேகாமாலைசோகையெல்லாம் நீங்காதவல்கிசு ரமஸ்திவெட்டை, தாங்கியதோர்பிரமியங்கள் வெள்ளைவிழ்தல் தள மாகும்தேகபுஷ்டிவிந்துலூறும், பாங்கியேபுஷ்டிநோய்நீர்ச்சுருக்கு ம்பறக்கும் புளிபுகையிலைதள்ளிக்கொள்ளே. ௯௬

சாபங்கவில்வாதிலேகியம்,

கொள்ளவேயின்னமொன்று சொல்லக்கேளு குணமானசாப ங்கவில்வாதிலேகியம், விள்ளவேவில்வவேர்வமட்டாவேர் விருதான குக்கிவேர்வகைக்குத்தூக்கு, தெள்ளவேசிற்றாமுத்தைவில்வமூன்னிலு

ளமானபேர்மல்லி * கூந்தல்முள்ளிநள்ளவேசாரணைவேர்கண்டங்கா
லிநவமானவிலாமிச்சைசீந்தில்தானே. ௧௭

* கூந்தல்முதியார்கூந்தல்

தானென்றகொடிவேலிபொன்முசுட்டை தளமானநன்னாரிசிறு
தேக்கப்பா, வானென்றமூலிவகைபதின்மூன்றுந்தான்வளமானபல
மஞ்சுஇடித்துநைய, வேனென்றவாற்றுநீர்தூணிவிட்டு விளங்கவே
எட்டொன்றாய்நிறுத்துக்கொண்டு, கானென்றகன்னல் வெல்லஞ்சே
ர்தானுலு கருவானவாவின்பால்படியிரண்டுசேரே. ௧௮

சேர்த்தப்பாகரைத்ததிலேபாகுசெய்து திறமானதிரிகடுகுதிரி
பலாதி, வார்த்ததிலேகிராம்பேலமிருசீரகந்தான்வளமானகோஷ்ட
ந்தாளிசப்பத்திரி, தாக்கதிலேயோமம் மண்டரத்தைரண்டுதளமான
கொத்தமல்லிலவங்கப்பட்டை, ஆர்த்ததிலேயக்கிராகாரமரத்தைதி
ப்பிலி அப்புனேவால்மிளகு சாதிக்காயாமே ௧௯

ஆமப்பாவகையொன்றுபலமொன்றாக அப்பனேயிளவறுப்பா
ய்சூரணித்துச், சேரப்பாபாகிலேதூவிக்கிண்டித் திறமானதேன்படி
நெய்யரைதான்விட்டு, நாமப்பாகுழம்புபோல்வாங்கிவைத்து நலமா
கக்கழஞ்சிநிறையிருநேரங்கொள்ள, சாவப்பாபித்தவெட்டைடாண்
டுஆறுந்தவறுண்டுபோகுமடாசயமட்டுந்தானே. ௨௰

தானென்றகுன்மமெட்டுங்கிராணியாறுந் தடமானவாய்கசப்பு
வெள்ளோக்காளந், தேனென்றவாயூறலக்கினிமந்தந் திறமானசூலை
பொடுகைகால்மாந்தல், பானென்றபித்தமதுநாற்பதுந்தான்பறக்கு
மடாமண்டலத்தில்பரிந்துகொள்ளு, வேனென்றபத்தியந்தான்புளிக
சப்புவிளங்கோர்புகையோடுபெண்ணுந்தள்ளே. ௨௧

தள்ளப்பாதிரிலோகம்வைத்துக்கொள்ளு தளமானவாலரசச்
செந்தூரந்தான், கொள்ளப்பாலோகசெந்தூரந்தானுங்குறையாமற்
மணவெட்டைதான்வைத்துக்கொள்ளு, தள்ளப்பாபித்தமென்றதெல்
லாம்போகுந் தருவானசேத்துமங்கள்தொண்ணூற்றாறும், விள்ளப்
பாகடல்புக்குங்கண்டுகொள்ளு விருதாகவின்னமொருசேதிகேளு

கண்டங்கத்திரிலேகியம்.

கேளப்பாகண்டங்கத்திரியானுங்கேடிதானுலேகியந்தனைச்சொல்
[illegible]ளு, நாளப்பாவொர் [illegible] முள்ளிபல்தானூறு [illegible]

யதற்குப்பாதி,தாளப்பாசிற்றுமுட்டிபேராமுட்டி களமானமிளகரு
ணைகொடிவேலிகளரவும் ஆளப்பாவரதண்டைச்சிறுகாஞ்சொரியப்
பனைவிலாமிச்சைமுட்காவேளையாமே. ௩௩

ஆமப்பாகோரையுடனுத்தாமணியும் அப்பனேகழற்கொடியு
மாவிலிங்கம்,தாமப்பர்வகையொன்றுபலமொன்றாகத்தவறுமலிடித்
தேயிநதூணிநீரில், வேமப்பாவெட்டொன்றாயிருத்திவாங்கி விரு
தானகொம்மட்டிபழகற்சாறு,நாமப்பாபடியரைபுங்கூடவிட்டு தள
மானவாவின்பால்படிதான்றாண்டே. ௩௪

ரெண்டானசர்க்கரைதான்பலமுறைவர்தூநினைவாகக்கரைத்ததி
லேபாகுசேரில்,கண்டானகடைச்சரக்குசொல்லக்கேளுகருவானதி
ரிகடுகுதிரிபலாதி,நன்றானசிங்கிபிருவாதந்தான்நலமானவரத்தைய
க்கிராலவங்கப்பட்டை, பின்றூதலவங்கஞ்சாதிக்காய்பத்திரி பேரர
த்தைலவங்கப்பத்திரியுங்கூட்டே. ௩௫

கூட்டுவாய்வகையொன்றுபலமொன்றாகக்கூசாமலிளவறுப்பா
ய்ச்சூரணித்து,நாட்டுவாய்பாகிலேதூவிக்கிண்டி நலமாகத்தேன்படி
நெய்யரைதான்விட்டு,காட்டுவாய்மெழுகுபோல்கிண்டிக்கிண்டிகசக்
காமல்பீங்கானில்வழித்துவைத்து,ஊட்டுவாய்லேகியந்தான்புன்னை
க்காய்வீதம் திறமாகமண்டலத்தில்தீருநோய்கேள் ௩௬

கேளுதான்சயமெட்டும்குன்மமெட்டும்கெடியானவாதமென்ற
ன்பதுபோம்நாளுதானிரைப்பீனைவிழிநீர்கோவைநாடாதுஇசிவுமு
தல்கழல்வாதங்கள் தாளுநான்கெர்ப்பவெட்டைகெர்ப்பசூலை த
வறுண்டுபோகுமதுபுழுக்களெல்லாம்,ஆளுதான்தாளகமும்லோகங்
கூட்டிஅடைவாகக்கொண்டுவாத்திரும்பாரே, ௩௭

கபாடலேகியம்.

பாருமேகபாடலேகியத்தைச்சொல்வேன் பண்பானசரவலொடு
வரசுவத்தி, சேருமேகருங்காலியொதியம்பட்டை திறறாகபலம்பத்
துநிறுத்துகொண்டு, சாருமேயிடித்துநைபத்தூணிநீரில்தளமாகவ
டுப்பேற்றிஎட்டொன்றாக்கி,வாருமேபனைவெல்லம்பலந்தான்பத்து
வளமாகக்கரைத்ததனிற்பாகுசெய்யே. ௩௮

பாகிலேதூவுதற்குமருந்துகேளுபதறுமல்கஞ்சாவைசுத்திசெ
ய்து,பாகிலேபலமொன்றுதூக்கிக்கொண்டு பாங்கானமிளகுசுக்குசீ
ரகமுங்கூட,பாகிலேயோமமொடுகுரோசாணியோமம்பருவமாய்ச்சி
ங்கிகாட்டாத்திப்பூவும்,பாகிலேவால்மிளகுசிறுநாகப்பூபக்குவமாமு
ல்லியோடேலமாகும். ௩௯

ஆருமேகிராம்புடனேசாதிப்பத்திரி அடைவானசாதிக்காய்விடையந்திப்பிலி நாகுமேவகையொன்றுபலமொன்றாக.நலமாகவிளவறுப்பாய்சூரணித்துவேகமேபாகிலேதூவியேதான்வெகுசருக்காய்தேனெய்யும்விட்டுக்கிண்டி தாகுமேபீங்கானில் பதனப்பண்ணித் தப்பாமல்மண்டலந்தான் பாக்களவுகொள்ளே. ௰

அளவாகக்கொண்டுவரத்தீரும்நோய்கள் அதிகமுள்ளசூசிகா கிராணிவாயு, பழுவானகடுப்புமுதற் பாண்டுகிராணி பாங்கானபேதியோடுஷ்ணவாயு,களவாகமூலக்கிராணிவாயுகூண்காணுதோடமேதுபற்றவாயு,வளமாகிக்கிராணியெல்லாந்தீரும்தீரும் மார்க்கமுடனின்னமொருவரிசைபாரே. ௧௰௧

## திப்பிலிரசாயனம்.

பாருமேதிப்பிலிரசாயனஞ்சொல்வேன் பகருகின்றதிப்பிலியும் பலந்தான்பத்து, சேருமேமிளகுமஞ்சுசுக்குமஞ்சுதிறமானவிருசீரகமோமம்ரண்டு,ஆருமேயரத்தைரண்டுதாளிசபத்திரி அடைவானலவங்கப்பத்திரியும்பட்டை காருமேதிரிபலை லவங்கமேலங் கனமானகொடிவேலிபலமொன்றுதூக்கே. ௧௰௨

தூக்கியேயிளவறுப்பாய்சூரணித்து சுகமானசர்க்கரைதான்சமனைக்கூட்டிக்,தாக்கியேதேன்விட்டுபிசைந்துகொண்டு தப்பாமல்வெறுகடிதான்கொள்ளும்போது,தேக்கியேயிளைப்போடேயிளைகாசம்திறமானசேத்துமநோய்தொண்ணூற்றாறும், நீக்கியேயுத்தரத்தின்வாயுவெல்லாம் நீக்கிவிடுமண்டலத்தில்நினைவாய்பாரே ௧௰௩

## மஸ்துமிரசாயனம்.

பார்த்திடுவாய்பலத்தியனேமேகவகைதீரப் பண்பானமஸ்துமிரசாயனஞ்சொல்வேன்,சேர்த்திடுவாய்சீனமுதலமுக்கரவேர், திறமானவகையொன்றுபலம்பத்தாகும்,சாற்றிடுவாய்நிலப்பனைவேர்பலந்தானைந்து, தளமானதண்ணீர்விட்டான்பலந்தான்ரண்டு, ஆற்றிடுவாயநன்னாரிசங்குமூலம்,அன்பானதிரிகடுகுதிரிபலையுமாமே ௧௰௪

ஆமப்பாலவங்கத்தோல்லவங்கப்பத்திரி அப்பனேசிறுநாகம்வாய்விளங்கம், போமப்பாமல்லியிருசீரமோமம் புகழானகோரோசனிஅரத்தைகெந்தம்,நாமப்பாசிறுதேக்குகண்டங்காலிநலமானகொடிவேலிவிலாமிச்சைமூலம் தாமப்பாதக்கோலம்வால்மிளகுநேரே குளமானமுந்திரிகைபேரீச்சுக்கூட்டே. ௧௰௫

கூட்டப்பாவெட்பாலைதாமரைக்கிழங்குகுலமானசரதிக்காய் கிராம்புபத்திரி-நாட்டப்பாகருவேம்பினிலைவகைக்குநலமாகபலமொன்றுநிறுத்துக்கொண்டு,காட்டப்பாவிளவறுப்பாய்சூரணித்துக்கரு

வான குங்குமப்பூகோரோசனைகர்ப்பூரம், வாட்டப்பாகழஞ்சுநிறை கூடச்சேர்த்து வளமானசர்க்கரைசேர்நாலுவாங்கே ௧௰௬

வாங்கியேயாவின்பால்படிதானுலுவளமானசர்க்கரையைகரைத்துக்கொண்டு, பாங்கியேயபாகுபதமாகும்போது பதறுதேகுரணத்தைகாய்ச்சிக்கொண்டு,தேங்கியேகேன்படிதாநென்றுவாருதிறமானவாவியெனய்யரைதானப்பா வாங்கியேமெழுகுபோல்கிண்டிக்கிண்டிவ்ளமானபீங்கானில்பதனம்பண்ணே. ௧௰௭

பண்ணப்பா விருநேரம்பாக்களவுகொள்ளப் பரிவுடனேதீருகின்றவியாதிகேளு,புண்ணப்பாகிரந்தியொடுசூலைதிரும்புறமையாங்கண்டத்திலமாலைதீரும். நண்ணப்பாவாய்வோடுவாதமெல்லாம்நாடாதுபிரமியங்கள்லிங்கபுற்று, தண்ணப்பாசேத்துமநோய்தொண்ணூற்றுருந்தவறண்டு போகுமடாபத்தியங்காரே. ௧௰௮

## சவுபாக்கியசுண்டு.

காரப்பாவுலகத்தோர்நோய்களெல்லாம் கலங்குமடாசவுபாக்கியசுண்டியென்றால்,நேரப்பாசுக்குதான்பலந்தானெட்டு நினைவாகமேற்றோலைச்சீவிப்போட்டு.சாரப்பாமொச்சைவிளாபிரமாணந்தான்களமாகவேநறுக்கிப்புதுசட்டிக்குட்டி, சேரப்பாசெம்முள்ளிச்செந்திராயும் திறமானமுருக்கிலையுஞ்சரிசாலையாமே ௧௰௯

ஆமப்பாசிறுசெருப்புகாற்றிவாட்டி அப்பனேசாறுவகைபடிகால்விதம்,நாமப்பாபுதுசட்டிச்சுக்கில்விட்டு நலமாகவெவ்வேறேபரவியுலர்த்திதாமப்பாவிடித்துநன்றாய்ச்சூரணித்து தளமாகவடிகொண்டேயப்பால்வைத்துப்பாமப்பாதக்கசாலம்வாலுளுவைவித்து புகழானகூகைநீறு கரியபோளங்கூட்டே. ௧௨௰

*கரியபோளக்கறுப்புக்குங்கிலியம்

கூட்டப்பாவராவிளங்கந்தான்றிக்காய்நெல்லிகூறானதிப்பிலியுந்திப்பிலிமூலம் நாட்டப்பாவகையொன்றுபலந்தான்வாங்கி நலமாகவிளவறுப்பாய்சூரணித்து கூட்டப்பா வழுக்குறும்பொன்முசுக்கைகுருவானகண்டங்கத்திரிநன்னாரி நீட்டப்பாநிலப்பனையும்வகையொன்றுக்கு நினைவாகப்பலமிரண்டுநிறுத்துக்கொள்ளே. ௧௨௧

கொள்ளப்பாசுத்திசெய்திடித்துத்தூளாய்க் குணமாகவடிகொண்டுவைத்துக்கொண்டுவிள்ளப்பாமூலவகைத்தூளொன்றாய் கூட்டிவிளங்கவேசர்க்கரையைச்சமனாய்வாங்கி நள்ளப்பாவாவின்பால்படியிரண்டில்நலமாகச்சர்க்கரையைக்கரைத்துக்கொண்டு, அள்ளப்பாவடுப்பேற்றிப்பாதகனுன் அப்பனேமுன்தூளைக்கொட்டிக்கிண்டே

கிண்டப்பா தூளாகநன்றாய்க்கிண்டிக் கிருபையாய்ப் புதுக்கல
சந்தனிலடைத்து. நண்டப்பாவொருகடினிருநேரங்கொள்ளநலமா
கத்தீருநோய்நவிலக்கேளு, கண்டப்பாகிராணிவகை யெல்லாந்தீரு
ம் கருவானபிரமியங்கள்சூசிகாவாயு, கண்டப்பாவாதமொடு பித்த
மெல்லாங் காணுமலோடுமடா கண்டுகொள்ளே. கஉங

கொள்ளவேயந்திரமாம்வாயுதீரும் கூறுனமேகவகைவாதசூலை
கொள்ளவேயக்கினியாவந்தந்தீருங் கூர்ப்பானவாயூறல்வாய்கசப்பு
கொள்ளவேவயிற்றிலுள்ளவியாதியெல்லாம் குடிபோகுஞ்சவுபாக்
கியசுணம்புநண்டால், கொள்ளவேபுளிகசப்புப்பத்தியந்தான் கூறு
னபுகைபோடு பெண்ணுந்தள்ளே, கஉச

அக்கினிசூரணம்.

தள்ளப்பாவக்கினியாஞ் சூரணத்தைச்சொல்வேன் தளமான
கொடிவேலிதிரிகடுகுவோமம், விள்ளப்பாசிறுதேக்கு, யானைதிப்பி
லியுங்கோஷ்டம், விளங்கியகோரிரண்டுப்புவகையொன்று பலந்தா
ன், தள்ளப்பாகாயங்கால்வசம்புகால்தான் நலமானகடுகுபொடி பு
ரைப்பலந்தான்கூட்டித், தெள்ளப்பாவிளவறுப்பாய்ச் சூரணித்துத்
திறமானசீனிசமாங்கூட்டிக்கொள்ளே. கஉரு

திரிராட்சதசூரணம்.

கொள்ளவேவெருகடித்தூள்வெந்நீரிற்கொள்ளக் கூறுனகிரா
ணிவகையுதிரவாயு, பன்ளவேமுகவாயுவாதமெல்லாம் பறக்குமது
திரிராட்சதசூரணங்கேள், தள்ளவேமுந்திரிகைப்பேரீச்சம்பழமுந்
தான் தளமானவ்திமதுரமமுக்காவேரா, நள்ளவேநெற்பொரியுமு
த்தக்காசு நலமானவேலமொடுகிராம்புகூட்டே. கஉசு

* முத்தக்காசு கோரைக்கிழங்கு.

கூட்டுவாய்கொத்தமல்லிமுளகுவேலி கூறுனதிப்பிலியுங்கூகை
நீரும், நாட்டுவாய்சாதிக்காய்சாதிபத்திரிகூட நலமானவால்மிள
குலவங்கைப்பத்திரி, ஆட்டுவாய்கையொன்றுபலமொன்றாக அப்ப
னேசூரணித்துச்சர்க்கரையைக்கூட்டி., வெட்டுவாய் வெருகடிதான்
தேனிற்கொள்ளவெகுசுறுக்காய்ச்சொல்லுசிறேன் விளம்பகேளே

கேளப்பாவந்திரவாயுவு பாண்டுரோகம் கெடியான தாபசுரம
யக்கம்துக்கம், வாளப்பாபித்தவகை நாற்பதுந்தான் வள்மானவ
ரோகிகங்களன்னத்தோஷம், நாளப்பாவுஷ்ணநோய்சேத்துமங்கள்
நலமானவக்கினியாமந்தவாய்வு,தாளப்பாகையெரிவுகாந்தமெல்லா
ம் தவறுண்டுபோகுமடா நெய்யிற்கொள்ளே. கஉஅ

## அசுவகெந்திசூரணம்.

கொள்ளவேயசுவகெந்திசூரணங்கேள் சூலமான வங்கமொன்
றுநாகப்பூண்டு, தள்ளவேயேலம்வால்மிளகோரெட்டு தளமானதிப்
பிலியீரெட்டுசுக்கு, விள்ளவேமுப்பத்திரண்டுங்கூட்டி விசையானவ
சுவகெந்திய றுபத்துநாலு, நள்ளவேசுத்திசெய்துலர்த்திக்கொண்டு
நலமானவிளவ றுப்பாய்ச்சூரணந்தான்செய்யே. ௧௨௯

செய்யப்பாசமனாகச்சர்க்கரையைக்கூட்டித் திறமான வாவின்
பால்நெய்யிற்கொள்ள, கையப்பாவொருகடிதான் கொள்ளும்போ
து கனமானமேகவகையெல்லாந்தீரும், மெய்யப்பாவஸ்திசுரம்வெ
ட்டைபோகும் மேலானசுவாசமோடீளைபோகும், தையப்பாமேக
த்தின்பாண்டுபோகும் தளமானவூறலெல்லாஞ்சாராதென்றே ௧௩௦

## கண்டாத்திரிசூரணம்.

சாரவேகண்டாத்திரிசூரணஞ்செய்வேன் கருவான விஞ்சியது
பலந்தான்பத்து, சேரவேமேற்றோலைப் போக்கிப்போட்டுச் சிறுக
வேநறுக்கியதைப்பழச்சாறாட்டித், தாரவேநாமென்று ஊறப்போ
ட்டுத் தவறுமல்மறுநாள்தான்ரவியுலர்த்தி,ஆரவேசீரகமும்பலந்தா
னொன்று அப்பனேமுன்போலேபழச்சாறாட்டே. ௧௩௧

ஊட்டியேமறுநாள்தான்காயப்போட்டு உத்தமனேமிளகொடு
தாளிசப்பத்திரி, நாட்டியேதிப்பிலியின்மூலங்கிராம்பு நலமானகோ
ஷ்டமொடுவாய்விளங்கம், வாட்டியே யிளவறுப்பாய்ச் சூரணித்து
வளமானசர்க்கரைதான்சமனாய்க்கூட்டி. நீட்டியே வொருகடிதான்
கொண்டாயானால் நீங்கிவிடும்பித்தமுதல்வாய்வுபோமே. ௧௩௨

போமப்பாவரோசிகங்களன்னதோஷம் புகழான பித்தவெட்
டைபொருமல்விம்மல், நாமப்பாவாயுவொடுவாதமெல்லாம் நாடா
துசூலையெல்லாநளினமாகும், சேமப்பாவயிற்றிலுள்ளவியாதியெல்
லாந் திறமாகத்தீருமடாபத்யங்கூர்வேன், நாமப்பாவுலகோர்க்காயி
ரங்கிச்சொன்னோம் நலமானசூரணத்தைநாட்டிப்பாரோ. ௧௩௩

## தாளிசப்பத்திரிச்சூரணம்.

நாட்டியேசொல்லுகிறேன்புலத்தியனேயையா நலமான தாளி
சப்பத்திரிச்சூரணந்தான், காட்டிநீயதாளிசப்பத்திரி பலந்தான்பத்
து கருவானதிரிகடுகுதிரிபலாதி, நீட்டியேகோஷ்டமோடக்கிராகா
ரம் நிலைவாகவத்திதிப்பிலிசீரகம், கூட்டியேகொத்தமல்லி வாய்விள
ங்கங் கூரானகிராம்பேலஞ்சாதிக்காயே. ௧௩௪

காயோடுபத்திரியுமாஞ்சிச்சோப்பு கருவானவான்மிளகுலவங் கப்பட்டை, தாயோடுஷிவையெல்லாம் பலமொன்றாகத் தவறாமல் சூரணித்துவடியேகொண்டு, சேயோடுசர்க்கரைதான்சமனுங்கூட் டித் திறமரிகப்பிசைந்துகொண்டுவெருகடிதானேரம். வாயோடும ண்டலந்தான்கொண்டாயானல் வாங்குமடாசயகாச மீளேபோமே

போமடாவஸ்திசரமஸ்திவெட்டை பொறுக்காத நீர்த்தாகம் புண்ணுநெஞ்சில், நாமடாபித்தவெட்டைபித்தப்பாண்டு நாடாதுகி ர்ணிவகையெல்லாந்தீரும், தாமடாவரோகிசங்களன்னத்தோஷம் தளராதவிம்மலொடுவிக்கல்நக்கல், சாமடாகைகாலிதெரிவுகாந்தல் சாந்தமாம்புளியோடுபுகையுந்தள்ளே. ௧௫௭

## பஞ்சதீபாக்கினிச்சூரணம்.

தள்ளவேபஞ்சதீபாக்கினியென்னும் தளமான சூரணத்தைச் சொல்லக்கேளு, விள்ளவேதிரிநடுகோடேலஞ்சீரகம் விதமானவ கையொன்றுபலவொன்றாக, நள்ளவேயிளவறுப்பாய்ச் சூரணித்து நலமாகவடிகொண்டுசர்க்கரைதான்சேர்த்துத், தள்ளவேதேனெய் யில்வெருகடிதான்கொள்ளத் தாமாகத்தீரும்நோய்செப்பக்கேளே

செப்புகிறேனுஷ்ணநோய்சூலைவாய்வு சேர்ந்தபித்தவாயுவொ டுசிலேத்மம்ரோகம், தப்புகிறேன் பொருமலொடு செரியாமாந்தம் தளமானமயக்கமொடுகிறுகிறுப்பு, வெப்புகிறேனஸதிசரமஸ்திவெ ட்டைவேறானமூலத்தின்வாய்வுதீரும், நப்புகிறேன்புளிகசப்புபுகை யுந்தள்ளு நலமானகாஞ்சம்வைத்துநலமாய்க்கேளே. ௧௫௮

## நிலவரைச்சூரணம்.

கலமானசூரணமொன்றுசொல்லக்கேளு நன்றான நிலவாகை சுக்குங்கூட்டிப், பிலமாகமிளகுவாய்விளங்கமோமம் பேராகவகை க்குவொருபலமேதூக்கிச், சிலமாகரவிமுகத்திலுலரப்போட்டுச்சிக ருமலிடித்துச்சூரணஞ்செய்து, தவமாகச்சர்க்கரைதான்சமனுய்க்கூ ட்டித் தவறாமலிருநேரங் கொண்டாற்கேளே. ௧௫௯

கேளப்பாவாயுவென்றதெல்லாம்போகுங்கெடியானபித்தமெ ல்லாங்கீழ்நோக்கிப்போகும், வளப்பாஉஷ்ணரோ யெல்லாந்தீரு ம் வளமானபொருமலொடுவிம்மல்தீரும். நாளப்மா கேத்துமரோ யெல்லாந்தீரும் நலமானவிக்கலொடுவாந்திதீரும், தாளப்பாவுடம் பெரிவுசுவாசம்தீரும் ஃவ அங் போகுமடாசாற்றக்கேளே. ௧௬௰

சாற்றுகிறேனீரருநல்மலபந்தங்கள் தளராதவயிறுவிம்மவிரு
மல்தீரும், தேற்றுகிறேன்குன்மவெட்டுமேகோதரங்கள் தெளிவான
வாயுவெல்லாந்தீருந்தீரும், ஆற்றுகிறேன்கெர்ப்பவலிகெர்ப்பரோ
கம் ஆச்சரியம்புழுக்களெல்லாமகன்றுபோகும், சாற்றுகிறேன்வெ
ந்நீரிற்கொண்டாயானால் கலங்காதேவயிற்றிலுள்ளவியாதிபோமே

## வல்லாரைச்சூரணம்.

போமப்பாசூரணமொன்றுசொல்லக்கேளு புதுமையாம் வல்
லாரைப்பாவிற்போட்டு, நரமப்பா வலித்துலர்த்திக் காயப்போட்ந்
நலமாகச்சூரணித்துப்பலம்பத்தானால், தாமப்பாகிராம்பேலஞ்சாதி
க்காயுப் தளமானபத்திரிபுமாசக்காயும், தேமப்பா தாளிசப்பத்திரி
திரிபலாதி திறமாகயிளவறுப்பாச்சூரணந்தான்செய்யே. கசஉ

செய்யப்பாவகையொன்றுபலந்தானென்று திறமாக விரண்டு
மொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு, மையம்பாசர்க்கரைதான் சமனாய்
க்கூட்டிப் பதறாமல்வெருகடிதானெய்யிற்கொள்ள, தையப்பாமே
கமெல்லாம்தவறுண்டோபோய் சரீரத்தில்காந்தியெல்லாம் சாந்த
மாகும், கையப்பாபிரமியங்கிராந்தியெல்லாம் கனமானவுஷ்ணநோ
ய்காணாதன்றே. கசங

காணாதுநீரருகல்நீரெரிப்பு கண்ணெரிவுகண்புகைச்சல் காணா
தோடும், தோணாதேயுடம்பெரிவுமூலஞ்சூடும் சுருக்கான நீர்ச்சூடு
ங்குளிர்ந்துபோகும், நாணாதுமதுமேகந்தந்திமேகம் நாடாதுக்ஷய
ரோகம்நளினமாகும், கோணாது தேகமெல்லாங் குளிர்ச்சிகாணும்
கொண்டுவாவப்பிரேகம்வைத்துக்கொள்ளே. கசச

## சஞ்சீவிச் சூரணம்.

கொள்ளவேசஞ்சீவிசூரணத்தைச்சொல்வேன் குணமான சிந்
திலடித்தண்டுவாங்கி, விள்ளவேமேற்றோலைவாங்கிப்போட்டுவெறு
ளாதோறுக்கியதையுலரப்போட்டுக், கள்ளவேயிடித்துநன்றாய்ச்சூ
ரணித்துங் கருவாகவடிகொண்டுபடித்தூள்வாங்கி, நள்ளவேமுந்நூ
ற்றில்சுத்திசெய்து நலமானபொடிபடிக்குஆவின்பாற்படியே. கசரு

படியாகவரைப்படிதான்சீனிபோட்டுப் பாங்காக ரவியுலர்த்தி
க்காய்ந்தபின்பு, அடியாகவுரலிலிட்டிடித்துக்கொண்டு அப்பனேசா
திக்காம்சாதிபத்திரி, கடியாகவால்மிளகேலங்கிராம்பு கசகசாதாளி
சமுமாசக்காயும், வடிவாகவிளவறுப்பாய்ச்சூரணித்து வளமாகவ
ரைக்கொருபலந்தான்கூட்டே. கசசு

கூட்டியேயிரண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு குறைபாமலாறுபலஞ்சீனிசேர்த்து, நாட்டியேவெருகடிதானெய்யிற்கொள்ள நலமாகத்தீருநோய்நவிலக்கேளு, தாட்டிகமா மேகநீ ரிருபதுவும் போகும் தளமானபிரமியங்கள்மேகமெல்லாம், வாட்டியேவற்றிய தோர்தேகமெல்லாம் வளமானவஸ்திசாம்வெட்டைபோமே கசஎ

யோமப்பாமுலத்தின்சூடுபோகும் பொல்லாதபித்தவகை யெல்லாம்போகும், நாமப்பாகண்ணெரிவுகைகால்காந்தல்நாடாதுதேகமெல்லாங்குளிர்ச்சியாகும், தாமப்பாயூறலெல்லாம் தவறுண்டேபோம் தளமானகபாலத்தின்ரணங்கள்தீரும், வேமப்பா வகலரசச் செந்தூரந்தான்வெகுசுறுக்காய்பணதெடையப்பிரேகங்கொள்ளே

## சிலந்திச்சூரணம்.

கொள்ளவேயேலாதிச்சூரணங்கேள் குணமானலவங்கமொன்றுமிளகிரண்டு, விள்ளவேநாகம்கால்தாளிசமெட்டு விதமானகூகைநீர்பதினாறாகும், நள்ளவேசுக்குதான்மூப்பத்திரண்டு நலமானவேலமதுவறுபத்துநாலு, கள்ளவேசர்க்கரைதரன்சமனாய்க்கூட்டி கலந்துபுதுக்கலசமதிற்பதனம்பண்ணே. கசகூ

பண்ணவேவெருகடிநாலிருநேரங்கொள்ளப்பறக்குமடாபித்தமொடுவாதம்வாய்வு, தண்ணவேகிரந்திரணமரிகிரந்தி தளமானமேலூறல்சொரிசிரங்கு, நண்ணவேசிலவிஷங்களுடாதோடும்நலமான குஷ்டமொடுகுறைநோய்தீரும், பெண்ணவேபெரும்பாடுவெலும்புருக்கிப் பின்பாராதோடுமின்னமொன்றுகேளே. கருய

## அசுவகெந்தி பலராட்சதத்தைலம்.

ஒன்றானவுலகத்தோர்நோய்கட்கெல்லாம்உரைக்கிறேன்தைலமொன்றுறுதியாக, நன்றானவசுவகெந்துபலராட்சத நாமமதுசொல்லுகிறேன்நவிலக்கேளு, சென்றானவசுவகெந்திபலமூவைந்துசிற்றாமுட்டி பதினைந்துவெள்ளெருக்குநாலு, குன்றானநன்னாரி சீந்தில்விளாமிச்சுகோரையுடனெய்ச்சட்டியுவுரியெண்ணே. கருக

எண்ணவேநாரத்தைதுளசிவெட்டி இதமானமூலததை பலந்தாநாலு, நன்னவேயதில்நாலுதேவாரனுலு நலமான கீழ்நாடன் பலந்தானெட்டு, தண்ணவேகொம்பரக்குபலந்தானெட்டு தள்ளிவிட்டுவகையெல்லாம்பதினைந்தாகும், ஒண்ணவேயிடித்துநன்று விருதுணிநீரில் ஒருவிதமாய்த்நீட்டுச்சேர்டாத்தொன்றாச்சே. கருஉ

ஆக்குவாயெள்ளெண்ணெய்சேர்தானைந்து அதின்யாதி தயிர்தண்ணீர்பால்சேரைந்து, தூக்குவாய்கலக்கவகைமருந்துகேளு துடியான திரிகடுகுதிரிபலாதி, மாக்குவாய்கஸ்தூரிமதுரங்கோஷ்டம்மாஞ்சில்முச்சீரகமும்பூஞ்சாந்துகெந்தம், பாக்குவாய்மஞ்சள்ரோகணி செவ்வள்ளி பச்சிலைபூலாமூலங்கிளியூறல்கூட்டே. ௧௫௩

கூட்டுவாய்சதகுப்பிலவங்கப்பட்டை கூறேதம் வகைக்கரைப்பலமதாக, ஆட்டுவாயாவின்பால்விட்டுநன்றாய் அப்பனேகியாழமெண்ணெய்தனிற்கரைத்து, நாட்டுவாயடுப்பேற்றிக் கொதிக்கும்போது நலமாகமுன்னரக்குக்கியாழம்விட்டு, மூட்டுவாயடுப்பேற்றி முதிராமற்றான் முன்னவற்குப்பூசித்துவடித்திடாயே. ௧௫௪

வடித்திட்டதைலமதுமுழுகும்போது வாகாகத்தீருகிறவியாதிகேளு, பிடித்திட்டமேகத்தின்சூலைபதினெட்டும்போனவாதத்தின் சூலைதானும், மடித்திட்டவாதசுரம்பித்தசுரம்வாய்வு மயக்கமொடுசிலேத்மசுரமாண்டுபோகும், அடித்திட்டுச் சண்ணுமடா யிந்தவெட்டையெல்லாம் அணுகாதேயக்கினியாமந்தந்தானே. ௧௫௫

மந்தமொடுபொண்டுவகையெல்லாம்போகும் மைந்தனேகண்புகைச்சல்கைகால்காந்தல், பெந்தமாமுடம்பெரிவுசுவாசகாசம் பின்பாராதோடுமடாமேகமெல்லாம், பந்தமாம்பத்தியங்கள்புளிகசப்பு பாங்கானபுகையேரடுபெண்ணுந்தள்ளு, இந்தவகையென்னைப்போலியாருஞ்சொல்லார் இகத்திலுள்ளோர்பிழைக்கவென் றிரங்கினேன்.

## வில்வாதிலேகியம்.

இரக்கியேலேகியமொன்றுசொல்லக்கேளு இதமானவில்வாதியென்றநாமம், பாங்கியேவில்வம்விலாமிச்சைகோரை பாங்கானசஞ்சீவிவகையொன்றுக்கு, தாங்கியேகீழ்நாடன்பலந்தானெட்டு தாளிடத்துக்கல்வெள்ளநீரிற்போட்டு, அரங்கியேசோடசத்தொன்றுக்காய்ச்சி அப்பனேகொம்பாக்குச்சேர்தான்ரண்டே. ௧௫௭

ரெண்டானதூணிநீரெட்டொன்றாக்கி நினைவாக எள்ளெண்ணெய்படிதான்சுத்தி, குன்றானவாவின்பால்படிதானஞ்சு குலமானகற்கவகைசொல்லக்கேளு, நன்றானதிரிடுகுந்திரிபலாதி நலமானகஸ்தூரிமதுரங்கோஷ்டம், கன்றானவிருசீரபாஞ்சில்மஞ்சள் கருதுகெந்தங்கிளியூறல் பூஞ்சாந்தெள்ளே.
௧௫௮

என்னவேசெவ்வள்ளிலவங்கப்பட்டை இதமானபச்னசயோ
டுபூலாவேலம், பன்னவேவகையொன்றுபலந்தான்வாங்கிப்பாங்கா
னவாவின்பால்விட்டேயாட்டி, முன்னமேகியாழமென்ணெய்தனிற்
கரைத்துமோகமாயடுப்பேற்றிக்கமலபாதக், கன்னவே முதிராமல்
கவனமாகக் கணபதியைப்பூசித்துவடித்திடாயே. ௧௫௯

வகுத்திட்டதைலமதுமுழுகும்போது வாகாகத்தீருகிறவியாதி
கேளு, பிடித்திட்டமேகநீரிருப்பதும்போம் பேரானபித்தவகைநாற்
பதும்போம், துடித்திட்டகுன்மமெட்டுந்தொலைந்துபோகுந்தொலை
யாதசிரசில்நோய்சொல்லாதோடுங், கடித்திட்டமேகவகை வறட்சி
யெல்லாங் காணுமலோடுமேடாகருதிப்பாரோ ௧௬௰

## குமரித்தைலம்.

கருதியேநீகேளுபுலத்தியனேயையா கருவானகுமரியிடத்தைல
ஞ்சொல்வேன், விருதானகுமரிச்சாற்படியிரண்டுவெள்ளாவின்பால
துதான்படியிரண்டு, கருதானஎள்ளெண்ணெய்ப்படியிரண்டுசாற்று
கிறென்கற்கவகைதிரிககிருகோஷ்டம், வருவானமாஞ்சியொடு திரி
பலையுஞ்சீரகம்மதுரமொடுபூஞ்சாந்தோடேலமென்னே ௧௬௧

என்னவேபேச்சையிலைபூலாமூலம் இதமானலவங்கபத்திரியு
ம்பட்டை, அன்னவேசெவ்வள்ளியக்கிராகாரம் அருளான கஸ்தூரி
லவங்கங்கெந்தம், தின்னவேரோகணியும்செண்பகப்பூ திப்பிலியும
ந்திஷ்டிசோம்புமஞ்சள், பன்னவேவகையொன்றுபலமரைதான்வா
ங்கிப் பரிவானவாவின்பால்படிவிட்டோடே ௧௬௨

ஆற்றியேகரைத்தெண்ணெய்சாற்றினுள்ளே அப்பனே யடுப்
பேற்றிக்கமலமாக, மூட்டியேமெழுகுபதமாகவாங்கி முதிராமல்வ
டித்ததனைச்சீசாவில்விட்டு, நாட்டுவாய்தாளியத்தில்வைத்துமுடிநல
மாகமண்டலங்கால்சென்றபின்பு, தாட்டிகமாய்மண்டலந்தான்முழு
கும்போது சாதகமாய்த்தீருநோய்சாற்றக்கேளே ௧௬௩

கேளடாமேகமென்றதெல்லாம்போகுங் கெடியான வஸ்திசுர
ம்வெட்டைபோகும், தாளடாபித்தமெல்லாஞ்சாந்தமாகுஞ் சரீரத்
தில்வறட்சிமூதலூறல்போகும், வேளடாசூட்டமெட்டும்பாண்டுமா
றும் வெளியானதேகமெல்லாம்வண்டுபோலாம், வாளடாவயித்திய
ர்க்காய்த்தைலஞ்சொன்னேன் வளமானபனமுடையோப் மகிழ்ந்து
பாரோ. ௧௬௪

## கொம்பரக்குத் தைலம்.

மகிழவேகொம்பரக்குத்தைலங்கேளு மகத்தானகொம்பரக்கு
பலந்தானெட்டு, நெகிழவே துணிநீரெட்டொன்றாக்கி நிசமானதா
ளிக்குள்வடித்துவிட்டுத், தாழவேயெள்ளெண்ணெய் சேர்தானேஞ்
சு தயிர்தண்ணீர்சேரிரண்டுபால்சேரஞ்த, நிகழவேகாடியது சேர்
தான்ரண்டு நிசமாகக்கற்கவகைசொல்லக்கேளே, ௧௬௫

கேளப்பாசதகுப்பைகடுகுரோணிகிளியூறல்பூஞ்சாந்துபச்சை
ப்பூலா, நாளப்பாசெவ்வள்ளி லவங்கப்பத்திரி நலமான லவங்கத்
தோல்மாஞ்சிக்கோஷ்டம், தாளப்பாகஸ்தூரிமதுரங்கெந்தந்தயவா
கவிருசீரகம்விருகுவேலம், ஆளப்பா வகையொன்று கழஞ்சிரண்டு
அப்பனெயாவின்பால்விட்டுஆட்டே, ௧௬௬

ஆட்டுவாயெண்ணெய்க்குட்களைத்துவிட்டுஅடுப்பேற்றிமெழு
குபதமானவாறே, நாட்டியேவடித்ததனைமுழுகும்போது நலமாக
த்தீருகிறவியாதிகேளு, தாட்டிகமாய்பித்தவெட்டையஸ்திசுரம்போ
ம் தலைமயக்கம்வாயூறல்சாந்தமாகும், வாட்டிப்போர்சீதசுரம்மாண்
டுபோகும் வற்றியதொர்தேகமெல்லாமூறும்பாரே ௧௬௭

ஊறுமேகனவெட்டைக்கனசுரங்கள் உத்தமனேகனப்பாண்டு
வெளுத்ததேகந், தேறுமேதிரேகத்திவ்வலிகடுப்புத் திறமானசூலை
யெல்லாந்தீருந்தீரும், நாறுமேகற்றாழைப்புறங்கைவீசிநலமானதழு
தலையுநாடாதோடும், சீறுமேகாசமெல்லாந்தீர்ந்துபோகுந் திறமா
னவொன்றைவிட்டொருநாளென்னே, ௧௬௮

## மிருகாமலத்தைலம்,

என்னவேமத்தியந்தான்புளிகசப்பு இதமானபுகையோடு பெ
ண்ணுமாகா, தள்ளவேதைலமொன்றுசொல்லக்கேளு தளமானமி
ருகாமலத்தைலஞ்சொல்வேன், நன்னவேமிருகாமழச்சாறுபடிரண்
டு நலமானகாணிச்சாறுபடியிரண்டு, பன்னவேகுமரிச்சாறுபடியிர
ண்டு பாங்கானசெவ்விளநீர்படிதானெட்டே, ௧௬௯

படியானசிறுகீரைசாறுபடிரண்டு பழுதில்லாவாவின்பால் படி
தானிரண்டு, நெடியானயெள்ளெண்ணெய்படிதான்மூன்றுசேர்க்க
விதிற்கற்கவகை மருந்துகேளும், கொடியானமதுரமொடுகோஷ்ட
மேலங் குரோசானிபச்சைபிலைப்பூலாமூலம், கடினானகஸ்தூரி மா
ஞ்சில்தீபங் கருவானபத்திரியும் சாதிக்காய்கூட்டே. ௧௭௰

கூட்டிவாய்லவங்கப்பட்டை திரியும்பட்டை கொடிதானதிரிகடுகு திரி
பலாதி கூட்டிவாய்பூஞ்சாந்து சோமபுவால்மிளகு நலமானவகையொ
ன்றுகழஞ்சு மூன்று ஆட்டுவாய்ப்பாலின்பால்விட்டுநன்றாய் அப்பனேசா
மெணமெணயாணிற்கரைத்து மூட்டுவாய்பேற்றிக்கமலமாக முதிரா
மல்சணபதிக்குப்பூசைபண்ணே. ௱௭௧

பண்ணியேமெழுகுபதந்தனில்வடித்துப் பாக்காகவுருட்டிவாரதீ
ருநோய்கேள கண்ணிலேகாசமோடந்திமாலை கருவானமேகத்திரநோய்
தொண்ணூற்றாறு மண்ணிலேபித்தவெட்டைபித்தவாய்வு மயக்கமுட
னஸ்திவெட்டையாண்டுபோகும் தண்ணிலேயுடல்வெரிவுகைகால்கள்
கதல் தளமானவுஷ்ணநோய்சாராதென்னே. ௱௭௨

## சங்கனுதித்தைலம்.

சாரவேசங்கனுதிக் தைலஞ்சொல்வேன் சாரமான புலத்தியனே
சொல்லக்கேளு சேரவேபலாக்காவின்சங்கனத்தின் செப்புகிறேனொ
டையொன்று துக்கியேதான் வாரவேவிலாமிச்சை வெட்டிவேரைவ
கையுடசீ திவொடுசேர்ந்துமுட்டி காரவேபோர்முட்டிபோராமல்விகரு
வானசிற்றாமல்லியசுவமாமே. ௱௭௩

ஆமப்பாநன்னாரிபற்பாடகந்தான் அப்பனேவகையொன்று பலந்
தானாலு போமப்பாவிருதுணிவெள்ளநீரில் பொடியாக விடித்திடித்த
டுப்பிலேற்றி நாமப்பாசோடசத்தொருக்கக்காச்சி நலமான பாண்டத்
திலவடித்துக்கொண்டு தாமப்பாசெவ்விளநீர்படியிரண்டு தப்பாமல்
காணிச்சாறுபடியிரண்டுவாரே, ௱௭௪

வாரப்பாசிறுகீரைபடிதானொன்று வாகானபொடுதலைச்சாறுபடி
யொன்று சேரப்பாவல்லாரைபடிதானொன்று சிறுசின்னிச் சாறுதான
படிதானொன்று காரப்பாபொற்றலைச்சாறுபடியொன்று கருவானநெல்
லிபிஞ்சாறுபடியொன்று ஆமப்பாகர்ப்பூரவள்ளிச்சாறு அழகாகக்கூட
விட்டுப்படிதானொன்றே. ௱௭௫

ஒன்றப்பாசாமைவிடவிழுதின்சாறு உத்தமனேயெள்ளெண்ணெ
ய்ப்படிதான்மூன்று நன்றப்பாநறுசெய்தான்படிதானொன்று நலமான
வாவின்பால்படிதானாலு குன்றானதயிர்தண்ணீர்ப்படியிரண்டு குறை
யாமலபாண்டத்திலூற்றிக்கொண்டு சென்றுநீயடுப்பிலேகொதிக்கவை
த்துத்திறமானகடைச்சரக்குச் சொல்லக்கேளே ௱௭௬

கேளப்பாதிரிகடுகு திரிபலாதி திருவைபாக்கஸ்தூரி மதுரமேலம் தாளப்பாபூஞ்சரந்துகிளியூறாபட்டை தளமானலவங்கப்பத்திரியும்பட்டை நாளப்பாகிராம்புசாதிக்காய்பத்திரி நலமானபச்சையிலை பூலாமூலம், ஆளப்பாசெவ்வள்ளிசெண்பகப்பூ அப்பனேகெந்தமொடுசேரகம் ரண்டே, ௱௭௭

ரெண்டானசெங்கழுநீர்கோஷ்டமக்கிரா கிலேயானமஞ்சிஷ்டி பலசமஞ்சள் செண்டானசந்தனமுமுத்தக்காசும் திருக்கான வலம்புரிக்காயிடம்புரிக்காய் குன்றுமல்வகையொன்று பலமகாதான்வாங்கி குலமானவசுவின்பால்விட்டேயாட்டி யென்றான ✻ மேஷப்பால்படியிரண்டில்கரைத்து விறவேவெண்ணெயிலேவிட்டுக்கேளே. ௱௭௮

✻ மேஷம்—வெள்ளாடு,

கேளப்பாவடுப்பேற்றி கமலமாகககிருமையால் மெழுகுபதக்கன்னிலேதான் நாளப்பாகணபதிக்குபூசைபண்ணி நலமானசம்பளியால் வடித்துக்கொண்டு தாளப்பாகுங்குமப்பூகோரோசனையும் தளமானபுழுகிலேசமூர்கவீகம் கேளப்பாபொடித்திட்டுக் கலசத்துள்ளேகுணமாகத்தாளியதில்வைத்துமூடே; ௱௭௯

மூடியேமண்டலங்கால்சென்றபின்பு முழுகிவரச்சீயக்காயரைப்பதாகும் நாடியேதிருஷ்டிரவியாதிகேளு நாட்டாதுமேகமென்றதிருபதுந்தான்சாடியேசீரிழிவுநீருககால் தள்ளுண்டுபோகுமடாசுஷயந்தா னெட்டும் சாடியேகண்ணெரிவுகண்புகைச்சல் கையெரிவுகாலெரிவு மோடுக்காணே ௱௮௰

ஓடுமடாபிரமியங்கள் ரணக்கிரந்தி உத்தமனேகற்றாழைநாற்றந்தீரும் சாடுமடாவஸ்திசுரமஸ்திவெட்டை சரீரத்தில்மயக்கமெல்லாஞ்சாந்தமாகும் போடுமடாவிந்திரகண்டி புண்புரைகள்போகும் புழுவெட்டுகண்டத்தின்புரைகள்போகும் தேடுமடாபெண்மேலே மோகமெத்தச்சிகநாதேவலையிதுள்ளே தெரிந்ததில்லே, ௱௮௧

தெளிந்துகொண்டுமாயகதிற் சிக்கவேண்டாம் தேகத்தி லுள்ளநோய்தெரிப்போகும் ஆளிந்தபத்தாருகுட்டமொடு சொரிசிரங்கும் அப்பனேயுள்ளவெட்டை யாறிப்போகும் களிந்தித்தயிலமது முழுகும்போதுநன்றானபுளியோடுபுகைகசப்பு வளிந்துமிகவாயவென்றபதார்த்தத்தள்ளு வளமாகுஞ்சரீரமெல்லாம் வருணமாமே, ௱௮௨

## பொன்னாங்காணித்தைலம்.

ஆமப்பாபொன்னாங்காணித்தைலங்கேளு அப்பனேகாணிச்சாறுபடியிரண்டு காமப்பாகரிச்சாலைப்படியொன்று நலமானநெல்லிக்காய்ச்சாறுபடியொன்று தாமப்பாவெள்ளெண்ணெய்ப்படியிரண்டுகப்பாலாவின்பால்படியிரண்டு சேமப்பாமதுரமதுபலமிரண்டு சிறுகானமுலைப்பாலாலரைத்துப்போடே, ௩௮௩

போட்டப்பாமெழுகுபதந்தனில்வடித்துப் புகழாகமுழுகிவரத்திருநோய்கேள் நீட்டப்பாநேத்திரநோய் தொண்ணூற்றாறும் நீலென்மகெட்டகாசமெல்லாந்நீங்கிப்போகும் வாட்டப் பாபித்தமெல்லாம் வாங்கிப்போகும்வளமாகநேத்திரங்கள்ளொளியாய்மீறும் நாட்டப்பா வுஷ்ணநோயெல்லாந்தீரும் நலமானகீழ்க்காய்நெல்லித்தைலங்கேளே ௩௮௪

## கீழ்க்காய்நெல்லித்தைலம்.

கேளப்பாகீழ்க்காய்நெல்லித்தானுங் கிருபையாய்த்தாக்கிடித்துத்துணிநீரில் வாளப்பாவெட்டொன்றாய் வடித்துக்கொண்டுவளமானவெள்ளெண்ணெய்ப்படியிரண்டு நாளப்பாவாவின்பால் படியிரண்டுநலமானசீரகந்தான்பலமிரண்டு வேளப்பாபாலிலேயரைத்துவிட்டுவிருதாகமெழுகுபதம்வடித்துவாங்கே. ௩௮௫

வாங்கியேமுழுகிவரப்பித்தவெட்டை மயக்கமோடுமஞ்சள் காமாலைதீரும் தாங்கிதேவாங்கியெல்லாந் தடாறுண்டோ போம் தலைமயக்கம் வாயூறல்சாந்தமாகும் தேங்கியேயு சுரங்கள்தீர்ந்துபோகும் ஏங்கியேதிரியாதேமனஞ்சோமபாதேஎளிதல்லநோயப்பாவிரக்கிப்பாரே ௩௮௬

## ஆதண்டத்தைலம்.

பாரப்பாசிரசிலுள்ளசூலைதீரப் பக்குவமாய்நதலொன்றுசொல்லக்கேளு நேரப்பாவாதண்டநெச்சிசங்கு நீலவாகவெருக்கோடு சிற்றாமுட்டி ஆரப்பாவகையொன்றுபலம்பத்தாகும் அப்பனேதாணிநீரெட்டொன்றாக்கிக் காரப்பாவெருக்கிலிடபழுப்புச்சாறுகருவான்படியொன்றுபழச்சாறொன்றே, ௩௮௭

ஒன்றப்பாஎள்ளெண்ணெய்ப்படிதானொன்று உத்தமனே வேப்பெண்ணெய்ப்படியரைதான்கூட்டி நன்றப்பாதிரிகடுகு வோமப்பூண்டுநலமானவசம்பேலமஞ்சள்கூட்டிச் சுன்றப்பாவரைத்தெண்ணெய் தனிற்கலக்கித்து சுருவானமெழுகுபதந்தனில்வடித்து மொன்றப்பாமுழுகிவரத்திருநோய்கள் முதலானசிரசிலுள்ளசூலைபோமே. ௩௮௮

சூலைப்போம்வாயுவெல்லாஞ் செல்லாதோடுஞ்சுருக்காணவாதத் தின்சூலைதீரும் பாலைபாந்திமிர்வாதமிசைப்புத்தீரும வயிற்றிலுள்ளவா யுவெல்லாம் வாங்கிப்போகும் சோலைபோஞ்சிறுகந்ப்பு நேத்திரக்குத்த ல்சொறிசிரங்கு கரப்பானுஷ்டணங்கள் தீரும் ஆலப்பா பத்தியந்தான் புளிகசப்பு அப்பளேபுகைவாய்வுபதார்த்தந்தள்ளே, ௱௮௯

பதின்மூன்றுசன்னிக்குத்தயிலம்,

தள்ளவேசன்னியெல்லாங்கடலேபுக்கும தயவாகத் தைலமொன் றுசொல்லக்கேளு நள்ளவேவேப்பெண்ணெய்ப் புங்கவெண்ணெய் நலமானபுன் பெண்ணெய்பசுவினெய்யும் கள்ளவேகாட்டிலுப்பைக்கிண்ணெ ண்ணெயக் கருவாகச்சமன்கூட்டிச்சட்டியிலேவார்த் தள்ளவே மூசுறு முட்டைகாலதாகுமடைவிலேயெண்ணெய்ப்படிகாலதாமே. ௱௯௰

சாலானபடிவிதஞ்சேர்த்துக்கொண்டு கருவான * குக்குடத்தின் முட்டைபத்து மாலாகமஞ்சளையுங்கூடவிட்டுமயங்காதேகடைமருந்து சொல்லக்கேளு சாலானசாதிலிங்கந்தீமுறுகவே சமர்த்தானகெந்திரச மபாஷணந்தான் ஆலானாபியுடன்மிளகுதிப்பிலியும் அழகானபாளை திப்பிலியும்போடே, ௱௯௧

* குக்குடம்-கோழி,

போடுவாய்லவங்கமொடுநேர்வாளந்தான் புகழானகழஞ்சு நிறைச மனாய்க்கூட்டி நாடுவாய்கொடிவேலியாழத்தாலே நலமாகச்சாமமொ ன்றரைத்துக்கொண்டு சாடுவாயெண்ணெயிலேதான்கரைத்துச்சதுரா கக்கொதிக்கையிலேயெருக்கம்பாலும் போடுவாய்கொடுக்கள்ளிசதுரக் கள்ளி குணமானவிலைக்கள்ளிப்பாலுங்கூட்டே. ௱௯௨

கூட்டியேதிருகுகள்ளி*நாணுங்கள்ளி கூசாதேபடர்ந்திருந்தமுள் ளிககள்ளி சாட்டியேபால்வகைதானுழக்குமாகும் சாதகமாயெண்ணெ யுடன்கலந்துகொண்டு மூட்டியேகமலமாக தீயிலன்பாய் முதிராமற் கொதிக்கையிலேகஸ்தூரிகேளு நீட்டியேயஞ்சுபணமுலைப்பாலாலேநீ யரைத்துக்கரைத்தெண்ணெய் தன்னில்வாரே, ௱௯௩

* நாணுங்கள்ளி-இலைக்கள்ளி.

வார்த்திடுவாய்முலைப்பால்தான் படிகால்விதம் வளமான தேசிப் பால்படிகாலாமே சேர்த்திடுவாய்க்காட்டெருமைப் பால்படிதான் இரி யமலெண்ணெயிலேவிட்டுக்காய்ச்சி ஆர்த்திடுவாயாற்றலரியிலைகால் போடு அன்பாகவெள்ளுள்ளிபரத்துப்போடு மூர்த்திடவேமெழுகு பதமானவாறே முன்னவனைப்பூசித்து வடித்திடாயே, ௱௯௪

வடித்திட்ட தைலமதைப் பானையிலேத்தி வாகு கோரோசனையுங்
கழஞ்சிபொடித்திட்டு பிததிட்டசன்னிவகை பதின்மூன்றுக்கும் பேரா
கைகரணாடிவிறைநீயகதாயானல. துதித்திட்ட சன்னியெல்லாக தொலைந
துபோகும் துடியானவிசுவுக்குத் துவளை போட, கடித்திட்டநரம்பெலலா
மிருதுவாகுமநலமில்லாவிசுவெல்லாநளினமாமே ௱௯௫

நிலப்பனைககிருகம்.

நள்ளவே இருதமொன்று சொல்லக்கேளு நலமான நிலப்பனையு
மொதியம்பட்டை, விள்ளவேகருங்காலிநாகப்பட்டைவிதமான*வேகந
ணிடபட்டைதானும், அள்ளவேவகையொன்றுபலமபத்தாக அப்பனே
யிடித்துநன்றாயிருதுணிநீரில் தள்ளவேசோடசத் தொன்றாகக் காச்சி
த்தளமானவாவின்பால் படிதான்ரண்டே ௱௯௬

() வேந்தன்பட்டை அரசன்பட்டை.

ரெண்டப்பாவாவின்பால் டிதான்ரெண்டு நினைவாகப்புளியாரை
ச்சாறுபடியொன்று விண்டப்பாகோவைவிட தண்டுச்சாறு விதமாகப
படியதுதான்கூடவிட்டு நன்றப்பாபொன்முசுட்டைசிறுகாஞ்சோறிந
லமானவிளாம்பிசித்துகொத்துமல்லி கறைப்பாதிரிகடுகுதிரிபலாதி கரு
வானபேரீச்சுமுந்திரிகையாமே, ௱௯௭

ஆமப்பாகர்க்கடகமாம்பருப்பரத்தை அப்படியே காட்டத்திகீழ்க்
காய்நெல்லி நாமப்பாவதிவிடையம்கூவிளத்தின்பிஞ்சுநலமானவிளாம
பிஞ்சுமாதுளைபின்பிஞ்சு தாமப்பாசந்தனமூஞ்சாத்திரபேதி தளமான
புளிவிரைத்தோல்மூத்தக்காசு வேம்ப்பாசிறுநாகம்லவங்கப்பட்டை வி
தமானகுரோசாணியோமங்கூட்டே, ௱௯௮

கூட்டப்பாமருந்துவெள்ளை யமுக்சுரூவேர்கூச தேவதைக்கிரண்
டுகழஞ்சுவிதம் ஆட்டப்பாவாவின்பால்விட்டரைத்து அப்பனேநெய்த
னிலேகரைத்துவி டூட்டப்பாவடுப்பேற்றிக்கமலமாகமுதிராமல்மெ
ழுகுபதமானபோது நாட்டப்பாவடிகொண்டு பரணிசெய்நலமாகவிரு
நோக்கழஞ்சிகொள்ளே. ௱௯௯

கொள்ளவேபெரும்பாண்டுவெலும்புருக்கி கூருனபிரமியங்கள்க
டுப்புமூலம் விள்ளவேகிராணியதையெல்லாந்தீரும் விதமானசுக்கிலந
தானிறுகுமபாரு தள்ளவேசடம்வெளுப்பு கைகால்காந்தலதளமானகு
திரெரிப்புநீகடுப்பு நள்ளவேதீருமடாபத்தியங்கா நலமாகச்சிரககி
யாழுங்கொள்ளே. ௨௱

## பொன்னாங்காணிகிருதம்,

கொள்ளவேகிருதமொன்று சொல்லக்கேளு குறிப்பான காணிச்சாறுபடிதானென்று நல்லவேபொற்றலையான் சாறுபடியொன்று நலமானபழச்சாறுபடியரைதானவிட்டு விள்ளவேயாவின்பால் படிதானென்றுவிருதானவாவின்பால் படிதானென்று தென்னவேமதுரமொருபலந்தான்ரெண்டு தெளிவானவாவின்பால்விட்டுஆட்டே, ௨௱௧

ஆட்டியேநெய்க்குள்ளேகரைத்துவிட்டு அடுப்பேற்றி மெழுகுபதமானவாறே நீட்டியேசாதிக்காய்சாதிபத்திரி நிளைவாகக் கோரோசனைக்கற்கண்டப்பா நாட்டியேகழஞ்சுனிறையொடித்துப்போட்டுநலமாக்கிண்டிவைத்துக்காணடிவிதம். மூட்டியேயிருநேரங்கொண்டாயானால்முக்கியமாய்த்தீருமடாமூலச்சூட்டே. ௨௱௨

சூட்டுடனேயுஷ்ணரோகமெல்லாந்தீரும் சுகமாகமேமெலிவுகைகால்காந்தல் நாட்டுடனேயுலத்துஇளைப்பமேகந்தீரும் நணுகாதுவயிற்றிலுள்ளெரிச்சலெல்லாம் வாட்டுடனேநேத்திரமெல்லாங் குளிர்ச்சியாகும் வளமாகும்வாய்க்காற்றம்விட்டுப்போகும் தீட்டுடனேயிறங்குகின்ற பீர்பியந்தான் தீருமடாபுளியாரைக்கிருதங்கேளே, ௨௱௩

## புளியாரைக்கிருதம்,

கேளடாபுளியாரைச்சாறுபடியொன்று கிருபையுள்ளவல்லிச்சாறுபடிதானென்று நாளடாகாணிச்சாறுபடிதானரெண்டு நலமானசெவ்விளநீர்படிதாரண்டு தாளடாவாவின்நெய்சேர் தானஞ்சுநாளமான கருவாவின்பால்சேரஞ்சு ஆளராசிரகமூடாசக்காயும் அப்பனே மதுரமொருகழஞ்சுநாலே. ௨௱௪

காலப்பாவாவின்பால்விட்டேயாட்டி நலமானநெய்சாற்றிற் கரைத்துவிட்டு வேலப்பாவடுப்பேற்றிமெழுகதனல் விருதாக வடித்துமேற்பொடிதான்கேளு காலப்பாபத்தியமேலாம் ரண்டுகருவாகக கழஞ்சிரண்டுபொடித்துத்தூவி ஆமப்பாகற்கண்டுபலந்தானென்று அப்பனேபொடித்திட்டுக்கரண்டிநிறையாமே. ௨௱௫

ஆரப்பாவிருநேரமண்டலங்கொள் அப்பனேபித்தவெட்டை பித்தவாய்வு தாமப்பாவெரிச்சலொடுநீர்ச்சுருக்குத் தளமான மயக்கமெல்லாந்தவறிப்போகும் நாமப்ப யூமல்ரோசியங்கள்கூட துபித்தமெல்லாநடுங்கியோடும் போமப்பாவந்திமுதல்சரீரமுழும்புதிதாகவின்னமொருகிருதங்கேளே. ௨௱௬

## வல்லாரைக்கிருதம்,

கேளப்பாவல்லாரைக்கிருதஞ்சொல்வேன் கொடியானவல்லாரைச்சாறுபடியொன்றுதானப்பாகாணிச்சாறுபடிதானொன்று தளமான பொடுதலைசசாறுபடியொன்று நாளப்பாபழச்சாறுபடியரைதான்விட்டுநலமானவாவினெய்ப்படிதானிரண்டு ஆளப்பாவாவின்பால்படிதானிரண்டுஅப்பனேகற்கவகைசாதிக்காயே, ௨௱௭

காயோடுபத்திரிமாசக்காயும் கருவானசிங்கியோடுகோட்டாத்திப்பூபோடுமிளகேலரிசியுப்பு தளமானமதுரமோடு கைகையொன்றுக்குப்பாயோடும்குசுமுசினிதானறைத்தாண் தூக்கிப்பருவமாயாவின்பால்விட்டேயாட்டி வாயோடுகரைத்துவிட்டடுப்பிலேற்றி வளமாகமெழுகுபதந்தனில்வடித்தே ௨௱௮

வடிகதிட்டுச்சீனிரண்டுபலந்தான் தூக்கி வாகாகப் போட்டதிலே யின்டிக்கிண்டிக் கடிகதிட்டுக்காண்டிநிறைகொண்டாயானுல் கலங்காதேமண்டலத்தில் தீருநோயகள் தடித்திட்டமேகவகை யெல்லாந்தீரும் தளமானகுளிர்ச்சியாஞ்சரீரமெல்லாம வெடித்திட்ட ரணங்கிரந்திவிழலாய்ப்போகும் விருதானபிரமியமும்விட்டுப்போச்சே, ௨௱௯

போச்சப்பாரசபஸ்பம்வைத்துக்கொள்ளு புசமானமேகவகை குலைபோகும் காச்சப்பாகுஷ்டமொடுசொறிசிரங்குகருவான () சிங்குவைநோய்காணுதோடும் வீச்சப்பாகிரந்தியொடு யோனிற்பற்றுவிதமானபுண்புரைகள்விழலாய்ப்போகும் மாசப்பாநீருகல் குறியெரிப்புமைந்தனேயஸ்திரணமாறிப்போமே. ௨௱௰

() சிங்குவை நாக்கு.

## கூழ்மாண்டக்கிருதம்,

ஆறுமேகூழ்மாண்டக்கிருதங்கேளு அப்பனேபூசினிக்காய்ச்சாறுபடிசண்டு நாறுமேதானமுயிட விருதின்சாறு நன்றுகடடியொன்று தென்னம்பூச்சாறுகாருமேபடியொன்றுகூடவிட்டுக் கலங்காதேகுமரிச்சாறுபடிதானொன்று சாறுமேசெவ்விளநீர்படிதானொன்று களமான வாவினெய்ப்படிதானிரண்டே. ௨௧௧

ரெண்டானதறகுவகைசொல்லக்கேளு நிலையானசாதிக்காய் சாதிப்பத்திரி பண்டானசாதிககாய்திரிபலாதி பாங்கானசீரகமுமேலம்வாள்மிளகு குன்றுனகாட்டத்திசர்க்கடகச்சிங் கூருனமலலியொடு குரோசானியோமம நன்றுசுக்குமுஞ்சினிகுறமூன்றதாக ஞ்மானவாவின்பால் விட்டுஆட்டே, ௨௧௨

வட்டியேபாவின்பாலபடிரண்டுக்குள் அப்பனேகரைத்துவிட்ட
டுப்பிலேற்றி காட்டியேமெழுகுபதமாகும்போது நலமாகவடிகொண்டு
கலசத்துள்ளே காட்டியேகற்கண்டுபலந்தான்ரண்டு கருவாகப்பொடித்
திட்டுக்கரண்டிவிதம் மூட்டியேமண்டலங்கால் கொண்டாயானல்மூத
ண்டபிரமியங்களமேகம்போமே. உகங

போமப்பா ஷ்ணங்களெரிவுகாந்தல் பொல்லாதநீர்க்குத்துகுறி
யெரிப்புதாமப்பாவஸ்திரணமஸ்திவெட்டை நாட்டாதுகிராணியெல்லா
கனியாகும்தாமப்பாவெறும்புருக்கிமாலையெல்லாம்தவறுண்டேபோ
குமடாபிதகமெல்லாம் ஆமப்பாவப்பிரேதம்போட்டுக்கொள்ளு அனு
காதுமே நீரற்றுப்போமே; உகச

## தூதுளைகிருதம்,

அற்றுப்போம் தூதுளைக்கிருதங்கேளும் அப்பனே தூதுளை யெ
டைதானின்னாறு கறுப்பாநெல்லிமுள்ளி கண்டங்கத்திரிகறுது சிறுகா
ஞ்சொறிபாடாச்சாலட சறறுப்போம்மிளகுதிப்பிலிகடுக்காய் சதிறுன
தூராதல்லையும வகையொன்றுக்கு கறுப்பாம்பலமநாலு கொண்டி
டித்து நலமாகவிருதுணிச்சிரிலூட்டே, உகரு

ஊட்டியேசாடசத்தொன்றாகக்காய்ச்சியுத்தமனேவடித்துவொ
ருபாண்டத்தூற்றி காட்டியேபாவினபடிதான்ரண்டு நலமானகாவி
னபாலபடிதானரண்டு காட்டியேதிரிகடுகுதிரிபலாதி கருவானதாளிச
ம்கோஷ்டமக்கிரா வாட்டியேவாய்விளங்கஞ் சீரகமுமோமம் வால்மிள
கோடத்ததரண்டுமேலந்தானே, உகசு

ஏலமொடுகிராமபுசாதிக்காய்பத்திரி எடுத்திடுவாய் வகையொன்
றுக்கழஞ்சுமூன்று ஆலமொடுவாசில்பால்விட்டேயாட்டி அப்பனேநெ
ய்தனிலேகரைத்துவிட்டு ஞாலமொடுமெழுகுபதமாகுநேரம்நலமாகவ
டிகொண்டுரண்டுவிதம காலமேமண்டலந்தான்கொண்டாயானல்சரு
வாண்டசயம்மெட்டுகொணுதன்றே, உகஎ

காணுதயிளையோடிருமல் காலப்கலக்காதே சேத்துமநோய் தொ
ண்ணூற்றுமநானுமே மேகமெல்லாநாடாதோடும் நலமான வுஷ்ண
நீர்களெல்லாந்தீரும ஆணுமேமீளையிலைரட்யத்துப்போகும் அப்பனே
வாயுவெண்பதெல்லாந்தீரும தோணு மருண்டலமாமவாய்வுதீரும்குறி
ப்பகவிஷயமொருச்சந்தேகோ உகஅ

## கண்டகத்திரிக்கிருதம்,

கேளடா கண்டங்கத்திரிக் கிருதஞ்சொல்வேன் கிருபையங் கண்டங்கத்திரி தூக்கப்பா நாள்டா சிறுகாஞ்சொரி நல்லமானதா நாளசங்கு மூலமாளடா வகையொன்றுபலந்தானஞ்சு வகையாகவடித்திரு தூணிச் சில் தாளடா சேட சத்தொன்று கக்காயசித்தப்பாமலவடிகொண்டயா ண்டத்திலூற்றே, ௨௧௯

ஊற்றியேபாவினெய்படி காண்ரண்டு உத்தமனேயாவின்பாற்படி நான்கண்டு தாத்தியேகற்கவகைசொல்லக்கேளு தனமானதிரிகடுகுதிரிபலாதி ஏற்றியேயேலமோடக்கிராகாரம் இதமானகிராம்புசாதிக்காய்ப தகிரி ஆற்றிவேதாளிசம்லவங்கப்பட்டை அரதனைதாளகிசிரம் ரெண்டோரமமாமே, ௨௨௰

ஆமப்பாவகையொன்று கழஞ்சுமூன்று அப்பனேயாவின்பால்விட்டேயரட்டி நாமப்பாநெய்கனிவேகரைத்துவிட்டு நலமாகமெழுகுபதங்கனில்வடித்து தாமப்பாசரண்டிநெற்கொண்டாயானால் தவறுடைசயசாசமெலவாகதிரும் வேமப்பாவலிப்பிசிவும வெகுண்டுபோகும் விருவானவயிறுவிபமலதளரும்பாரே, ௨௨௧

பாரப்பாவிஷக்கடிகளெல்கடிகள்தீரும் பகறுகின்றவலிப்பெல்லாம்பறந்துபோகும் கோபபாகுமைமெட்டு நீவிபோகுமில்லையாண பந்தாரகாசகிகும் வாசபபாசேத்துமமோ வெல்லாந்தீரும் வளமானவாய்வெல்லாமாண்டுபோகும் ஆரப்பாகாளகத்தின் பற்பங்கூட்டி அப்பனேமண்டலம்கொள்ளகுணமுபோமே ௨௨௨

## கணத்தெண்ணெய்.

போமப்பா கணத்தெண்ணெய் சொல்லக்கேளு புகல்முத்துக்கொட்டையெண்ணெய் படிதானொன்று நாமப்பா கையாஞ்சாறுநலமாங்குமரிச்சாறு நீருள்ளிச்சாறு வேமப்பாகோவைச்சாறு புளியாரைச்சாறு விதமானகர்ப்பூரவள்ளிச்சாறு தாமப்பா வகையொன்று சாறுபடிக்காலாம் தப்பாமலெண்ணெயிலேகூட்டுவாயே, ௨௨௩

வார்த்தப்பா சாதிக்காய்சாதிப்பத்திரி மைந்தனேயாசக்காய் சுக்குடகச்சிங்கி வீதப்பாகோஷ்டமோடக்கிராகாரம் இதமான சிரகம் ரண்டுவெந்தயந்தான் கர்த்தப்பாலவங்கப் பத்திரியும்பட்டை கருவாளிவள்ளுள்ளிவகையொனறுக்குச் சாத்தப்பா கழஞ்சினிமதலாக்கியே காணதளமானவாவின்பால் விட்டாட்டே, ௨௨௪

ஆட்டியேயெண்ணெயிலே கரைத்துவிட்டு அப்பனேபால்படியா
லடுப்பிலேற்றி நாட்டியேமெழுகுபதமாகவேதான் நலமாகவடிகொண்
டுசலசத்துள்ளே கூட்டியேகோரோசனைக்குங்குமப்பூ குணமானசாதி
க்காய்கழஞ்சுவீதம் ஆட்டியேபொடித்திட்டுக் கலக்கிறபாக அப்ப
னேகொடுத்துவரச்சொல்லக்கேளே, ௨௨௫

கேளடாகணைவெட்டைகணைசுரங்கள் கெடியானமாந்தமோடிப்பிச
ங்கள் நாளடாவுளர்த்துகின்றரணங்களெல்லாம் நலமாகவாறுமடா கெர்
ப்பவெட்டை தாளடாகணபாண்டுவெளுத்ததேகம் தளரான நீரிழிவு
விடாசுருதி வேளடாவுடம்பூருஷ்ணமபோதும் வெகுசுருக்காயின்
னமொருசேதிகேளே, ௨௨௬

காப்பாலெண்ணெய்,

சேதியென்றகரப்பானும் ரணத்துக்கெல்லாம் தெளிவானவெண்
ணெயொன்றுசொல்லக்கேளு சாதியென்றபூவரசுசெமகத்தாரி தளம்பூ
தகரப்பனுகண்டங்காலி வேதியென்றவிலவங்கலைகையொன்றுக்கு
விதமாகப்பலம்பத்து நறுக்கிக்கொண்டு ஆதியென்றதுணிநீரெட்டோ
ன்றாக்கி அப்பனேயாமணக்கெண்ணெய் படியொன்றே, ௨௨௭

ஒன்றப்பவெள்ளாட்டின்பால்தானொன்று உத்தமனேமிளகுசரு
ஞ்சீரகந்தான் விக்றப்பாகார்கோலம் வெள்ளுள்ளிவசம்பு வேருனத
குப்பைவலம்புரிக்காய் நறைப்பாபாக்கிபிட பட்டைதானும் நலமாகவ
கையொன்றுகழஞ்சிரண்டு தன்றப்பாமூன்படிலா லரைத்துக்கொண்டு
தளமானவெண்ணெயிலேகரைத்துவிட்டே. ௨௨௮

விட்டப்பாவடுப்பேற்றி மெழுகுபதமானால் வெருளாதேகரண்டி
நிரைகொடுத்தாயானால் தட்டப்பாசகலகரப்பானும்போகும் தளமான
கிரிப்பெல்லாஞ்சாராதோடுங் கட்டப்பாபா ரணத்தின்மேல் தடவிப்
போடகச்சாமலுதிர்ந்துபோங் கருவாய்க்கேளு பட்டப்பாபத்தியந்தா
ன்காத்தாயானால் பறக்குமடாகரப்பனோடிரணங்கள்தானே, ௨௨௯

மாந்தயெண்ணெய்,

தானென்றமாந்தெண்ணெய்சொல்லக்கேளு தயவானவாமணக்கி
னெண்ணெய்படியொன்று தானென்றவெள்ளுண்டு வசிலின் பட்டை
வளமானவுறுகுமஞ்சள் வெள்ளைப்பூண்டு கானென்றவெவ்வேறேதிப்ப
க்காய்மட்டு சருவாகவரைத்தெண்ணெய் தனிற்கரைத்துநானென்றபே
மத்துமட்டிக்காய்ப்பாலமாகப்பாதியதில் நறுக்கிப்போடே, ௨௩௰

போட்டப்பாவடுப்பேற்றிக் காய்ச்சிவத்தால் பொட்டெனவே யிறக்கியதைபிறுத்திக்கொண்டு நாட்டப்பாமூன்றுநாள் காலைசேர்வீதம் நலமாகக்காலஃமகொடுத்தாயானால் நாட்டப்பா மாந்தமெல்லாங் காணுதோடுங் கருவானவிசுவுமுதல் கண்டிப்பாகும் நீட்டப்பாபோரமந்தம பொருமமெலலாம நிலைகெட்டேயோடுமாமின்னங்கேளே, ௨௱௧

## மேகத்தெண்ணெய்.

கேளப்பாமேகமென்றதெல்லாந்தீரக் கெடியானவெண்ணெய்சொன்றுசொல்லக்கேளு நாளப்பாகோவைச்சாற் காணிச்சாறுநலமானவல்லாரைசெருப்படையின்சாறு வேளப்பாயானையிட்டெருஞ்சிச்சாறுவெகுசுறுககாஞ்சிந்தியிடதண்டுசசாறு ஆளப்பாவரசனிட டட்டைச்சாறு அப்பனேவகைக்குப்படி பரையதாமே, ௨௱௨

ஆமப்பாவாமணக்கி னெண்ணெய்ப்படிமுக்கால் அப்பனே யெள்ளெண்ணெய்ப்படிதான்முக்கால் காமப்பாசாற்றிலேவிட்டுகேசேளு சதுரானசாதிக்காய்சாதிப்பத்திரி வாமப்வாமாசக்காய் கர்கடக்சிங்கி வளமானசண்பகபபூகாட்டாசதிப்பூ வேமபபாசிறுநாகமேலவ் குரோசானி வெகுசுறுககாய் சழஞ்சிரெண்டெடைதான் தூக்கே. ௨௱௩

தூக்கியேயாவின்பால் விட்டேயாட்டிச் சுறுக்காக வெண்ணெயிலேகரைத்துவிட்டுத் தாங்கிடேசித்திரமூலிவேரின்பட்டைட சாதகமாம்பலமொன்றுகூடப்போட்டுத் தேககிடேயடுப்பேற்றி மெழுகுபதம்பார்த்துத் திறமாகவடித்ததனைக்கலசத் துள்ளே ஆகயேகற்கண்டுபலமரெண்டிட்டு அப்பனேகரண்டிநிறை கொளளுகொள்ளே. ௨௱௪

கொள்ளப்பாமண்டலந்தான்கொண்டாயானால் சூறுகெட்டமேகமெல்லாங்குளிர்ந்துபோகும் தள்ளப்பாரணைகிரந்தி விங்கப்புற்று தள்ளுமேயேணிப்புற்றரிகிரந்தி கள்ளப்பாவெடிசிலேமே-ஊறல் நலமானசொறிசிரங்குநடாதோடுக் தள்ளப்பா குஷ்டரததம்பிரமியங்கள்தவறுணடேபோகுமடாசாந்துபாரே, ௨௱௫

## விழுதியெண்ணெய்,

பாரப்பாகெர்ப்ப ரோயெல்லாந்தீரப பகருகிறேன் விழுதி எண்ணெய்பணபாய்க்கேளு சேரப்பாமுத்தெண்ணெய்ப படிதானொன்று திறமானவாவினெய் படிதானொன்று தாரப்பாவிழுதிச்சாற்படிதானொன்றுதளமானதிரிகடுகுவசம்பிருள்ளி ஆரப்பாகோஷ்டமொடுலவங்கமேலம் அப்பனேவெள்ளுள்ளிகாலதாமே. ௨௱௬

ஆமப்பாவாவின்பாலாலரைக்கு அப்பனேநெய்தனிலேசரைத்து
விட்டுப போமப்பாவடுபேற்றி செழுகுபதம்பார்த்துப் பொட்டென
வேயிருத்தொருகலசத்துள்ளே,நாமப்பாமூன்றுநாள்காலசேர்வீதம்நல
மாகக்கொண்டுவரவாறுநாள்தான்,லேமப்பா பததியந்தானுப்பைத்தள்
ளு வெகுசுறுக்காய்த்தீருமடா கெர்யபவாய்வே, ௨௬௭

கெர்ப்பத்தின்வாய்வெல்லாங் கெதிகெட்டோடும் கிட்டாதுருசக
த்தின்வலியெல்லாமபோம் கற்பத்தில்புழுககளெலலா நழுவிவிழும நா
டாதுசூலையெல்வாகளினமாகும் கற்பத்திலிசுவுமுதல் சளர்ந்துபோகு
ப்சுநதிமுப்பில்சூலையெல்லாஞ்சார்ந்தமாகும் அற்பமதுவல்லவடாசெற்ப
முண்டாம ஆச்சரியமினனமொன்றறைகிறேனே, ௨௬௮

அறைகிறேனல்லெண்ணெய்படிதானென்று அப்பனே யாவினெ
ய்படிதானென்று முறைகிறேன்முலைலோ பலதானரண்டு முளையாக
வாவின்பாலிட்டேயாட்டி கிறைகிறேன்கரைத்துவிட் டடுப்பிலேற்றிதி
னைவாகமெழுகுபதங்கனிலவடித்து குறைகிறேன்கரண்டிநிறைகொண்
டாயானல கொடிதானமேகமெல்லாங் கூறிப்போமே, ௨௬௯

கூறிப்போங்குறியெரிப்புலிங்கப்புற்று கொடிதானகிரந்தியெல்லா
ங்குடிபோமப்பா நாடிபபோமுள்ளழலைவாயநாற்றங்கள் நாடாதேயெரி
பபெல்லாகளினமகும் தேறிப்போஞ்சூலைமுதல்வெடிரணங்கள் தீரா
தகுட்டமெலலாந்தீரநதுபோகும் நாறிபபோகவெந்தியிட்டுக்கொண்டா
யானல் கடல்புக்கூமவெகுரணங்கள் குன்மந்தானே. ௨௭௰

## கலிங்காதிஎண்ணெய்.

குன்மவகைதீருதற்கு கலிங்காதியெண்ணெய் குணமாகச் செல்
லுகிறேன்புலத்தியனேகேள் கன்மமென்றதும்மட்டிக்காய்ச்சாறப்பாக
ருவாகப்படியிரண்டாலினீர்தான் தன்மமென்றபடியிரண்டு வெள்ளா
ட்டுநீர்தான்தப்பாமல்படியொன்று கூட்டிச்சேர்த்து பன்மமென்ற வா
மணக்கெண்ணெயப்பா பகராதேபடியிரண்டு கூடவாரே, ௨௭௧

## கலிங்கம் தும்மட்டிக்காய்,

வார்த்தப்பாகடுக்காயுங் கடுகுரோகணி வளமானவாய்விளங்கந் தி
ரிகடுகுமேலம் ஏத்தப்பாவிந்துப்புலவணயலுப்பு இதமானகல்லுப்புச்ச
வட்டி லுப்பு காத்தலபாநவாச்சாரமெவாச்சாரங்காரங் கலக்காதே யப்
பளாகாரங்கூட்டி பதார்த்தப்பாவால் மிளகுயானைத்திப்பிலியும்பாங்கா
னவெள்ளுள்ளிப்பருபபுமாமே, ௨௭௨

ஆமப்பாநிலவாகைகண்டங்கத்திரி அப்பனேவெள்ளைச் சாரணை
யின்மூலம் நாமப்பாசதிச்சாரணைகீழ்க்குநலமாகவரைப்பலயாயரை
த்துகொண்டு தாமப்பாநொச்சிச்சாறு பசுமஞ்சள்சாறுக் தளமானவி
ளசிச்சாறுகுமரிச்சாறு வேமப்பாபடியரையாய்க்கூட விட்டு விருதான
கடைச்சரக்குக்கழஞ்சிமூன்றே; ௨௪௩

மூன்றப்பாவரதசிதெண்ணெய் தனிற்கலாத்து மூதிராம வடுப்
பேற்றிமெழுகுபதமானல் ஏன்றப்பாகலசமதில் வடித்துவைத்தேஎன்
னசொல்வேனக்கரைக் காலசோவீதமாகக் கான்றப்பா கொண்டுவரப்
பத்துநாள்தான் கவுசையொடுபீலிகையுங்கரைந்துபோகும் ஆன்றப்பா
பெருவயிறுவாய்வுகட்டி அணுகாதுமகோதரங்களற்றுப்போமே

அற்றுப்போம்வாயுவென்ற திரட்சியெல்லாம் அப்பனேகுணமா
குமெட்டுவாய்வு நற்றுப்போங்கெர்ப்பவலி கெர்ப்பச்சூலை நாடாதேயி
சுவுபுழுசுழுவிவிழுப் கறநுப்போங்கைகாலில்கட்டுசூலை கடல்புக்குங்கு
ந்துவலிகாணுதோடும் பற்றுப்போம்வயிற்றிலுள்ள வியாதியெல்லாம் ப
றக்குமடாவின்னமொன்று பகரக்கேளே, ௨௪௫

வாதயெண்ணெய்,

கேளப்பாவேப்பெண்ணெய்புங்கெண்ணெய்கெடியானவாமண
க்கின் புன்னையெண்ணைய நாளப்பாவெள்ளெண்ணெய் ஐந்துங்கூட்டி
நலமாகவகையொன்று படியரைதான்சேர்த்துத் தாளப்பா வெள்ளுள்
ளிவசம்புகாயம் தனமாசதிரிகடுகுவோமங்கிராம்பு ஆளப்பாசதகுப்பை
கடுகுரோணி அப்பனேசித்திரமூலமாமே, ௨௪௬

ஆமப்பாவகையொன்று பலமரைதான்வாங்கி அப்பனேகாடியா
லரைத்துப்போட்டு வேமப்பாசாடிபடிரண்டிலேதான விருகாகக்கால
துவிட்டடுப்பிலேற்றிப போமப்பாமெழுகுபதம் வடித்துக்கொண்டுபு
கழாகக்கலசமதில்பதனம்பண்ணி தாமப்பாமேற்பூசிப் பிடித்துக்காய்ச்
சத்தவறிப்போம் வாதமெண்பதுவுந்தானே, ௨௪௭

தானென்றமேகவகை சூலையெல்லாந் தளமானதிமிரவாதம் புறவி
சுவுமுதலா நானென்றவிசுவுமுதல் நடுக்குவாதம் நாடாது சிறகடுப்புந
ளிமாகும் தேனென்றகாசெடை தானுள்ளேதாக்கில் தேகத்தின் வாத
மெல்லாந்தெறிபட்டுயபோம் வானென்றநீதகவலியெல்லாந்தீரும் வள
மாகுந்துவாலேயிட வாதம்போமே, ௨௪௮

### சுகசித்தபேதியெண்ணெய்,

பேரமப்பா சுகபேதி யெண்ணெயொன்று புகலுகிறேன் முத்தெ
ண்ணெய்ப்படி தானென்று காமப்பா குமரிச்சாறுபடி தானென்று கருவா
ளாயிரமிச்சாறு படியளைநானுகும் தாமப்பா மிளகுகளிப்பாக்கு கடுக்கா
யகவருமல்கருமே விபலமிரண்டப்பா நாமப்பா பத்தகுகீர்தன்னிற்போ
ட்டுகலமாகவெட்டொன்றாய் வடித்துவாங்கிசே, ௨௪௯

வாங்கியேயெண்ணெய்தனக் குள்ளேயப்பா வளமாகக்கடுக்காயுங்
கடுகுமீராகணி தாங்கியேமிளகுடனே யுள்ளிவ்லைகயொன்று தயரும்பல்
பலமரைதானரைத்துப்போட்டு வங்கியேயடுப்பேற்றி மெழுகுபதமா
னால் என்னசொல்வேன கல்சத்துள்வடித்துவைத்து ஆங்கியே கால்சே
ர்தானகொடுத்தாயானல் அப்பனேசுகசித்தபேதியாமே. ௨௫௰

ஆமப்பா நீர்க்கட்டுவாய்வுஊதல் அப்பனேவாய்வெல்லா மகன்று
போகும் தாமப்பா சரீரமெல்லாம் குளிர்ச்சியாகும் தளராதவயிறு விம
மலதளர்ந்துபோகும் நாமப்பா மூலத்தின் சூடெல்லாமபோம நாடாது
பித்தமெல்லாங்கீழ்சாடும் போமப்பாவிதனைப்போல்சேத்தியெண்ணெ
ய்பூதலத்திற்சுகபேதி யில்லைதானே- ௨௫௧

### பழத்தெண்ணெய்,

தானென்றபழத்தெண்ணெய் சொல்லக்கேளு தவறாமல் பழச்சா
றுபடிதானென்று நானென்றமுத்தெண்ணெய் படிதானென்றுநல்மா
னகுமரிச்சாறுபடிதானென்று வேனென்றநடுக்காய்தான பலமிரண்டு
விருதாகவரைத்தெண்ணெய் தன்னிற்போட்டுக் கானென்ற வடுப்பேற்
றிமெழுகுபதமானால் கண்டப்பாவடிகொண்டு சகலசம்வாரே ௨௫௨

வார்த்தப்பாகால்சேர்தான் கொடுத்தாயானுல் வாங்குமடா பித்த
மென்றநாற்பதும்போம் ரத்தப்பாவெரிவு முதல்காந்திதீரும் என்ன
சொல்வேனுஷ்ணநோயெல்லாந்தீரும் காத்தப்பாபட்சமொன்று கொ
டுத்தாயானுல் கருவானநோயெல்லாங்காணுதோடும் பார்த்தப்பாவயிற்
றிலுள்ளவியாதியெல்லாம் பறக்குமடாபித்தநோய் பாருபாரே, ௨௫௩

### வீரபத்திரக்கலிக்கம்,

பாரப்பாவீரபத்திரக்கலிக்கங்கேளு பறக்குமடாபசாசுமுதல்சன்
னியெல்லாம் சேரப்பாதிரிகடுகு கடுக்காயிந்து திறமானவாளமொடு கி
ராம்போடேழும் வேரப்பாவெந்தயச்சாறத்தனுலாட்டி வெகுசுறுக்காய்
நல்சாமமரைத்துகொண்டு ஆரப்பாமுன்சாற்றிற்கலிக்கயபோட அப்
பனேசன்னிமுதல் தோஷம்போமே- ௨௫௪

ஆக்கிராணநசியம்.

போமப்பாவாக்கிராணஞ் சொல்லக்கேளு புசமூானசுண்டமேர்து ம்வைபமூலம் நாமப்பாவிலுப்பைப் பிண்ணாக்குமகூட்டு நலமாகமூன்னிரண்டும்ரவியுலர்த்தி சேமப்பாபொடிச்செய்து வடிகொண்டேதான்திற மானகுழலடைக்காக் கிராணஞ்செய்யத் தாமப்பாதலையிலுள்ளதோஷ மெல்லாம் சண்ணுண்டுபோகுமடாவின்னகேளே. உ௫௫

நசியம்.

சேளப்பாவிலுபபைபீட பழம்பிண்ணாக்குக் கிரிகையாய்பபொடி செய்துதுணிபிற்கட்டி வாளப்பாவாலைபீட வூசிநீரில மைந்தனேநசிய மிடச்சன்னிதோஷம தளப்பாபித்தத்தாலெழுந்ததோஷம தளமான க்பவாததோஷமெல்லாம் ஆளப்பாபிரமராடசதன்முதலாய் ஆகாயப சாசமுதலகன்றுபோமே; உ௫௬

கண்டாவிழ்தம,

போமப்பாகண்டாவிழ்சஞ் சொல்லக்கேளு புதுமைமாந் தங்க மொடு வெள்ளிமுசது சாமபபாமதுரமொடு கிராம்புதி பிலிநமா ணபவளமொடு ருத்திராட்சம் தாமப்பாகோஷ் மோடக்கிராகாரம்தள மானகாயப்பூகூ விளத்தின்மூலம் ஆமப்பாகலைக்கொம்புச்சேகுதூரா அ ப்பனேயாடாதோடை மூலந்தானே. உ௫௭

காவென்றமூலைப்பாலா லரைத்துக்கொண்டு தப்பாமல் தேன்கு த்திநாவிற்போட நாவென்றதோஷமொடு சன்னியெல்லாம்நாடாதுநா வறட்சிநாவழுத்தல் தேவென்றஸ்ரீசக்கோத்தோஷம் வாந்திதிறமானவி க்கல்முதலதிநமநீரும் வாவென்றவாதமெல்லாம் வாங்கிபபோகும் வ ளமானநாக்கின்முள்ளும் வாங்குந்தானே உ௫௮

சூரணங்களின்சுத்தி,

தானென்றசூரணத்தின் சுத்திகேளு தப்பாதே சரக்கெல்லாஞ் சூரணித்து நாவென்றவாவின்பாலாற்பிசைந்துநலமானசட்டியிலேபா லைவிட்டு வாவென்றசுத்தசலம்பாதிவிட்டு வளமாகமேற்சீலை கோடிகட் டிப் பாவென்றசூரணத்தைப் பிட்டுபோல்வைத்துப் பதமாதே வெந் தெடுக்கச்சுத்தியாமே. உ௫௯

ஆமப்பாரவியுலர்த்திப் பொடிதான்செய்து அப்பனே சமனாய்ச் சர்க்கரையைச்சேர்த்து நாமப்பாகொண்டுவரத் தோஷம்போச்சு நன் றாநச்சுத்திசெய்யாச் சூரணந்தான் தாமப்பாரோகத்தைவெல்லாதப்பா தளமானவியாதியெல்லாம் பாரிக்குபார்வேமப்பா சுத்திசெய்து கொ ண்டாயானால் வெகுசுறுககாய்த்திருமடா வியாதிகேளு, உ௬0

## செந்தூரவைப்புக்குரு,

கேளப்பாசெந்தூரப பற்பமெல்லாம் செடியாலேசிக்குமப்பூ கொ
ட்டலாகும் நாளப்பாவிதைவிட்டால் பற்பமில்லே நன்றானலோகமுதல்
சிவப்பேறுது வாளப்பாவிதுவல்லோ புடத்துக்காதி வகையறியான்
வைத்தியனல்ல மாடுமேயச்சி தாளப்பாவைத்தியர்ககாயக் கருவைச
சொனனேன தப்பாதுபற்பமுறைசெந்தூரந்தானே, ௨௯௧

## லோகசெந்தூரம்,

தானென்றலோகசெந்தூரங்கேளு தயவானயரப்பொடியில் நல்
லெண்ணெய்விட்டு வானென்றநாழிகைதான் அழுபதானல் வளமாகவ
லுத்தகலைப பிங்கானில்விட்டு நானென்றபழச்சாறுபிழிந்துவிட்டுநல
மாகக்கிண்டிவைத்து நாலாநாளில தேனென்றேயுரஞ்சியதைக் கழுவி
ப்போட்டுத் திறமாகரவியுலர்த்திப் பலந்தான்தூக்கே, ௨௯௨

தூக்கியேசுத்தித்தகெந்திகேளு சுகமாகப்பலமொன்றுகூடப்போ
ட்டுதாக்கியேபழச்சாற்றால் சாமநாலு சரியில்லாப்பொற்றலேயால்சா
மநாலு தேக்கியேபரைக்கையிலே முப்பூவப்ப திறமாகக் கழஞ்சினி
றைசேர்த்துப்போட்டு வாக்கியேபில்லேசெய்து ரவியிற்காய்ந்தால் வளி
மாணமுப்பதெருபபுத்திற்போடே, ௨௯௩

போடப்பாமுக்காலும் பொற்கைச்சாறுல் புசமானநால்சாமமாட்டி
க்கொண்டு சாடப்ப பில்லேசெய்து ரவியுலர்த்தி நலமாகமுன்போலேபு
டத்தைப்போடு ஆடப்பாவரினபின் னெடுத்துப்பாரு அப்பனேமரு
க்கம்பூப்போலாமானம் காட்டபபாபணவெடைதா னனுபானத்திலக
ருவாகததேன்கூட்டிக் கொள்ளுகொள்ளே, ௨௯௪

கொள்ளவேபாண்டுவகை யெல்லாந்தீரும் சூரியான பித்தவெட்
டைபித்தவாய்வு கள்ளவேகாய்வென்றதெல்லாந்தீரும் நாட்டாதேயசோ
சியங்களன்னத்தோஷம் விள்ளவேமயக்கமொடு வாந்திதீரும் விருதான
பித்தமெல்லாம் விழலாய்ப்போகும் தள்ளவேயிஞ்சியென்றசூரணத்தி
ல்சாப்பிடவே தேன்கூட்டிச் சாருமவாரே. ௨௯௫

## அயக்காந்தச்செந்தூரம்,

பாரப்பாகாந்தத்தை யிப்படியேசெய்யில் பரிவானகாந்தமொடுசி
வப்புமெதக சாரப்பாவநுபானமறிந்துகொண்டால்தப்பாதுமூலவகை
யாவுந்தீரும் சேரப்பாபித்தமெல்லாஞ் சிதறிப்போகும் தேகத்தில்பரி
ண்டுவெல்லாந்தீருந்தீரும் ஆரப்பாதேனிலே கொண்டாயானுல அரு
ணனைபபோல் காந்தியாமறிந்துகொள்ளே. ௨௯௬

கொள்ளவே அயக்காந்தச் செந்தூரங்கேளு குறிப்பானரண்டையுந்தான் சுத்திசெய்து, நள்ளவேசமனாக ரண்டையுந்தான்கூட்டி நலமானசாதிலிங்கஞ்சமனுய்க்கூட்டி, தள்ளவேவெண்காரங் கால்தான்கூட்டித் தபவாளரசங்கால்தான் கெந்திசமனப்பா, விள்ளவேசுத்திசெய்து கல்வத்திட்டு விருதானபழச்சாற்றுற் சாமம்நாலே ௨௬௭

காலாகமுப்பூவுங்கழஞ்சிரண்டு நலமாகபொற்றலையால் சாமம்நாலு, சாலாகவரைத்துபில்லைரவியிற்காய்ந்தால் கருவானவோட்டில் வைத்தோடுமூடிச், சாலாகமுப்படிசெருப் புடத்திற்போடு தப்பாது செந்தூரமருந்தன் போலாம, மாலாகப்பணவெடைதா னனுபானத்தில் மைந்தனேகொண்டுவரப் போம்நோய்கேளே ௨௬௮

கேளப்பாபாண்டாறுங் கிராணியாறும் கிருமையாம்பித்தமதூனற்பதும்போம், காளப்பாவாய்வோடு வாதமெல்லாம் காடாதேயக்கினியார்மந்தங்கேளு, சூளப்பாதாதுவெல்லா முறுக்கத்தேறும் சுகமாகவெளுத்தசடமவண்டுபோலாம், ஆளப்பாயிலைதத்தேனிற் கொண்டாயானல் அணுகாதுபாண்டுவெளுப் ரோகமபோமே. ௨௬௯

போமப்பாசூலையொடுவாயுவெல்லாம் பொல்லாதகெர்ப்பநோய்சொல்லாதேடும், காமப்பாவாயதியோடு பொருமல்விம்மல் காடாதவுஷ்ணமாம வாய்வுதீரும், தாமப்பா சேத்துமங்களெல்லாந்தீரும் தலைமயக்கம்வாயூறல் சாந்தமாகும், வேமப்பா பத்தியங்கார் பித்தமெல்லாம் வெகுசுருக்காய்தீருமடா விண்ணக்கேளே. ௨௭௰

## திரிலோகச் செந்தூரம்.

கேளப்பா திரிலோகச் செந்தூரந்தான் கெடியானலோகமோடப்பிரேகங்காந்தல், காளப்பாமூன்றையுந்தான் சுத்திசெய்து நலமாகச்சமன்கூட்டிக் கல்வத்திட்டுச், தாளப்பாசுத்தித்த கெந்திசமன்கூட்டித் தப்பாமல்வாலைரசம பாதிசேர்த்து, ஆளப்பாபழச்சாற்றுற் சாமம்நாலு அப்பனேயரைக்கையிலே பூநீறுபோடே. ௨௭௧

போடப்பாமுக்கழஞ்சு தூக்கியேதான் பொற்றலையால் நாற்சாமமரைத்துக்கொண்டு, நாடப்பாசெருப்படையால் சாமம்நாலு குன்றுன்குமரிச்சாறுசாமம்நாலு, தேடப்பா பில்லைசெய்து ரவியிற்போடு திறமாகவோட்டில்வைத்தோமூடி, ஆடப்பா சீலைசெய்து புடத்தைப்போட்டு ஆறியபின்னேயெடுத் தரைக்கக்கேளே. ௨௭௨

கேளப்பாலிங்கமரைப்பலந்தான்கூட்டிக் கெடியானகுமரிச்சாறு சாமமெட்டு, நாளப்பாவரைத்துபில்லைவியிற்காய்ந்தால் நன்றாகமுப் பதெருப்புடத்தைப்போடு, வேளப்பாசெந்தூரமருணன்போலாம்வெ குசுருக்காய்ச்சஞ்சீவிசூரணத்தில், காளப்பாபணவெடைதானெய்யிற் கொள்ளத் தப்பாதுமேகநீர்தவறிபடோமே. ௨௭௩

தவறிப்போம்பாண்டுவகையெல்லாந்தீரும் தப்பாதுபித்தமென் றநாற்பதும்போம, தவறிப்போமேகமென்றவிருபக்கொணுமசாந்தி மாம்வாயுவெல்லாமொழிந்துபோகும், தவறிப்போமுட்குஷ்டமிருமலெ ல்லாஞ் சங்கிரண்போல்தேகமெல்லாங்குளிர்ச்சியாகும, தவறிப்போம் பித்தத்தின்கோபமெல்லாம் சண்ணுமடாவின்னமொன்று சாற்றக் கேளே. ௨௭௪

பஞ்சலோகச்செந்தூரம.

கேளடாபஞ்சலோகச்செந்தூரந்தான் செடியானதங்கமொடுவெ ள்ளிசெம்பு, காளடாகாந்தமோடிருமபில்லைத்து நலமாகச்சுத்திசெ ய்துசமனாய்க்கூட்டி, வேளடாகெந்தகந்தான்காட்டிப்பிட்டு வெளுளா ணருசமரைவீரங்கால்தான். ஆளடாமுப்பூவின்சுண்ணமொன்று அப் பனேபழச்சாற்றால்சாமமநாலே. ௨௭௫

நாற்சாமமரைத்துமேயுலரவைத்து நன்றாகவோட்டிவிட்டோடு மூடிச், சீலானசீலைசெய்து முழப்புடத்தின் செண்றேதானுறினபின் னெடுத்துக்கொண்டு, காலானகரிசலைச்சாற்றிலாட்டிக் கசகாமல்நாற் சாமமரைத்துக்கொண்டு, வேலானமுழப்புடத்திற்செந்தூரமாகும்வி தமாகச்செருப்படைநாற்சாமமாட்டே. ௨௭௬

ஆட்டியேமுழப்புடத்திற்செந்தூரந்தான் அருணனைப்போனிற மாகுமெடுத்துக்கொண்டு, மூட்டியேதிரிகடுகிற்பணந்தான்கொள்ளமு தண்டதேன்கூட்டிமண்டலந்தான், நாட்டியேவாயுவென்றதெண்பது மபோம் நாடாதுபித்தத்தின்மூலந்தீரும, காட்டியேசேத்துமங்களிரு பதுமபோம் கருவாகவின்னமொருசுருதிகேளே. ௨௭௭

மண்டூரச்செந்தூரம.

கேளடாவாயிரந்தான்வருஷஞ்சென்ற கெடியானசிட்டமதுகொ ண்டுவந்து, தாளடாவாவின்னீர்தன்னிலேதான் தளமாகக்காய்ச்சியேதோ ய்ச்சுத்தோய்ச்சு, வேளடாபத்துவிசைதோய்ச்செடுத்துவிந்தானகல் வத்திற்பொடியாய்ச்செய்து நாளடாபத்திலொன்றுவெந்திருதம் நல மானவிங்கமுப்புவெண்காரக்கூட்டே. ௨௭௮

கூட்டியேபழச்சாற்றில்புடந்தான்பத்துகூசாதேகரிச்சாலைப்புடந்தான்பத்து ஆட்டியேசெருப்படையின்புடந்தான்பத்து அப்பனேசெம்பைச்சாறுபுடந்தான்பத்து, நீட்டியேயரசனிட பட்டைச்சாற்றில் கோரகப்புடமஞ்சுபோட்டெடுத்து, காட்டியேசெந்தூரம்பொடிதான்செய்து கனமானபரணிதனிலடைத்துக்கொள்ளே. உஎகூ

கொள்ளவேதிரிகடுகுதேனிலேதான் கூசாதேபணமிரண்டுகூட்டிக்கொள்ளே, விள்ளவேவிஷப்பாண்டுகாமாலையாறும் விருதானபாண்டுவகைகுடிபோமப்பா, தளளவேபித்தமெல்லாங்கீழேசாமே தளமானசேத்துமநோய்தொண்ணூற்றுறு, கள்ளவேகடலபுக்கிக்காணுதோடுமே கண்டாயோவெண்பாண்டங்கருமபாண்டமாமே. உஅ௰

ஆமப்பாவரோசிகங்களன்னதோஷம் அகலாதவாந்திவிக்கலகன்றுபோகும், தாமப்பாவாயுவென்றதெலலாம்போகும தளமானநீர்த்தோஷநாடாதோடும், காமப்பாலூறுமடாதேகமின்னும கலகலெனத்தேகமுழுதிறுகிப்போகும், நாமப்பாகண்டபடிசொன்னோமின்ன நலமானவப்பிரேகவகைசொல்வேனே. உஅக

அப்பிரேகச்செந்தூரம்.

சொல்லக்கேள்கிருஷ்ணவப்பிரேகம்வாங்கி சுறுக்காகக்காய்ச்சியேபாலிற்போட்டு, வல்லக்கேள்கழுவியதை யெடுத்துக்கொண்டு வாகானநெல்லோடப்பிரேகங்கூட்டி, நலலக்கேள்காடியிலேபிசைந்தாயானால் நலமானவப்பிரேகமிறங்கும்பாரு வெல்லக்கேள்மறுநாள்தான்றெளிவிறுத்து விருதானவப்பிரேகமரவியிற்போடே. உஅஉ

போட்டப்பாவுலர்ந்தபின்யெடுத்துக்கொண்டு புகழானகல்வத்திற்போட்டுநீயும், ஆட்டப்பாபழச்சாற்றால்நாலுசாமம் அப்பனேபதிலொன்றுகெந்திகூட்டி, நாட்டப்ப பில்லைதட்டிரவிரண்டேதான் நலமாகமுப்பதெருப்புடத்திறபோட்டு, நீட்டப்பாகெந்தியிட்டுப்பழச்சாற்றாலே கோரகநாற்சாமமரைத்துக்காட்டே. உஅங

காட்டியேரவிதனிலேகாய்ந்தபின்பு கனமானவோட்டிவிட்டுப்புடத்தைப்போடு, ஆட்டியேகல்வத்திறபோட்டுநீயும அப்பனேகெந்தியிட்டுப்பழச்சாறூட்டி, பாட்டியேபத்துவிசைப்புடததைப்போடு பாங்கர்கப்பின்னெடுத்துக் கரிசாலைச்சாற்றில், வாட்டியேபுடம்பத்துப்போட்டெடுத்து வாகானசெருப்படைச்சார்விட்டிட்டாட்டே. உஅச

ஆட்டியேயிருசாமமுலரவைத்துஅப்பனேபுடம்பத்துபோட்டெ
டுத்து, நீட்டியேபொடிதேலைச்சாறுபுடந்தான்பத்து நேரானபொற்றலை
யிற்புடந்தானஞ்சு, காட்டியேசிறுசெருப்படியின்சாற்றால் கசகாமத்
புடமஞ்சுபோட்டெடுத்து, மாட்டியேமுருக்கம்பூச்சாற்றலாட்டிமை
ந்தனேபுடமைந்து போட்டுக்கொள்ளே. உஅரு

கொள்ளப்பாசெந்தூரமருணன்போலாம் கொடிதானவனுபான
மறிந்துகொள்ளு, விள்ளப்பாசயமெட்டுமீளையிருமல் விருதானசேத்
துமநோய்தொண்ணூற்றாறும், கள்ளப்பாபறந்தோடுங்கடலேபுக்கும்
கருவானசஞ்சீவிசூரணத்தில், அள்ளப்பாபணவெடைதான் றேனிற்
கொள்ள அற்றுப்போம்காநீரிழிமகன்றுபோமே. உஅசு

போமப்பாதேகத்துள்மாந்தையெல்லாம போகுமடாபிரமியநோ
யிருமலெல்லாம், சாமப்பாவுட்சூடுள்ளெரிவுதானும்தளமானதேகமெ
ல்லாமகுளிர்ச்சியாகும், வேமப்பாவிந்துநாசமபுஷ்டியாகும் வெகுகா
ளைபெலும்புருக்கிவிழலாய்ப்போகும், காமப்பாகணகுளிருந்தேகமின்
னும் கனமானபற்பவகைசொல்லக்கேளே. உஅஎ

## துருசுகுரு.

சொல்லக்கேள்புலத்தியனேபற்பத்துக்குச் சுருக்கானகுருவொ
ன்றுரூட்டக்கேளு, வல்லக்கேள்துருசுசுத்திபண்ணிக்கொண்டுவகை
யாகமுப்பூநீர்மூன்றுநாள்தான், அல்லக்கேள்சாரநீர்மூன்றுநாள்தான்
அழகாகரவியுலாத்திப்பலந்தான்துருக்கு, வல்லக்கேள்வங்கத்தலைதக்கடு
ஞ்சுண்ணமூதி வாகாகவெடைக்கெடைதான்கவசமபோடே. உஅஅ

## இரசபற்பம்.

போடப்பாரவியிலேயேழுநாள்தான் புகழாகக்காய்ந்தபின்புசுண்
ணச்சீலை, நாடப்பாமூன்றுசுத்திகாயவைத்து நலமானகாடையிலேகு
ருவுமாகும், பாடப்பாசிமிளுக்குள்பதனமபண்ணி பறக்கிறதேர்சூத
த்தில்பத்திலொன்று, நீடப்பாவாய்நீராலரைத்துப்பில்லை நிசமாகரவி
யுலர்த்தியோட்டில்வையே. உஅகூ

வையப்பாமேற்கீழுங்கல்லுச்சுண்ணம் வகையாகநடுவில்வில்லை
வைத்துமூட்டி, செய்யப்பாசீலையதுமூன்றுசெய்து திறமாகுக்குட
த்திற்பற்பமாகும், மெய்யப்பாரசபற்பம்பரணிதனிலடைத்து விரு
தானநெய்தேனிற்பணந்தானகொள்ள, கையப்பாகாலோடுமூடச்சுக்
சூலை கண்காணாதேடமடாவின்னங்கேளே. உகூ

கேளடாசர்வாங்கவாதந்தீரும் கெடியானகுன்மநோ பெட்டுந்தீ
ரும், பாளடாவிசுவமுதல் பறந்தேபோகும் பறக்குமடா சன்னிசெ

ன்ற பதின்மூன்றுந்தான், கேளடா ருத்திபதோர்கபாலசூலை தெரிகெட்டேயோடுமடா சிரகோடியெல்லாம், வாளடாதேகமது வலித்துப்போகும் மகத்தானகெர்ப்பநோய் மாறுந்தானே. ௨௯௧

## தாளகபற்பம்.

மாறுமடா வின்னமொன்று சொல்லக்கேளு வகையானதாளகந் தான் சுத்திசெய்து, வீறுமடா ரசபற்பந் தருசரீரும விரகாத வாய்நீ ரா லரைத்துக்கொண்டு, சாறுமடா சமந்தானுந்தாளகத்திலப்பிச் சந்ராகாவியுலாத்திச்சுண்ணச்சீலை, சீறுமடாமூன்றுசெய்து சண்ணத்தில்வைத்துச சிறப்பாகக்குக்கிடத்தில் சிவண்போவாமே. ௨௯௨

ஆமப்பாமால்சேத்வி பற்பந்தன்னை அளவிலொரு பணாத்தூக்கித் தேனிற்கொள்ள, வேமப்பாக்ஷயமெட்டு மிளைப்போடிளை விராதோடும் சடலத்திலகெர்ப்பநோய் சாராதோடும், காமப்பா வெகும புருக்கியஸ்திரணங்கள் கண்காணுதோடுமடா வின்னங்கேளு. ௨௯௩

## வங்கபற்பம்.

கேளடாவங்கத்தை சுத்திபண்ணிக் கெடியாகலேசாகத் தகடுதட்டித், தாளடாதாளகமும ரசமுங்கூட்டிச் சமனாகவாய்நீரா லரைத்துக்கொண்டு, வாளடாவங்கமென்றக் கட்டிதான் வளமாகப்பூசியேசமுனைய்நீயும, ஆளடாரவிமுகத்தி லுலரப்போட்டு அப்பனே சுண்ணுடைபுச் சீலைசறமே. ௨௯௪

சுற்றியேசுண்ணாம்புக் குள்ளேவைத்துச் சுகமாககஜபுடத்தில் நீறிப்போகும, மதகிமேவங்கமென்ற பற்பந்தன்னை வரிசையாய்த் திரிபல சிரூரணத்தில், குத்தியேபனைவெடைதான் தேனிலப்பா கொண்டுவரப்பதனாள இந்நோய்கள, வற்றியேபிரமியங்கள்பிரமேகங்கள் வருகின்றவெகுப்புருக்கி மாண்டுபோமே. ௨௯௫

மாண்டுபோங் கிரந்தியது நூற்றுப்பத்தும் வறட்சியொடுசொறி சிரங்கு மாண்டுப்போகும், மாண்டுபோமேஹூறலபடர்ச்சஹூறல் வகையான சிலவிடங்கள் மாறிப்போகும, மாண்டுபோமபெரும்பாடு வயிற்றுக்குத்தல் மகத்தானபுகைச்சல்வீழி மாறிப்போகும, மாண்டுபோமேசமென்றசூலையெல்லாம வகையானநாசத்தின்பற்பந்தானே.

## காகபற்பம்.

கேளப்பாநாகத்தைச் சுதிதிபண்ணிக் கெடியாகலேசாகப்பில்லைதட்டித், தாளப்பாதாளகமும வங்கபற்பம சமனாகநாகத்துக்கிடையே தூக்கி, வாளப்பாவாய்நீரா லரைத்துக்கொண்டு வளமாகச்சீலைமேல்பூ

சிக்காய்ச்சித், தாளப்பாசுண்ணும்புச் சிலைசுற்றிச் சுத்தமாஞ்சுண்ணு ம்புக் குள்ளேவைவே. ௨௱௭

வைத்தப்பாமுழுப்புடத்தில் நீறிப்போகும் § வாசுகிதா னீறிய பின் சொல்லக்கேளு, கைத்தப்பாதிரி டுகுத்தாளிசப்பத்திரி கருவான லவங்கமைந்துஞ் சமனாய்க்கூட்டிப், பைத்தப்பாரவியிலவைத்துச் சூ ரணித்துப்பதருசேலைடிகொண்டு வைத்துக்கொண்டே, சுதசப்பாப ணவெடை தானத்தேனிற்கொள்ள எழுகதவொருசிலேத்துமநோய்தொ ண்ணூற்றுரே. ௨௱௮

§ வாசுகிராகம்.

ஆறுண ரோகமெல்லா மற்றுப்போகும் அப்பனே வாதமென்ற தெண்பதுபோம், விறுணபித்தமதுநாற்பதுமபோம் வெகுசுறுக்கா ய் மேகமொடுசூலைதீருக, நாறுணகுட்டமெனற தெட்டுந்தீரும நலமா னகடிவிஷங்கள்சாராதோமே, கூறுணகுறியெரிப்புப்பத்துந்தீருமகு மமென்றசூலைமுதல் குடிபோமபாரே. ௨௱௯

தாயபிரபற்பம்.

பாரப்பாதாமபிரபற்பம பழச்சாறுகன்னில பத்துரேதபதினை துதரமேசாய்த்து, நேரபபாலேசாகததங்டுதட்டி வினைவாகாநாகமுந்தா ளசமுங்கூட்டிச், சாரப்பாவாய்நீரா லரைததுக்கொண்டு சமனாகத்தா மபிரதளைக்குபபூசி, ஆரப்பாரவியுலர்த்திச் சுண்ணச்சீலை அப்பனே சுற்றியே சுணணத்திலவைவே. ௨௱௰

வைததப்பா கஜபுடமாய்ப் போட்டெடுக்க வாகானதாம்பிரம் ப ற்பமாகும், கைததப்பாபோகாது வெகுசுறுக்காய் காணடாவனுபான மறிந்துபோடு, குத்தப்பாகுன்மமெட்டுஞ்சூலைபதினெட்டுங் குடிபோ குந்திரிகடுகு தேனிற்கொள்ளச், சித்தப்பாவினையோ டிருமலெல்லா ஞ் சிதறிப்போமவெள்ளியிட பற்பங்கேளே. ௨௱௰௧

வெள்ளிபற்பம்.

கேளப்பா வெள்ளியது தகடுதட்டிக் கெடியான ரசபஸ்பம் வங் கபற்பம், நாளப்பாகெந்தமோடு மூனறுநேராய் நலமானவாய்நீரா லரை த்துக்கொண்டு வேளப்பாவெள்ளிக்குச் சமனாய்ப்போடு விருதானா வியுலர்த்திச் சீலைசெய்து, சூளப்பாசுண்ணாம்புக்குள்ளேவைத்துத் து டியாகமுழப்புடத்தில தூக்கிவாங்கே ௨௱௰௨

வாங்கிடதோர்பற்பத்தைப் பதனம்பண்ணு வகையாகப்பணவெ டைதான் தேனிற்கொள்ள, தேங்கியதோர் கலலடைப்புச் சதைய டைப்புக் தீராதகிரிச்சரணங்கள்தீருந்தீரும ஏங்கியதோர்காசமோ டி ளைப்புத்தீரு மினைக்குமேவிக்கப்புறறு யோனிப்புற்று, பாங்கியேகிர ந்தியரி மேகமெல்லாம் பறக்குமடாவின்னமொருபற்பங்கேளே. ௨௱௰௩

### தங்கபற்பம்.

கேளப்பா தங்கபொருபலந்தான் வாங்கிக் கிருபையாய்த்தகடுகெட் டிச் சொலலக்கேளு, நாளப்பா பழச்சாற்றில் பூங்காவியாற்றிலமாக த் தகட்டின்மேற் பூசிக்காய்ச்சித், தாளப்பாலையங்குதாங் காய்ச்சிக் கொண்டு தளமாகவங்கபற்பமகாகபற்பம. தேளமபாரசபற்பம வீரம் வெள்ளைசேர்சமனுயண்டத்தினீராலாட்டே, ௩௱௪

ஆட்டியேசமனுகத் தகட்டிற்பூசி அப்பனேயண்டத்தில் சுண்ண ம்வைத்து, நீட்டியேமேல்மூடிச் சீலெசெய்து நோகமுழப்புடத்தில் நீறிப்போகும், காட்டியேகருக்தக்கால் வீரங்காலகூட்டிக் கனமானவ ண்டநீர் தனனுலாட்டிச, சாட்டியேரவியுலர்த்தி யோட்டில்வைத்துச் சங்கமாய்முழப்புடத்தில் தாக்கிவாங்கே ௩௱௫

வாங்கியேயெடுத்துப்பார் வெண்ணீறுகும் வளமானதேனெய்சர் க்கரையிற்கொள்ளச், சாங்கியேசன்னியென்றமூலமெலலாம தப்பாது தோஷமென்ற வேழுந்திரும நீங்கியேவலிப்பிசியும பறந்துபோகும்வி னைவுகெட்டசேத்துமனோய் தொண்ணூறுமும், தேங்கியேவாதகோ யெண்பதுந்தான் சிதறிப்போமபித்தமதுவொழிந்துபோமே. ௩௱௬

ஒழிந்துபோம் பித்தவெட்டை கிராணிபெருமபாடு ஒழியாதபி ரமியநோ பொங்கிபபோகும, ஒழிநதுபோம்குனமமெட்டும பாண் டோராறும் உத்தமனேமேகாதக் கழிச்சல்தீரும, ஒழிந்துபோகும் சூலைமுதரிசுவரோகம ஓகோகோகுட்டமெட்டும கடலேபுக்கும், ஒ ழிந்துபோம கிரந்தியோடு வெடிமேகந்தான் உட்சுரங்கள் தீர்ச்சுறுக் கு மோடுமபாரே, ௩௱௭

### வெண்காரஞ்சிலாசத்து கலைக்கொம்பு கல்நார்பற்பம்.

பாரப்பாவெண்காரஞ் சிலாசத்துதான் பாங்கானகலைக்கொம்பு க ல்நாருந்தான், சேரப்பாசமனுகப் பொடித்துக்கொண்டு சிறப்பானப ருத்திதான் சமூலமெல்லாம, நேரப்பா சுட்டதனைச்சாம்பலாக்கி தினீ வாகப்படியென்ற தளந்துகொண்டு, வாமப்பாலோலாறு படிசலந்தான் வாகாகக்கலக்கிபதைதமூடிவையே. ௩௱௮

வைத்தப்பாகாலாநாள் தெளிவிறுத்து வாகாகமுன்மருந்தில் வி ட்டேயாட்டிற், கைத்தப்பாசால்சாமம் மரைத்துவில்லை கனமானரவி யில்வைத்துலரப்போட்டு, ஒத்தப்பாவோட்டில்வைத் தோடுமூடி யு த்தமனேசீலைசட்டி முழப்புடத்திற்போடு, கித்தப்பாநீறியது வெள் ளையாகும் கினைவாகப்பின்னுயந்த நீராலாட்டே ௩௱௯

ஆட்டையிலேசாரமதுகாசுபோடு அடங்காதசூடனதுகாசுபோ டு, நீட்டையிலே வீரமதுகாசுபோடு கினைவாகபபூநீரு காசுபோடு ரா

ட்டையிலே நாலசாமமரைத்துக்கொண்டு லமாகப்பில்லைதட்டி ரவி யுலர்த்திச் சூட்டையிலேசுண்ணாம்புப் பொடியில்வைத்துச் சுருக்கா க்முழப்புடத்திற் சூட்டிவாங்கே. ௱௰

வாங்கியேகருத்தாக்கா லண்டநீரால் வளமாகவரைத்தொரு புடத்தான்போட்டு, தாங்கியேவெண்மையது சங்குபோலாம் தளமானவி ங்கமது சுத்திசெய்து, பாங்கியேபத்தில் பாதிலிங்கம் பச்சையாய்ச்சே ர்த்துநீ பொடியாய்ச்செய்து, தேங்கியேயிளநீரிற் பணத்தான்ரண்டு நீர்க்கமாய்க் கொண்டுவரப் போமநோய்கேளே. ௱௰௧

கேளப்பாபெருவயிறு மகோதரங்கள் கிரிச்சனங்கள் கல்லடைப் புசதையடைப்பு, நீளப்பாநீருகனீரெரிவுதானு நீடாதுசவுசையோ டு நீராமபல்தானும, ஆளப்பாநீர்ச்சுரப்பவுப்பிசங்கள அணுகாதுவயி ற்றிலுள்ள நீர்க்கட்டுமபோம், கேளப்பாநீருகல் துள்ளிவிழ்தல் திருமப்பாபவளமது பற்பங்கேளே. ௱௰௨

பவளபற்பம்.

சேளப்பாபவளமது பலர்தானென்று கெடியான்பீங்கானில்கறு க்கிப்போடு, வேளப்பாபழச்சாரு விட்டுநீயும் விருதானகாழிகைதா னருபதானல், நாளப்பாகழுவியதை யெடுத்துக்கொண்டு நலமானகர் ப்பூரச் சிலாசத்துதான் தாளப்பாசமனாகக் கல்வத்திட்டுச் சார்வான பிரண்டைச்சா றதனலரட்டே, ௱௰௩

ஆட்டியேநால்சாமம் பில்லைதட்டி அப்பனேரவியுலர்த்தி யோட் ட்டில்மூடி, நாட்டியேமூழப்புடத்தில் நீநம்பாரு கன்ருகபின்னுமக் தச் சாச்சூலாட்டி, நீட்டியேயிருசாம மரைத்துக்கொண்டு வினைவாக ப்புடம்போடப் பற்பமாமே, ௱௰௪

ஆமப்பாபணவெடைதான் வெண்ணெயிலேகொள்ள அடங்காத மேகமெல்லா மகன்றுபோகும், வேமப்பாவெலும்புருக்கி யஸ்திமே கம் விருதானமதுமேக மெட்டுமபோகும், தாமப்பா தேனிலே கொ ண்டாயானல் சலரணமேலூரல் தவறிப்போகும, தாமப்பாவாயுவெ ல்லாமு நீம்மூநோக்கும் தப்பாதுமேகத்தின் தினவுபோமே. ௱௰௫

வாதசுரக கியாழம்,

போமப்பாசுரங்களறுபதுநாலும புகழாகவாதசுர முப்பத்திரண்டு. ஆம்ப்பாபித்தசுா மிருபத்தொன்றும அளவானசேத்துமநோய் பதினொன்றபபா வகைமூன்றறுபத்திஞலும் நலமானவாதசுரக் கியாழங்கேளு, வேமப்பாசிறுதேக்கு சுக்குதிப்பிலி விதமானசெவியமொ டுகோஷ்டந்தானே, ௱௰௬

தானென்றதுராவப்பைதிப்பிலிமூலமும் தகுமானசித்திரமூலஞ் சங்குமூலம், வேனென்றவெள்ளருகு நிலவேம்போடு விருதானமுருங் கம்வேர்கழற்சிவேரும். தானென்றகண்டங்கத்திரிபோராமுட்டிதருவா ணசிற்றரத்தைமாவிலிங்கம்வேரும், தேனென்றசிறுகாஞ்சோரிபோர த்தைதெளிவாசைதகு பைவிஷ்ணுகாந்திபாரே. ௱௧௭

பாரப்பாவிந்தவகையிருபத்தொன்று பலம்வீதம்தூக்கியேயிடித் துகையச், சேரப்பாவிருபத்தோர்பங்குபண்ணித் திறமாகவொருபங் குசட்டியிலிட்டு, வாரப்பாமூன்றுசேர்சலந்தான்விட்டு வளமானநாழி கைதான்முப்பதானால், ஆசப்பாவடிப்பேற்றிக் கால்சேரானால் அப்ப னேவடிகொண்டு பீங்கானில்வாரே. ௱௧௮

வார்ததப்பாவாதராட் சதன்குளிகை வளமாகப்பணமொன்று பொடித்துப்போட்டுத், தேத்தப்பாதேனதிலேகழஞ்சிகுத்தித் திற மாகவிருநேரங்கொடுத்தாயானால், பார்த்தப்பாவாலசுரம்நடுக்குவாதம் பதறுகின்றநாளின்முறை பறந்துபோகும், காத்தப்பாகடுப்புவலிகட லேபுக்கும் கருவானபித்தநோய்க்கியாழங்கேளே. ௱௧௯

## பித்தசுரக்கியாழம்.

கேளப்பாபித்தசுர மிருபத்தொன்றும் கெடியாகத்தீருமடாகியா ழங்கேளு, நாளப்பாவிலாமிச்சைசிறுகாஞ்சோரிநலமானவில்வவேர்பா திரிவேர்தானும், ஆளப்பாவதிமதுராஞ்செவ்வல்லிகோஷ்டம்அப்புனே நன்னாரிநிலவாவனா, தேளப்பாசீரகமுங்கொத்துமல்லி திரமானதும் பைவேர் பேரீச்சங்காயே. ௱௨௰

காயோடியானைத்திப்பிலியுமப்பா கருவானநெல்லிமுள்ளிசுக்கோ டொக்கப, பாயோடுபதினைந்துபலவீதந்தூக்கிப்பக்குவமாயிடித்துகை யப்பங்குகேளு, தாயோடுவிருபத்தோர் பங்குபண்ணித் தப்பாமலொ ருபங்குசட்டிவிட்டுச் சேயோடுசலமதிலேமூன்றுசேர்தான்திறமாகவி ட்டதிலே யடுப்பிலேற்றே. ௱௨௧

ஏற்றப்பாநாழிகைதான்முப்பதானால்என்மகனேகால்சேர்தானெ டுத்துக்கொண்டு, சேர்த்தப்பாதேனதிலேகழஞ்சுகூட்டித் திறமான கோரோசனைக்குளிகையொன்று, பார்த்தப்பாவிழைத்ததனையிருநே ரந்தான பதறுமற்கொடுத்துவரப்பித்தசுரமெல்லாம், காத்தப்பாகண் காணுதோடிப்போகும் கருவானநாவறட்சிகழன்றுபோமே. ௱௨௨

போமப்பாநாக்கிலுள்ள முள்ளதெல்லாம் பொறுக்காததீர்த்தாக ம்போகுஞ்சொன்னேன், நாமப்பாவுடம்பெரிவுகாந்தலெல்லாம் நடுநே டுங்கியோடுமடாவாயூறலெல்லாம்சேமப்பாசிரசிலுள்ளபித்தமெல்லா

புசீக்கிரத்திலிரக்கிவிடுஞ் சிலேபாரம்போம், ஆமப்பாசேத்துமசுரம்
பதின்மூன்றுந்தான் அப்பனேதீருதற்குக்கியாழங்கேளே. ௨௨௩

### சேத்துமசுரக்கியாழம்.

கேளப்பாசுக்குத்திப்பிலிகிரம்பு கெடியானதுராலப்பையக்கிரா
காரம், காளப்பாகருமுள்ளிகடுக்க யோடு கனத்தவாடாதோடைகர்ப்
பூரவல்ளி, நாளப்பாமுந்திரிகைகண்டங்கத்திரி லமானபதினொன்றுவ
கையைக்கேளு, ஆளப்பாபலவீதங்கிறுத்துக்கொண்டு அப்பனேயிடி
த்துவையப்பங்குகேளே. ௨௨௪

பங்கென்னபதினெந்துபண்ணிக்கொண்டுபக்குவமாயொருபங்கு
சட்டியிலிட்டுப், பங்கென்னரண்டுபடிசலந்தான் வாருபதனுதேழுப்ப
துநாழிகையூறினக்கால், பங்கென்னவடுப்பேற்றிக்கமலமாகப்பதரும
ல்கால்சேர்தா னிடித்துக்கொண்டு, பங்கென்னதேனிலேகழஞ்சுகுத்
திப்பாரப்பாசந்திரோதயம்பண்ணந்தான்போடே. ௨௨௫

போட்டப்பாகோரோசனைக்குளிகையொன்று புகழாகக்கலக்கி
யிருநேரங்கொள்ளக், காட்டப்பாகபமெல்லாங்கீழேசாடுங் கனமான
சேத்துமசுரங்காணுதோடும், சேட்டப்பாவிருமலெல்லாம்க்ஷணத்தில்
திரும்சிறுகடுப்புகுத்துவலிசேராதோடுங், காட்டப்பாவலியிசுவுங்கல
ங்கியோடும் கருவானசதியொன்றுசொல்லக்கேளே. ௨௨௬

### சன்னிபதின் மூன்றுக்கும்பெயர்.

கேளப்பாசன்னிவகைபதின்மூன்றுக்கும்கெடியானநாமமதுசொ
ல்லக்கேளு, நாளப்பாதாந்திரிகனந்தகனுமாகும் நலமானசிதாங்கமுரு
க்கிரதாம், வேளப்பாசித்தவிப்பிரலம்மயோடு விதமானகண்டகுபசங்க
ருனியாசம், ஆளப்பாவிக்கதனுசம்பக்கநேத்திரம் அருளானரக்கஷ்டி
வீருக்கிதாகமாமே. ௨௨௭

### தோஷமெழுக்கும்பெயர்.

ஆமப்பாபிரலாபம்பீணியாசம் அப்பனேசன்னிவகைபதின்மூன்
றுக்கும், வேமப்பாதோஷமென்றசீதமுங்கேளுவிருதானசிட்டணதோ
ஷம்ரத்தகோஷம், ஆமப்பாநீர்தோஷமஸ்திதோஷம்நலமானகொடி
தோஷம்வலிதோஷந்தான், சாமப்பாசையோகத் தோஷத்தோடுசது
ரானதோஷவகையேழுந்தானே. ௨௨௮

தானென்றசன்னிவகை பதின்மூன்றுக்கு தளமானதோஷவகை
யேழுக்குந்தான் நானென்றமருந்துவகை முன்னேசொன்னேம்நல
மானசன்னிக்குத்தைலஞ்சொன்னேம்,கானென்றமாத்திரையுங்கலிக்
கஞ்சொன்னேங் கருவானவயித்தியத்தில்மனதையூன்றி,வனென்றவ
யித்தியத்தைப்பார்த்தாலுகில்மைந்தனேதன்வந்திரிகொப்பாம்பாரே.

## கெந்திசெந்தூரம்.

பாரப்பா செந்தூரஞ் சொல்லக்கேளு பண்பான கெந்தியரைப் பலந்தான்வாங்கி, நேரப்பா வோட்டிவிட்டிருக்கும்போது நேரானரசம் பலந்தானுலுவிட்டே, சாரப்பா வறுத்தாக்கால் பற்பம்போலாம் சாதக மாய்ப்புதுச்செங்கல் பாக்குப்போலுடைத்து, வாரப்பா பாண்டத்திற் போட்டுப்பின்புவளமான கறியுப்புச்சோரைத்தான்வாங்கே. ௩௱௰

வாங்கியே முன்பற்பங்கல்லுப்புக்கலந்து வாகாகப்பாண்டத்திற் றூவியேயும், தாங்கியே மேல்பானை கவிழ்த்துமூடித் தப்பாமலெழுசீலை மண்ணுசெய்து, சாங்கியே காயவைத்தடுப்பிலேற்றிச் சாதகமாய்க்கமல காடாக்கினியினாலே, தேங்கியே நாற்சாமமெரியிட்டாக்கால் திறமாக மேல்தூறிற்பற்பமாமே ௩௱௧

ஆமப்பா சூதபற்பம்பலந்தானுலு அப்பனே கெந்திப்பலமதையுங்கூட்டி, நாமப்பா வரிதாரம்பலந்தான் தூக்கிநலமாகப்பொடிசெய்து குப்பியிலேபாதி, வேமப்பா போட்டதிலேயேழுசீலை செய்துவிருதானரவியிலேகாயப்போட்டுத், தாமப்பா தாளிக்குள்நாலுவிரல்மண்தான் தப்பாமல்பாதிமேல் குப்பிவையே ௩௱௨

வைத்தப்பா கழுத்தளவு மணலைக்கொட்டி வாகாக முத்தியுஞ்சாமம்நாலு, கைத்தப்பா வெரியிட்டேயாறிப் பார்த்தால் கக்காதுதேங்காய்போல்செந்தூரமாகும், நைத்தப்பா வுடைத்தெடுத்துப் பதனம் பண்ணு நலமானவியாதியெல்லாநாடாதோடும், மைத்தப்பா செந்தூரம் பலந்தானென்று மைந்தனே முன்பற்பப்பலந்தானாலே. ௩௱௩

நாலான கெந்திபலமன்னர் தான்போட்டு நலமான தாரங்கால்பலமுமாகும், காலான கல்வத்தில் பொடித்தூநீயும் கசகாமல் குப்பிக்குப்பா போட்டுச், சேலான சீலையோரேழுஞ்செய்து திறமானவாய்க்குச்செங்கல் தேய்த்துப்போட்டு, வாலான சீலையோரேழுஞ்செய்து மைந்தனே வாலுகையிலடுப்பிலேற்றே. ௩௱௪

ஏற்றியே நாற்சாமமூத்தியாற்போட்டு எடுத்துப்பார் செந்தூரமருணன்போலாம் பார்த்தியேயிப்படியே பத்துமுறைசெய்து பாங்கான செந்தூரமெடுத்துக்கொண்டு, தேத்தியே செந்தூரம்பலந்தானுலு திறமானபற்பமது பலந்தானுலு, ஆத்தியே கெந்தியது பலந்தான்ரண்டு அப்பனே தாரமது பலமரையுமாமே. ௩௱௫

ஆமப்பா சிலைகால்தான் தாளக்கால்தான் அப்பனே கல்வத்திற் பொடித்துக்கொண்டு, நாமப்பா ரத்தமபூச்சாற்றாலே நலமானநாற்சாமமட்டிககொண்டு, தாமப்பா பூவாசன்பூநாற்சாமம் தப்பாமல் தக்காளிய

மூச்சாறுகேளு, சாமப்பாவிருசாமமாட்டிக்கொண்டுசேமர்த்தாகப்பொற்கையரன்சாறுமேகேளே, ௩௩௬

கேளப்பாசாமம்ரண்டாட்டிக்கொண்டுகெடியானரேக்கதிலேபலமும்போட்டு, நாளப்பாவணாத்துருத்திப் பொடியாய்ச்செய்துநலமானகுப்பிலேபரைதான்போட்டு,வேளப்பாசீலேயோமேமூஞ்செய்துவெகுசுறுக்காய்வாங்கிச்செக்கல்தேய்த்துப்போட்டு,ஆளப்பாவாய்க்குமந்தச்சீலேசெய்து அப்பனேவாலுகையிலேற்றியாட்டே. ௩௩௭

ஆட்டப்பாசாமம்நால்தீபமாக அப்பனேசாமம்நால்கமலவன்னி,மூட்டப்பாகாடாக்கிசாமமெட்டுமூகண்டநிருவாணிபூசைசெய்து, காட்டப்பாவாறினபின் னெடுத்துப்பாரு சதிர்போலேசெந்தூரங்கண்கொள்ளாது,நீட்டப்பாலோகத்தில் நூற்றுக்கொன்றுநிலேச்குமடாவாணமதுபத்துதானே. ௩௩௮

பத்தாகுந்தேகத்தில் குன்றியெடைதேனில பக்குவமாய்வருடமொன்றுகொண்டாயானால்,வித்தாகும்விந்துவதுகீழ்நோக்காது விட்டுவிட்டுச்சரீரத்தேதார்வாசிகட்டும், அத்தாகும்ஸ்திரீகளுடனனுபோகித்தால்அப்பனேநூறுபேர்தோற்றுபோவார்,சித்தாகுந்தேகமதுசிவந்துமின்னும்செடமிறுகிவயிரம்போலாகும்பாரே, ௩௩௯

காலகண்டமேக நாராயணசெந்தூரம்.

பாரப்பாகாலகண்டமே நாராயணன் பரிவானசெந்தூரஞ்சொல்லக்கேளு,சேரப்பாசரபற்கும்பலந்தானெட்டுத்திறமானகேந்தகமோபலந்தானப்பா, வாரப்பாதாளகமோபலந்தானென்று வளமானசிலேயமைசெந்தூரமதைதான், ஆரப்பாலிங்கங்கால்வெள்ளிகால்தானப்பனேவெள்ளீயம்பலந்தானென்றே ௩௪௰

ஒன்றானநாகமணவங்கங்கால்தா னுத்தமனேசெம்பதுவுங்கழஞ்சிரண்டுஒன்றானதங்கமதுகழஞ்சுவொன்றுநாட்டாப்பாநாபியொருபலமுநீதான்,குன்றுமற்பொடிசெய்தே யனைப்புகேளு கூறானபொற்கையான்சாமம்நாலு, சென்றானகுமரிப்பூச்சாமம்நாலு சேர்முருக்கம்பூச்சாறுசாமம்ரண்டே. ௩௪௧

ரண்டானபாதிரிபூச்சாறுசாமம் ரண்டாகும்பழச்சாற்றில்செம்பரத்தம்பூபோட்டு, வென்றாகவெளுத்தபின்பெறிந்துபோட்டுவிருதாகவிருசாமமெடுத்தேயாட்டு, சென்றாகரவியுலர்த்திப்பொடிதான்செய்துசேரப்பாகுப்பிக்குச்சீலேசெய்து,விஸ்றப்பாகுப்பிக்குப்பாதிபோட்விருதாகவாய்மூடிச்சீலேசெய்யே. ௩௪௨

செய்தப்பாவாலுகையிலடைப்பிலேற்றித்திறமாகத்திபாக்கினியெ ட்சாமம், செய்தப்பாகமலமோரெட்டுசாமம் தீர்க்கமாய்க்காடாக்கி னிசாமமெட்டு, செய்தப்பாதீயாற்றிமீசாணியத்திற் சேர்கறியுமதுவோ டுபூசைபண்ணு, செய்தப்பாகுப்பிதனைவாங்கிப்பாரு திறமாகக்கருஞ் சிலப்பாய்ச்செந்தூரமாமே ௩௪௩

ஆமப்பாபணவெடைதான் தேனிற்கொள்ள அணுகாது தன்ம மெட்டும்பீலிபாறும், போமப்பாபெருவயிறுமகோதரங்கள்பொல்லா தசைதவிம்மல்நீரருக்கல்காமப்பால்விளைத்தகொருசோகைப்பாண்டு கனமானநீர்க்குத்தல்நாணுவேகோடும், காமப்பாவக்கினியாமந்தமெல்லா ம்கண்ணுண்டுபோகுமடாசேதிகேளே, ௩௪௪

ரசலோகச்செந்தூரம்

சேதியொன்றுசொல்லுகிறேன்புலத்தியனேஐயாதிறமானரசலோ கச்செந்தூரந்தான், ஆதியென்றசூதபற்பம்பலந்தான்ரண்டு அப்பனே லோகமொன்றுகாந்தமறைகூட்டி, வாதிபாம்லிங்கமனை வெண்காரம னைதான்வளமாகச்சாரங்கால்நாபிகால்தான், காதியென்றகெந்தியினற் செந்தூரங்கால்தான் கனமாகப்பொடிசெய்தேயரைப்புகேளே. ௩௪௫

கேளப்பாபழச்சாற்றால் சாமம்நாலு கெடியாகப்பொற்சையான் சாமம்ரண்டு, நாளப்பாசெருப்புகால்சாமம்ரண்டு நலமானகுமரிபூசா மம்ரண்டு, தாளப்பாசெம்முள்ளிசாமமொன்று தளமாகவேயனைத்துர வியிற்போட்டு, வேளப்பாசெய்ததனைக் குப்பிக்கேற்றி விதமானவாய் மூடிவாலுகையில்வையே ௩௪௬

வைத்தப்பாவடுப்பேற்றியெட்டுசாமம் வாகாகத்தீபாக்கினிகமலே ங்கேளு, கைத்தப்பாசாமமெட்டெரித்துக்கொண்டு கனமானகாடாக்கி னிசாமமெட்டு, வித்தப்பாவாறவிட்டுடைத்துவாங்கு விருதாகச்செங் கல்நிறமாகக்காணும், பைந்தப்பாபொடிசெய்துபணந்தேனிலுண்ண ப்பறக்குமடாகாமாலை பாண்டுதானே ௩௪௭

தானென்றபித்தநோய் தலைகெட்டோடும் தப்பாதுவாதமென்ற தெண்பதும்போம், நாளென்றசன்னியெல்லாம்நாடாதோடும் நலமான வாயுவென்றதெல்லாந்தீரும் காணென்றதலையிலுள்ளவியாதியெல்லாம் கடல்புக்குஞ்சூலைபதினெட்டுந்தீரும், மானென்ற தேனிலேபத்துநாள் கொள்ளமதுமேகந்தீருமடாவின்னங்கேளே. ௩௪௮

## ரசகர்ப்பூரபற்பம்.

கேளடாரசகர்ப்பூரபற்பங்கேளுகிருளையாச்சுத்தரசஞ்சுத்திசெய்து, நாளடாகல்லுப்புகைபோற்பண்ணிநலமானரவியிலேகாயப்போட்டு,தேளடாசட்டிக்குளுப்பைபோட்டுத் திறமானமேற்சட்டிகொண்டுமூடி, தாளடாவெழுசீலைமண்ணுஞ்செய்துதனமானரவியிலேகாயப்போடே, ௱௪௯

போட்டப்பாவடுப்பேற்றிக் கமலமாகப் புசழாகநாற்சாமமெரித்தாயானால், நீட்டப்பாதேங்காய்போலுறுகிநிற்கும நிசமாகவதையெடுத்துத்தூக்கிக்கொண்டு,காட்டப்பாபலம்நாலுபீங்கானுக்குங்கருவான வெற்றிலையின்சாற்றில்விட்டு, ஆட்டப்பாரவிமுகத்தி லுலர்ந்தபின்பு அப்பனேநீயஞ்சுதாம்சாறுவிட்டே, ௱௫௰

விட்டப்பாரவியிலேயுலர்ந்தபின்பு விருதாகபொடிப்பண்ணிகுப்பிக்கிட்டு,விட்டப்பாவளைவாசிமட்டம்போட்டுவிளக்கியேயெழுசீலைமண்ணுஞ்செய்து,விட்டப்பாவாலுகையில்வைத்துநன்றாய்விதமாகவெண்சாமமூத்தீயிட்டு விட்டப்பாலாறியபின்னுடைத்துப்பாருவிதமான பற்பமதை யெடுத்துக்கொள்ளே. ௱௫௧

கொள்ளப்பாநாலுபலமெடுத்துக்கொண்டு குறிப்பானபற்பமது பலநால்தூக்கி, கள்ளப்பாபொடிசெய்துவெற்றிலையின்சாறுநலமாகவிட்டதிலேரவியுலர்த்தி,விள்ளப்பா மேருவிலேயளைவாசிபோட்டுவிருதானவாலுயிகைலடுப்பிலேற்றி, கள்ளப்பாமுத்தீயுஞ்சாமமெட்டு கசகாமலெடுத்தாறியபின்னுடைத்துப்பாரே. ௱௫௨

பாரப்பாமுன்போலேபத்துத்தொந்தம் பரிவாகவெடுத்தெடுத்துப்பதனம்பண்ணி,சாரப்பாபணவெடைதானெய்தேனிற்றான் சார்வாகமண்டலங்கால்கொண்டாயானால், சேரப்பாசூலைபதினெட்டுந்தீரும்திறமானகிரந்திபுண்புளைகள்தீரும், வேரப்பாமேலூற லஸ்திரணமெல்லாம்வெவ்வேறாய்த் தீருமடாவின்னங்கேளே. ௱௫௩

## காரியச்செந்தூரம்.

கேள்ப்பாகாரீயச் செந்தூரந்தான் கெடியானகாரீயம்பலந்தானலு,நாளப்பாபழச்சாற்றி லுருக்கிச்சாய்த்து நலமானல்லெண்ணெய்கோமயத்திலேழு தாளப்பாகோசலத்திற்கொள்ளுச்சாற்றில்தளமான காடியிலேயுருக்கிச்சாய்து, ஆளப்பாவகையொன்றுக்கேழுதரஞ்சாய்த்து அப்பனேபலநாற்சட்டியிலேவையேய். ௱௫௪

வைத்தப்பாரசமது கால்தான்கூட்டி வயமாகவுருக்கையிலாவா ரைப்பஞ்சாங்கம், தைத்ததிலேசுறுக்கியேபிடித்துக்கொண்டு தளமா கப்போட்டதிலேவறுப்பாயப்பா, சாத்ததிலேகாற்சாமம்வறுத்தாயா ஞல் நல்மானசெந்தூர மருணன்போலாம், பைத்திலேசெந்தூரமெடு த்துக்கொணடு பத்தியமாய்ச்சீசாவிற் பதமாமே. ௧௫௫

ஆமப்பாகாற்சாமவருத்துபோட்டு அப்பனேகாற்சாமம் சும்மா ய்வழுத்து, தமப்பாசெந்தூர மெடுத்துக்கொண்டு தள்மானதேனெ ய்யில் பணந்தானுண்ணப், போமப்பாபிரமியநோய் பெரும்பாடெல் லாம் பொல்லாதகிரிச்சனங்கள் போகுஞ்சொன்னேன்காமப்பாகிரிழி வுகடலேபுக்கும் கலங்காதேகல்லடைப்பு தெறிக்கும்பாரே. ௧௫௬

## பூரணச்சந்திரோதயம்.

பாரப்பாபூரணச்சந்திரோதயயென்றால் பழச்சுமடாவியாதியெ லாஞ்சொல்லக்கேளும், தாரப்பாரசமிரண்டுசிலேயரைக்கால்தவருமல் வெதசுறுக்காய் ரேக்கதுவும்பலந்தானென்று, காரப்பாசரக்கெல்லா ங்கல்வத்திட்டு கசகாமற்பொடித்துமன மொன்றுபட்டே. ௧௫௭

ஒன்றப்பாவரைப்புக்குச்சாறுகேளு உத்தமனேபழச்சாற்றிற்செ ம்பரத்தப்பூபோட்டு, கன்றப்பாவெளுத்திலே நாள்தான்சென்றால் க லங்காதேபிழிந்தெறிந்துமருந்தில்விட்டு, வின்றப்பாசாமமேயிருபதா கும் வேளாதபொற்கையானிருபத்தொன்றும்,சென்றப்பாவரைக்கை யிலேதுருசுகுருகேளு திறமாகபணவெடைதான் கூடப்போடே.

போட்டப்பாரவியுலர்த்திப் பொடிதான்செய்துபுகழாகமேருவி லேயரைவாசிபோட்டு, காட்டப்பாசிலேயோரேழுசெய்துகனமானவா லுகையிலடுப்பிலேற்றி, நீட்டப்பாதீபமோரெட்டுச்சாமம் நிலேயான கமலவன்னி யெட்டுச்சாமம், ஆட்டப்பாகாடாகதினியாறுசாமம்அப்ப னேசலாகையிட்டுக் கிண்டிப்பாரே. ௧௫௯

பாரப்பாசலாகைமுகங் கறுப்புகண்டால்பக்குவமென்றேதீயை யாற்றிப்போட்டு, சேரப்பாபூரணச்சந்திரனேப்போலே திறமாகக்காந் தியதாயிருக்கும்பாரு, வாரப்பாவடைத்தெடுத்துபலமேதூக்கி வகை யாகப்பொடிசெய்துகஸ்தூரிதூளு, ஆரப்பாகழஞ்சியொன்று கூடப் போடு அப்பனேகோரோசினேதான் கழஞ்சியாமே. ௧௬௰

ஆமப்பாகூடவிட்டுப் பொடிதான்செய்து அப்பனேபரணிதனி லடைத்துக்கொண்டு, சோமப்பாபணவிடைதான் தேனிற்கொள்ளதி